பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2035 மார்கழி 06 செவ்வாய்க்கிழமை (21.12.2004) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் 25

# அரசின் போக்கைக் கண்டித்து நேற்று சாவகச்சேரியில் மனித சங்கிலிப் போர்

## கொளுத்தும் வெய்யிலின் மத்தியில் கைகோர்த்து மக்கள் கோஷம்

சமாதான வழிமுறைகளைப் புறந்தள்ளி விட்டு, யுத்தத்தை ஆரம்பிப்பதற்கான செயற்பாடுகளில் அரசு ஈடுபடுவதைக் கண்டித்தும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும் என்பதை வற்புறுத்தி நேற்று யாழ்ப்பாணம், சாவகச்சேரி நகரப்பகுதியில் மனித சங்கிலிப் போராட்டம் இடம்பெற்றது.





தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் இந்தப் போராட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது. காலை 10 மணி முதல் சுமார் ஒரு மணித்தியாலம் போராட்டம் இடம்பெற்றது.

தென்மராட்சியின் பல பகுதிகளிலிருந்தும் வருகைதந்த மக்கள், சாவகச்சேரிச் சந்தியில் அமைந்துள்ள பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைமையகத்தில் இருந்து அஞ்சல் அலுவலகம் வரை ஏ-9வீதியின் இருமருங்கிலும், கொளுத்தும் வெய்யிலுக்கும் மத்தியில் கைகளைக்கோர்த்தவாறு நின்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரனின் உருவப்படங்களையும் சமாதான முயற்சிகளை ஆரம்பிக்க வேண்டிய அவசியத்தை வெளிப்படுத்தும் சுலோக அட்டைகளையும் அவர்கள் தாங்கியிருந்தனர். "எமது நிலம் எமக்கு வேண்டும்", "எமது தேசியத் தலைவர் பிரபாகரனே" என்ற கோஷங்களையும் எழுப்பினர்.

மனித சங்கிலிப் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் ஊர்வலமாகச் சாவகச்சேரி பஸ் நிலையத்திற்கு வந்ததும், அங்கு எழுச்சிக் கூட்டம் இடம்பெற்றது. தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் எஸ். அருந்தவபாலன் தலைமையில் இடம்பெற்ற

(16 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்குப் புதிய நிகழ்ச்சி நிரல் புலிகளுக்கு அரசு அனுப்பியது!

## மதியுரைஞர் பாலசிங்கத்துக்கு நேற்று எரிக் சொல்ஹெய்ம் மூலம் தெரிவிப்பு

லண்டன்,டிசெம்பர்21

**இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காண்பதற்கான சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்குப் புதிய நிகழ்ச்சிநிரல் ஒன்றை இலங்கை அரசுத் தரப்பு முன் வைத்திருக்கின்றது.**

**நோர்வே அனுசரணையாளர் குழுவின் பிரதிநிதிகளான எரிக் சொல்ஹெய்மும், கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் நேற்று அதனை விடுதலைப் புலி களின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்திடம் நேரில் தெரிவித்தனர்.**

நோர்வேத் தரப்பு மூலம் தெரியப்படுத்தப்பட்ட புதிய நிகழ்ச்சி நிரல் அடங்கிய யோசனைத் திட்டத்தை விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்குத் தாம் தெரியப்படுத்துவார் என்றும் -

புலிகளின் தலைமை அதனைப் பரிசீலித்து அதுகுறித்து ஒரு முடிவை எடுக்கும்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.ஆர்.எல்.எவ். பெயரைப் பயன்படுத்தாதீர்! வரதர் குழுவிற்கு எழுத்து மூலம் அறிவுறுத்தல்

### கட்சியின் செயலாளர் நாயகம் சுரேஷ் சார்பில் தெரிவிப்பு

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எவ்வின்) சட்ட ரீதியான செயலாளராக க.சுரேஷ் பிரேமச்சந்திரனும், அதன் மத்திய கமிட்டியின் உறுப்பினர்களான பன்னிருவரும் நீதிமன்றத்தினாலும், தேர்தல் ஆணையாளராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர். எனவே, செயலாளர் நாயகத்தினுடைய அல்லது மத்திய கமிட்டியினுடைய அனுமதியின்றி கட்சியினுடைய பெயரை விளம்பரப் பலகையிலோ அல்லது வேறு எவ்விதமாகவோ பயன்படுத்துவது நீதிமன்றத்தை அவமதிப்பது போலாகும். எனவே, அப்படிச் செய்வதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

இப்படி வரதர் குழுவின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளரிடமும், அக்குழுவின் ஏனைய உறுப்பினர்களிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பியை செயலாளர் நாயகமாகக் கொண்டு இயங்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் அ.உதயகுமார் (ரமேஷ்) இது தொடர்பாக சம்பந்தப்பட்டோருக்கு எழுத்துமூலம் கடி

(16 ஆம் பக்கம் பார்க்க)

## எஸ்.பிக்கு ஆதரவான பேரணியில் இ.தொ.கா.

கண்டி,டிசெ.21

சிறைத்தண்டனை அனுபவித்து வரும் எஸ்.பி.திஸநாயக்கவை விடுதலை செய்யும் பொருட்டு ஐ.தே.கட்சியினால் இன்று நடத்தப்பட இருக்கும் பொதுக்கூட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் கலந்துகொள்ளும் எனத் தோட்ட உட்கட்டமைப்பு கால்நடை அபிவிருத்தி அமைச்சர் முத்துசிவலிங்கம் தெரிவித்தார்.

இதுதொடர்பாகச் செய்தியாளர் அவரிடம் பிரஸ்தாபித்தவேளையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக இருந்த காலஞ்சென்ற ஏ.அமிர்தலிங்கம், இலங்கையின் பிரதமராகத் திகழ்ந்த

(16 ஆம் பக்கம் பார்க்க)

# தலைநகர் கொழும்பில் ஐ.தே.க. பேரணி இன்று!

### ஏட்டிக்குப் போட்டியாக அரசுத் தரப்பும் கூட்டம்

கொழும்பு,டிசெ. 21

சிறையில் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் எஸ்.பி.திஸநாயக்கவை விடுவிக்கக் கோரி அக்கட்சி இன்று கொழும்பில் நடத்தும் பேரணியிலும் பிரார்த்தனைப் பாதயாத்திரையிலும் லட்சக் கணக்கானோர் திரளுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேசமயம், ஏட்டிக்குப் போட்டியாக இன்று கொழும்பு விகாரமாதேவி பூங்காப் பகுதியில் பட்டதாரி இளைஞர்களை ஆயிரக்கணக்கில் ஒன்று திரட்டி கூட்டம் ஒன்றை நடத்துவதற்கு அரசுத் தரப்பில் முஸ்தீபுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று அறிய வருகின்றது.

"எமது இன்றைய அமைதிப் பேரணியையும் பிரார்த்தனைப் பாதயாத்திரையையும் குழப்பியடிக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. ஏட்டிக்குப் போட்டியாக கூட்டங்களை நடத்தவும் அரசு திட்டமிட்டுள்ளது. அமைதி வழிப்போராட்டத்தைக் குழப்பி, அதனால் ஏற்படும் அனர்த்தங்களை எதிர்க்கட்சியினர் மீது போடுவதே அரசின் சதித்திட்டம்" - என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டுகின்றது.

அரசின் இந்தப் போக்கினால் ஏற்படக்கூடிய விபரீதங்களுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும் எனவும் அக்கட்சி தெரிவித்திருக்கிறது.

நேற்றுக்காலை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஐ.தே.க. உதவிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இவ்வாறு தகவல் வெளியிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

எஸ்.பி. திஸநாயக்கவின் விடுதலைக்காகவும் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகவும் இன்று நடத்தப்படும் பிரார்த்தனைப் பாதயாத்திரையிலும் அமைதிப் பேரணியிலும் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல லட்சம் பேர் கலந்துகொள்கின்றனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டிலிருந்து கிழக்கிற்கு வெள்ள நிவாரணப் பொருள்கள்

## உதவிக்கரம் நீட்டுமாறு குடாநாட்டு மக்களுக்கு அழைப்பு!

யாழ்ப்பாணம்,டிசெ.21

கிழக்கில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கென யாழ்.மாவட்டத்திலிருந்து மனிதாபிமான அடிப்படை உதவிப் பொருள்கள் எடுத்துச் செல்லப்படவிருக்கின்றன.

இதற்கென குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பொதுமக்களிடமிருந்தும் பொது அமைப்புக்களிடமிருந்தும் பழுதடையாத உணவுப் பொருள்கள், பால்மா வகைகள், மருந்து வகைகள், சிறுவர்களுக்கான புதிய உடைகள் என்பன சேகரிக்கப்படவிருக்கின்றன.

யாழ்.மாவட்ட அரசியல்துறையினரின் அனுசரணையுடன் பொது அமைப்புக்களும் பொதுமக்களும் இணைந்து இந்த நடவடிக்கைகளில் ஈடுபடவிருக்கின்றனர். இந்தப் பணிகளை நெறிப்படுத்துவதற்கென 9 பேர் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கின்றது.

"கிழக்கின் வெள்ள அனர்த்தத்துக்கு வடக்கு

(16 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மீண்டும் யுத்தம் திணிக்கப்படுமாயின் அதனை ஏற்பதற்குத் தமிழர்கள் தயார்

## மனித சங்கிலிப் போராட்டத்தில் ரவிராஜ் எம்.பி. சூளுரை

யாழ்ப்பாணம்,டிசெ.21

தமிழ் மக்கள்மீது மீண்டும் ஒரு யுத்தம் திணிக்கப்படுமானால் அதனை ஏற்றுக்கொள்ள எமது மக்களும் தயாராகவுள்ளனர்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ்.

தென்மராட்சி பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று சாவகச்சேரி நகரில் இடம்பெற்ற மனித சங்கிலிப் போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ரவிராஜ் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமக்கு சமாதானம் வேண்டும். எம்மீது மீண்டும் ஒரு யுத்தத்தினைத் திணிக்கக் கூடாது. அரசிற்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் எமது மக்களுக்கான இயல்பு வாழ்க்கை தோற்றிவிக்கப்படவில்லை. அதியுயர்பாதுகாப்பு வலயங்களினால எமது மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். இந்த உண்மையான நிதர்சனத்தை வெளிக்காட்டும் ஒரு நிகழ்வாகவும் -

இலங்கை அரசு இந்த யுத்ததிணிப்பை உடனடியாக நிறுத்தி, தமிழ்மக்கள் நீட்டியுள்ள சமாதான நேசக்கரத்தைப் பற்றிப்பிடித்து, சமாதான முயற்சிகளைத் தொடரவேண்டும் என்ற கோரிக்கையுடனும் -

நாம் முதல் கட்டமாகத் தென்மராட்சிப் பிரதேசத்தின் சாவகச்சேரி நகரில் இந்த அமைதிப் பேரணியை நடத்தியுள்ளோம்.

யுத்தத்தின் கொடுமைகளைத் தமிழ்மக்கள நன்குணர்ந்தவர்கள். ஆனால், மீண்டும் ஒரு யுத்தம் எம் மீது திணிக்கப்பட்டால் அதனை நாம் எதிர்கொள்வதற்கும் தயாராக இருக்கின்றோம் என்ற செய்தியை சிங்களப் பேரினவாதிகள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனுடைய நேசக் கரத்தினை - சமாதானக்கரத்தினை - சிங்கள பேரினவாதம் பற்றி, இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையின் யோசனைகள் அடிப்படையில் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

தொடர்ச்சியாக சிங்களப் பேரினவாதிகள் யுத்தத்தைத் திணிக்கும் நடவடிக்கைகளில் தமது இராணுவக் கட்டமைப்புக்களைப் பலப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்மக்கள் நோக்கிய போராட்டம் நேர்மைக்கும் - அமைதிக்கும் - நியாயத்திற்குமாக நடத்திய போராட்டம் என்பதனைச் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும்.

சிங்களவர்கள எமது அடிப்படை உரிமைகளை ஒரு போதும் தரமாட்டார்கள் என்ற யதார்த்தத்தினைச் சர்வதேச உலகம் அறிந்து கொள்ள வேண்டும். எனவேதான் இந்தத் தருணத்தில் தமிழ்த் தேசியத்தை - தமிழ்த் தேசத்தை - ஆதரிக்கின்ற நிலைப்பாட்டினைச் சர்வதேச சமூகம் எடுக்கவேண்டும் என்று தமிழ் மக்களாகிய நாம் கோரி நிற்கின்றோம்.

இப்போது மேற்கொள்ளப்பட்ட போராட்டம் போன்று எதிர்காலங்களிலும் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும். இவை எமது தேசத்தின் ஒற்றுமையைப் பலப்படுத்தி, தமிழினம் ஒற்றுமையாக ஓர் அணியிலே - தமிழீழ விடுதலைப் புலிகளுடைய இராணுவபலத்திற்கு வலுச் சேர்க்கும் நிலையில் - உள்ளது என்பதை வெளிக்காட்டுகின்ற போராட்டங்களாக மிளிரவேண்டும். இந்தப் போராட்டத்துக்கு ஜனநாயக வழியிலே நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் பங்களிப்புக்களைச் செய்யவேண்டும்.

தமிழ்த்தேசியத்திற்கான இந்தப் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். தமிழ்த் தேசியம் நிச்சயம் வெற்றி பெறும். தமிழர் தேசியம் தமிழின ஒற்றுமையால் வெல்லப்படவேணடும் - என்றார்.

**. சிவனேசன் எம்.பி உரை**

நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவனேசன் உரையாற்றும் போது தெரிவித்ததாவது:-

சர்வதேச சமூகம் பேரினவாத அரசிற்கு சமாதானப் பேச்சுக்களை தொடங்குவதற்கு வேண்டிய அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும்.

எமது மக்கள் துன்ப, துயரங்களில் இருந்து விடுபட்டு மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு ஏற்றவகையில் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை உடன் வழங்குவதற்கு உடனடியாகப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

அதனை நிறைவேற்றாது அரசு புறந்தள்ள நினைக்குமானால், எமது தமிழ் இனம் ஆயுதம் ஏந்திப் போராடுவதனைத் தவிர வேறு வழியில்லை என்பதனை இங்கு கூடியுள்ள அனைவரும் தெரியப்படுத்தியுள்ளீர்கள்.

எங்கெல்லாம் எமது இனத்தின் விடுதலைக்கான போராட்டங்கள் இடம்பெறுகின்றதோ அங்கெல்லாம் நாம் அனைவரும் அணிதிரண்டு எமது அழுத்தத்தினை ஸ்ரீலங்கா அரசிற்கும், சர்வதேச சமூகத்திற்கும் வெளிப்படுத்துவோம்.

எமது சமூகத்தை மீட்டெடுப்பதற்காக ஆயுதம் ஏந்திப் போராடும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டால், அதற்கும் தயாராக நாங்கள் உள்ளோம். தற்போது எமது நிலத்தின் 70 வீதமான பகுதி எமது கையிலேயே இருக்கின்றது. மிஞ்சிய மண்ணை மீட்பதற்கான போராட்டம் தான் எமது இறுதிப் போராட்டம்.

இவ்வளவு காலங்களாக நாம் பட்ட துன்ப, துயரங்களுக்கு சாத்வீக வழியில் தீர்வு கிடைக்கவில்லை என்றால் ஆயுத போராட்டத்தினூடாக எமது மண்ணை மீட்டு எமக்குரிய தனியரசினை அமைத்துக்கொள்வோம் என்ற செய்தியை சர்வதேசத்திற்குத் தெரியப்படுத்துகின்றோம் - என்றார்.

(எ-5-31-74-86-117)

# உதவும் நாடுகளுக்கான ஜே.வி.பியின் அறிக்கை சிறுபிள்ளைத்தனமானது; நகைப்புக்கிடமானது!

## நிலைமையை விளக்குகிறார் சுரேஷ் எம்.பி.

யாழ்ப்பாணம்,டிசெ.21

இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டுத்தலைமை விடுத்துள்ள அறிக்கை தொடர்பாக ஜே.வி.பியினர் வெளியிட்டுள்ள பதிலறிக்கை நகைப்புக்கிடமானதும் சிறுபிள்ளைத்தனமானதுமாகவே அமைந்துள்ளது.

எனவே, பேச்சை ஆரம்பிப்பதா இல்லையா என்று முடிவெடுக்க வேண்டிய பொறுப்பு ஜனாதிபதியிடமே உள்ளது.

- இவ்வாறு தமிழ்க் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பியினர் விடுத்துள்ள அறிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டுத்தலைமை பொறுப்பை கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகள் ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சுக்கள தொடர்பான மெத்தனப் போக்கிற்கு விசனம் தெரிவித்துள்ளதுடன் ஜே.வி.பியின் பேச்சுக்களுக்குக்கெதிரான, சமாதானத்திற்கெதிரான போக்கைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும்படியும அவர்கள் ஜனாதிபதியை வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கையின் யதார்த்தமான பிரச்சினைகளைப் புரிந்துகொண்டதன் வெளிப்பாடே இவர்கள் ஜனாதிபதியைச் சந்தித்ததும், அதனைத் தொடர்ந்து ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டதுமாகும். கூட்டறிக்கையானது ஜே.வி.பியின் நிலைப்பாட்டை பட்டவர்த்தனமாக வெளிச்சம் போட்டுக் காட்டி உள்ளது.

இந்நிலையில், ஜே.வியின் செயலாளர் வெளியிட்டுள்ள பதலறிக்கையானது, சிறுபிள்ளைத்தனமானதும், நகைப்புக்கிடமானதாகவும் உள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் தாங்கள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை என்ற வரைவின் அடிப்படையில் பேசலாம் என்றும் அந்த வரைவு தொடர்பாக அரசிற்கு இருக்கக்கூடிய கருத்துகளையும் பேச்சுக்குட்படுத்தலாம் எனவும் மீண்டும் மீண்டும் கூறிய பின்னரும், இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைகான யோனைகள் தனிநாட்டுக்கான முதல் படி எனக் கூறுவதும், அது தொடர்பாகப் பேசக் கூடாதென ஜனாதிபதியை வற்புறுத்துவதும் ஜே.வி.பி. பேச்சுக்களை விரும்பவில்லை என்பதையே காட்டுகின்றது.

ஜே.வி.யினருக்குத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் ஒரு விடயத்தை மிகத் தெளிவாகக் கூறியுள்ளோம். அதாவது, உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ்த் தேசியத்திற்கு, சமஷ்டி அரசியல் அமைப்புடன் கூடிய ஒரு சுயாட்சி அரசு உருவாக்கப்பட வேண்டும்.

இது தனிநாட்டில் இருந்து மிகப்பாரிய விட்டுக்கொடுப்புடன் நாம் கீழிறங்கி வந்துள்ளோம் என்பதை ஜே.வி.பி. புரியவேண்டும். ஆனால், சிங்களத் தீவிரவாதிகள் அன்று தந்தை செல்வநாயகம் அவர்கள் சமஷ்டி அரசமைப்பு முறையைக் கோரிய போதும், அது தனிநாட்டிற்கான முதற்படி என்றே கூறினார்கள்.

இன்றும் சிங்களத் தீவிரவாதிகளின் தொனியில் எந்தவித மாற்றமுமில்லை. அதே பல்லவியையே பாடுகின்றார்கள்.

தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் உண்டு. அதனைப் பேசித்தான் தீர்க்க வேண்டும் என்பதை ஜனாதிபதி, ஐ.தே.க. மற்றும் பல சிங்கள அமைப்புக்கள் ஏற்றுக்கொண்டுள்ளன.

அவை உண்மையாகவே இதனை ஏற்றுக் கொண்டால், இலங்கையை ஆட்சி செய்த அரசுகளின் தொடர்ச்சியான அடக்குமுறைகளே இப் பிரச்சினைகளுக்குக் காரணமென்பதையும் புரிந்து கொள்வார்கள்.

எனவே, அடக்குமுறைக்குட்பட்ட ஒரு தேசிய இனம் தமக்கான தீர்வைத் தாம்தான் முன்வைக்க வேண்டுமே தவிர, அடக்குமுறை அரசின அல்லது அதிலும்விட தீவிர சிங்கள இனவெறியர்களின் தீர்வுகளை நாம் ஏற்க வேண்டுமென்பதல்ல.

சிங்களப் பெருந்தேசிய வாதத்தால் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு அவர்களது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய முறையில் ஒரு தீர்வைத் தர முடியாதென்பதால் தான நாங்கள் தனிநாடு கோரினோம்.

இன்று இலங்கையினதும், சர்வதேச சமூகத்தினதும் கருத்தினை ஏற்று ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வொன்றைக்காணத் தமிழினம் தயாராக இருக்கின்றது என்பதைத் தமிழர் தரப்பு மிகத்தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.

அதன்பின்னரும் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை அடிப்படையில் பேசினால், அது தனிநாட்டிற்கு முதற்படியாகுமென ஜே.வி.பி. பேசினால் அது வெறும் குதர்க்கமான பேச்சாகவே இருக்கும்.

ஜே.வி.பியை பொறுத்தவரை அவர்கள் ஒரு சமஷ்டி அரசியல் அமைப்பு முறையைக் கூட ஏற்றுக்கொள்ளவில்லை என்பதே உண்மையாகும். இந்நிலையில், தாம் பேச்சுக்களுக்குக் கதவைத் திறந்துவைத்திருப்பதாகத் கூறுவது வெறும் வெற்றுப்பேச்சேயாகும்.

அது மாத்திரமல்ல, 1971 ஆம் ஆண்டிலும், 1987 - 90ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திலும் எத்தனை பாடசாலை மாணவர்கள், கல்விமான்கள், உத்தியோகத்தர்கள் ஏனைய அரசியல் கட்சித் தலைவர்கள், ஏனைய அரசியல் கட்சி உறுப்பினர்கள் ஜே.வியின் ஆயுதக்குழுக்களால் கொலை செய்யப்பட்டார்கள்.

1971 இல் சேகுவாராவாகவும், 1987 - 90 இல் சேதப்பிரேமிகளாவும் இவர்கள் செய்த கொலைகளை இவர்கள் சற்றுத் திரும்பிப் பார்த்தபின் இவர்கள் ஜனநாயகத்தைப் பற்றி பேசுவது நன்றாக இருக்கும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஜனநாயகத்திற்காகவும், மனித உரிமைக்காகவும், அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக் காகவுமே போராடுகின்றது.

எனவே, இன்றைய உடனடித் தேவை தமிழ் மக்களுக்குரித்தான தீர்வைக்காணும் முகமாகப் பேச்சுக்களா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு இன்று ஜனாதிபதியிடம் வந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4-204)

# வெள்ள அனர்த்தம் குறித்து ஆராய மட்டு.அம்பாறைக்கு பிரதமர் விஜயம்

மட்டக்களப்பு,டிசெ.21

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்கவேண்டிய நிவாரணப் பணிகள் குறித்து ஆராய்வதற்காக பிரதமா மஹிந்த ராஜபக்ஷ நேற்று இம்மாவட்டங்களுக்கான விஜயத்தை மேற்கொண்டார்.

இவருடன் அமைச்சர் பேரியல் அஷ்ரப் உட்பட நிவாரணப் பணிகளுடன் தொடர்புடைய அதிகாரிகளும் சென்றிருந்தார்கள்.

ஹெலிகொப்டர் மூலம் முதலில் அம்பாறைக்கு விஜயம் செய்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் ஹேரத் அபயவிக்கிரம தலைமையில் நடைபெற்ற உயர்மட்ட மாநாடொன்றில் கலந்துகொண்டார்.

இந்த மாநாட்டில் பிரதேச செயலாளர்களும கலந்துகொண்டு வெள்ளப் பாதிப்புகள் குறித்து விளக்கமளித்தனர்.

இம்மாவட்டத்தின் நிவாரணப் பணிகளுக்காக 17 மில்லியன் ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, குறித்த நிதியினை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் பிரதமரிடம் கோரினர். இதனை அடுத்து மேற்படி நிதியினை ஒதுக்கீடு செய்யுமாறு பிரதமர் திறைசேரி பணிப்பாளருக்கு உத்தரவிட்டார்.

அம்பாறை மாவட்டத்திற்கான விஜயத்தை முடித்துக் கொண்ட அவர், நேரடியாக அங்கிருந்து மட்டக்களப்பிற்குச் சென்றார்.

அங்கு 232 ஆவது இராணுவ படைப் பிரிவுத் தலைமையகத்தில் நிவாரணப் பணிகள் குறித்து அரச அதிபர் வே.சண்முகம் மற்றும் பிரதேச செயலாளர்களுடன் ஆராய்ந்தார்.

இதேவேளை - இருப்பினும் இந்த இரண்டு மாவட்டங்களிலும் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களையோ அல்லது பாதிககப்பட்ட மக்களையோ பிரதமர் சென்று பாாவையிடவில்லை என்று இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(எ-8)

# தரம் 7 பாடநூலில் தமிழர் வரலாறு தமிழ்ப் பேராசிரியர்களே காரணமாம்

## பாடநூல் வெளியீட்டுப் பிரிவு அதிகாரி குற்றச்சாட்டு

வலி.வடக்கு,டிசெ.21

கல்வி அமைச்சின், பாடசாலைகளுக்கான பாடநூல் வெளியீட்டுப பிரிவினரால் தமிழ் வரலாற்று நூல் தயாரிப்பதற்கு 7 வரலாற்று பேராசிரியர்களுக்கு பல தடவைகள் அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் அவர்கள் காட்டிய அசமந்தப்போக்கே ஆண்டு ஏழு தமிழ் வரலாற்று நூலில் தமிழர் வரலாறு இடம்பெறமுடியாமல் போனதற்குக் காரணமாகும்.

இவ்வாறு குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்திருக்கிறார் கல்வி அமைச்சின் பாடநூல் வெளியீட்டுப் பிரிவைச் சேர்ந்த உதவிக் கல்விப் பணிப்பாளர் நிகாத்.

ஆண்டு 7 மாணவர்களுக்கான வரலாறு நூல சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் யாழ்.இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கொழும்பில் இருந்து வருகை தந்த அலுவலர்கள் மற்றும் வடபகுதியைச் சேர்ந்த பாட இணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்நூலின் பெரும் பகுதியில் சிங்கள மன்னர்களுடைய வரலாறுகள் இடம்பெற்றுள்ளதுடன், தமிழ்மன்னனாகிய எல்லாளனுடைய ஒரு சிறிய பகுதி வரலாறே இடம்பெற்றது.

இதனை ஆட்சேபித்து கருத்தரங்கில் கலந்து கொண்ட ஆசிரியர்கள் தமது மனக்குமுறலை வெளியிட்ட போதே சம்பந்தப்பட்ட அதிகாரி இந்தத் திடுக்கிடும் தகவலை வெளியிட்டார்.

அடுத்தாண்டுகளில் எழுதப்படும் வரலாற்று நூல்களிலாவது தமிழர் பிரதேச வரலாறு முழுமையாக இடம்பெறத் தமிழ்ப் பேராசிரியர்கள் முன்வரவேண்டும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

(எ-86)

# ஓய்வூதியத் திகதி அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.21

ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவுத் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கொடுப்பனவுத் திகதிகள் வருமாறு:

ஜனவரி - 12, பெப்ரவரி -10, மார்ச் -10, ஏப்ரல் - 7, மே-12, ஜூன்-9, ஜூலை-12, ஓகஸ்ட் - 11, செப்ரெம்பர் - 8, ஒக்ரோபர்- 6, நவம்பர் - 10, டிசெம்பர் - 8

(எ-139-202)

# தன்மீதான வழக்கை எதிர்கொள்ள சதாம் ஹுசைன் தயாராகிவருகின்றார்

தன்மீது அமெரிக்காவும், ஈராக் இடைக்கால அரசும் சுமத்தியிருக்கும் ஒன்பதுக்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுக்களை வைத்து ஈராக் விசேட - சிறப்பு - நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருக்கும் வழக்கை சதாம் ஹுசைன சந்திக்கத் தயாராகி வருகிறார் எனத் தெரிகிறது.



முன்னதானத் தம்மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் மீதான விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க சதாம் ஹுசைன் மறுதிதிருந்தார். ஆனால், இப்போது அவருடைய நெருங்கிய அதிகாரிகள் மீதான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் வேளையில் தம் மீதான வழக்கையும் எதிர்கொள்ள சதாம் ஹுசைன் முன்வந்திருப்பதும் - தயாராகி வருவதும் - இவ்வழக்கிற்குக் கிடைத்த வெறறி எனக் கருதப்படுகிறது.

சதாம் ஹுசைன் தன் மீதான வழக்கு விசாரணைகளை அமெரிக்காவில் வைத்து எதிர்கொள்ளுமாறு பிரிட்டனைச் சேர்ந்த மனித உரிமைகள் தொடர்பான வழக்குகளை நடத்தி வரும் ஸ்டர் போர்டு ஸ்மித் ஆலோசனை வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்காவில் இந்த வழக்கை சதாம் ஹுசைன் எதிர்கொள்ளும் பட்சத்தில் அவருக்குத் தெரிந்திருக்கவேண்டிய சட்ட நடைமுறைகள் குறித்தும் ஸ்மித் ஆலோசனை கூறியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகவலை 'சண்டே ரைம்ஸ்' எனும் சர்வதேசப் பத்திரிகை செய்தியாக வெளியிட்டுள்ளது.

சதாம் ஹுசைன் மீதான விசாரணைகள் அடுத்த ஆண்டு ஆரம்பப் பகுதிகளில் எடுத்துக்கொள்ளப்படும் எனத் தெரிகிறது. ஈராக்கில் வழக்கு விசாரணைகள் நடைபெற்றால் தனக்கு நீதி கிடைக்காது என்றும் -

அமெரிக்காவில் இவ்வழக்கை விசாரித்தால் நீதியான ஒரு தீர்ப்பை எதிர்பார்க்க ஒரு வாய்ப்புள்ளது எனவும் - சதாம் ஹுசைன் எதிர்பார்க்கிறார் - கருதுகிறார் - என்றும் அப்பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

சதாம் ஹுசைன் ஒரு சர்வாதிகாரி; கொடுங்கோல் ஆட்சியாளர். பல அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று குவித்தவர். எனவே, இருவருக்கு மரணதண்டனையே வழங்கப்படவேண்டும் எனப் பலர் கூறிவருகின்றனர். தேர்தல் காலங்களின்போது சதாம் ஹுசைன் மற்றும் அவரது அதிகாரிகள் சிலர் மீது விசாரணைகளை முடுக்கியிருப்பது ஒரு தேர்தல் பிரசார நடவடிக்கை என்றே அவதானிகள் கூறுகின்றனர்.

இவ்வழக்கு விசாரணைகளில் சதாம் ஹுசைன் வாய் திறக்கும்போது பல விடயங்கள் வெளிச்சத்துக்கு வரலாம். வளைகுடா யுத்தத்தின்போது இடம்பெற்ற மறைமுகமானவைகள் - தெளிவற்ற சம்பவங்கள் - தெளிவாகலாம் என அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

சதாம் ஹுசைன் மீதான வழக்கு விசாரணைகள் நியாயமான முறையிலும் - நீதியாகவும்- நடைபெறவேண்டும் என சர்வதேச சமூகம் கேட்டுள்ளது.

(க-8)

## பாகிஸ்தான் ஜனாதிபதிக்கு எதிராக ராவல்பிண்டியில் ஆர்ப்பாட்டம்

ராவல்பிண்டி,டிசெ.21

பாகிஸ்தானில் இராணுவத் தளபதியாகத்தான் தொடர்ந்தும் இருப்பது என்ற ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பின் முடிவை ஆட்சேபித்து ராவல்பிண்டி நகரில் ஆயிரக்கணக்கானோர் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வலதுசாரி மதவாதக்கட்சிகளின் கூட்டமைப்பான எம்.எம்.ஏ. என்ற அமைப்பினாலேயே இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

முன்னதாக, இராணுவத் தளபதி பதவியில் இருந்துதான் விலகுவார் என்று முஷாரப் வாக்குறுதியொன்றை வழங்கியுள்ளார்.

# தார்பூர் தாக்குதல்களை நிறுத்த சூடானிய அரசு இணக்கம்

தார்பூர்,டிசெ.21

தார்பூர் பிராந்தியத்தில் தமது இராணுவ நடவடிக்கைகளை உடனடியாக இடைநிறுத்த சூடான் அரசு உடன்பட்டுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த சூடான் வெளிவிவகார அமைச்சர் முஸ்தபா உஸ்மான் "எதிர்த்தரப்பில் - கிளர்ச்சியாளர்கள் தரப்பில் - துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களோ தாக்குதல் சம்பவங்களோ நடத்தப்பட்டால் மாத்திரமே தமது துருப்பினர்கள் பதில் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. மாறாக, தானகவே முன்வந்து கிளர்ச்சியார்களின் நிலைகளின் மீது படையினர் தாக்குதல் நடத்தமாட்டார்" - என்று தெரிவித்தார்.

ஆனால், கிளர்ச்சியாளர்களிடம் இருந்து தாம் கைப்பற்றிய இடங்களிலிருந்து அரச துருப்புக்கள் பின்வாங்குவது என்ற கேள்விக்கே இடமில்லை என்றும் அவர் மேலும் சொன்னார்.

தார்பூரில் அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் புதிய வன்முறைச் சம்பவங்களை எவ்வாறு இடைநிறுத்துவது என்று ஆராயும் வகையில் சூடான் தலைநகர் கார்ட்டுமில் நேற்று முன்தினம் சர்வதேச சமூகப் பிரதிநிதிகள், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சூடான் நாட்டு அரசு ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டத்தின் பின்னரே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

தார்பூரில் சூடான் அரசுப்படையினர் தாக்குதல்களை நிறுத்திவிட்டனரா என்பதைத் தெளிவுபடுத்த ஆபிரிக்க ஒன்றியத்தின் அதிகாரிகள் தொடர்ந்தும் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஆனாலும், இருதரப்பினர்களுக்குமிடையிலும் தாக்குதல்கள் தொடர்ந்தும் இடம்பெறுவதாக ஆபிரிக்க அதிகாரிகளை மேற்கோள்காட்டி செய்தி ஒன்று வெளியாகியுள்ளது. (க-8)

# காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவுடன் சமரசம் செய்துகொள்ளாது பாகிஸ்தான்

இஸ்லாமாபாத்,டிசெ.21

காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தான் நிலைப்பாட்டுக்கு சர்வதேச நாடுகள் ஆதரவழித்து வருகின்றன. எனவே, இந்த விவகாரத்தில் இந்தியாவுடன் சமரசம் செய்துகொள்ளமாட்டோம் என பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அஸீஸ் கூறியுள்ளர்.

சீன சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு சனிக்கிழமை நாடு திரும்பும் போதே அவர் இவ்வாறு கூறினார் எனப் பாகிஸ்தானின் தினசரிச் செய்திப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன - என்று செய்திகள் வெளியிட்டுள்ளன.

பிரதமர் சௌகத் அஸீஸ் தெரிவித்தர் என பாகிஸ்தான் பத்திரிகைகள் தெரிவித்திருப்பதாவது:-

காஷ்மீர் விவகாரத்திற்கு அமைதியான முறையிலும் அர்த்தமுள்ள வகையிலும் தீவு காணப்படல் வேண்டும். இவற்றையே அண்மையில் இந்தியாவுக்குச் சென்றிருந்த நான் நாட்டுத் தலைவர்களிடம் தெளிவுபடுத்தியுள்ளேன். காஷ்மீர் விவகாரத்தைப் பொறுத்தவரை தனது நிலையை - நிலைப்பாட்டை - பாகிஸ்தான் விட்டுக்கொடுக்காது என்பது இந்தியத் தலைவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

எனது சீன சுற்றுப்பயணம் வெற்றி அடைந்துள்ளது. பாகிஸ்தானின் சாஸ்மா அணு மின் நிலையத்தில் இரண்டாவது அணு உலையை அடுத்த ஆண்டு ஆரம்பப்பகுதியில் அமைக்க சீனா ஒப்புக்கொண்டுள்ளது. அணுத் தொழில் நுட்ப இரகசியங்களை ஈரான், லிபியா மற்றும் வடகொரியாவுக்கு பாகிஸ்தான் அணு விஞ்ஞானி ஏ.கியூகான் வெளியிட்டது குறித்து சீனா கவலை தெரிவித்திருந்த போதிலும் அணு உலையை அமைப்பதற்கு ஒப்புக்கொண்டது - என்று சௌகத் அஸீஸ் தெரிவித்தார்.

(க-8)



சங்கரராமன் கொலை வழக்கில் தேடப்பட்டு வந்த முக்கிய சந்தேகநபரான அப்பு நேற்று முன்தினம் பொலீஸில் சரணடைந்தார். அவரைப் பொலீஸார் விசாரணைக்கு அழைத்துச் செல்லும்போது எடுக்கப்பட்ட படம்.

# பிரிட்டனில் மீண்டும் அடையாள அட்டை

லண்டன்,டிசெ.21

பிரிட்டனில் மீண்டும் அடையாள அட்டை முறையை அறிமுகப்படுத்தப்போவதாக பிரிட்டனின் உள்துறை அமைச்சர் சார்ள்ஸ் கிளார்க் தெரிவித்தார்.

பயங்கரவாதத்திற்கு எதிரான ஒரு நடவடிக்கையாகவே அடையாள அட்டை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்றும் அவர் சொன்னார். இந்தத்திட்டத்திற்கு ஆளும் தொழிற் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வாறாயினும் அடையாள அட்டைகளைக் கொண்டுசெல்வது மக்களுக்குப் பாரமாக இருப்பதாகவும் -

பாதுகாப்புக்கு இடையூறாகவிருக்கின்றது என்றும் - கூறப்படுவதைத் தன்னால் ஏற்றுக் கொள்ளமுடியாது என்று உள்துறை அமைச்சர் தெரிவித்தார். (க-8)

# நடிகர் ஜெமினி கணேசனின் உடல்நிலை கவலைக்கிடம்!

சென்னை,டிசெ.21

சென்னை அப்பலோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் காதல் மன்னன் ஜெமினி கணேசனின் உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

திடீரென அவரின் உடல்நிலை மோசமடைந்திருக்கிறது என்றும் -

தீவிர சிகிச்சைகளுக்கு நடிகர் ஜெமினி கணேசன் உட்படுத்தப்பட்டிருக்கின்றார் என்றும் - வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

89 வயதாகும் ஜெமினி கணேசன், இரத்தச் சோகை நோய் காரணமாக கடந்த 4 ஆம் திகதி சென்னை அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இரத்த மாற்றுச் சிகிசசையின் பின்னர் அவரின் உடல்நிலை தேறியது. வீட்டுக்குச் சென்றார்.

திடீரென மீண்டும் அவரது உடல்நிலை மோசமடையவே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சனிக்கிழமை இவருக்கு அறுவைச்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இவர் தற்போது மயக்கநிலையில் உள்ளார். கண்விழித்தால் மாத்திரமே உடல்நிலை குறித்துக் கூறமுடியுமென வைத்தியர்கள் கூறினர் என்று குடும்பத்தினர் தெரிவித்தனர்.

வாழ்க்கை திரைப்படம் மூலம் தமிழ்ச்சினிமா உலகில் கால்தடம் பதித்து பல வெற்றிப்படங்களைத் தந்தவர் காதல்மன்னன் ஜெமினி கணேசன்.

(க-8)

# சவூதியின் எண்ணெய்க் கிணறுகளை அழித்தொழிக்க ஒஸாமா அழைப்பு!

டுபாய்,டிசெ.21

சவூதி அரேபியாவிலுள்ள எண்ணெய்க் கிணறுகளைத் தாக்கி அழிக்குமாறு முஜாகிதீன்களுக்கு - போராளிகளுக்கு - அல் - கெய்டாத் தீவிரவாத இயக்கத்தின் தலைவர் ஒஸாமா பின்லேடன் அழைப்பு விடுத்துள்ளார்.

ஒஸாமாவின் மேற்கண்ட தகவலை இஸ்லாமிய இணையத்தளமொன்று வெளியிட்டிருக்கிறது.

உலகிலேயே அதிக அளவில் மசகு எண்ணெயை ஏற்றுமதி செய்யும் நாடு சவூதி அரேபியா. அந்நாடு தயாரிக்கும் மசகு எண்ணெய் சகோதர முஸ்லிம் நாடுகளுக்கு முழுமையாக விநியோகம் செய்யப்படுவதில்லை. எனவே, சவூதி அரேபியாவின் எண்ணெய்க் கிணறுகளைத் தாக்கி அழிககுமாறு தமது போராளிகளுக்கு ஒஸாமா பின்லேடன் அழைப்பு விடுத்திருக்கிறார் என்று இஸ்லாமிய இணையத்தளம் தகவல் வெளியிட்டிருக்கிறது.

இந்தப் பரபரப்புத் தகவல்களையடுத்து சவூதி அரேபியாவில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டு இருப்பதாகவும்-

எண்ணெய்க் கிண றுகளின் பாதுகாப்புக்கு என மேலதிக பாதுகாப்புப் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் - தெரிவிக்கப்படுகின்றது.

ஒஸாமா பின்லேடன் உரையாற்றினார், தகவல் வெளியிட்டுள்ளார் என்றும் அண்மையில் வெளியிடப்படும் தகவல்கள் உண்மையில் அவருடையதுதான் என்பதில் சந்தேகம் நிலவுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஒஸாமா பின்லேடன் பிறந்த நாடான சவூதி அரேபியாவிலேயே தாக்குதல் நடத்துமாறு போராளிகளுக்கு அவர் அழைப்பு விடுத்திருக்கின்றமை பெரும் சலனத்தை அந்நாட்டில் ஏற்படுத்தியிருக்கின்றது எனச் செய்தியாளர்கள தெரிவித்தனர். (க-8)

உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying
Head Office
No.500, Galle Road,
Wellawatte,
Colombo - 06.
Tel:2505632 - 3 Fax:2500626
Jaffna Office
No.86, PointPedro Road,
Jaffna. Tel.:021-2226242
Fax:021-2225600
Trinco Office
No.47, Kandy Road,
Trincomalee.
Tel.:026-2221519
Fax:026-2221519
Branch
No. 295, Jampettah Street,
Colombo-13 Tel.:2430782 Fax:2430782
கொழும்பு - யாழ். | யாழ். - கொழும்பு

நத்தார் நற்சிந்தனை
நம் கடவுளின் பரிவுள்ளத்தாலும்
இரக்கத்தாலும் விண்ணிலிருந்து விடியல்
நம்மைத் தேடி வருகிறது.
லூக் -1:79
செல்வா வோச் வேக்ஸ்
299, ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம்.
(C/39686)

# அடிப்படை வசதிகள் இன்றி அவலப்படும் வட்டு. இன்பச்சோலை கிராம மக்கள்

வலிகாமம் மேற்கு பகுதியில் வட்டு.தெற்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள இன்பச்சோலை கிராமம் அடிப்படை வசதிகள் எதுவு மறற - வளர்ச்சி குன்றிய - பின்தங்கிய நிலையில் உள்ள கிராமமாக விளங்கிவருவதனால் இங்கு வசிக்கின்ற மக்கள் அண்மைக்கால நாள்களாகப் பெய்த பருவகால மழை காரணமாகச் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இக



கிராமத்தில் 32 குடும்பங்களைச் சேர்ந்த 200 அங்கத்தவர்கள் வசித்து வருகின்றனர். போக்குவரத்துப் பாதை, வீட்டு வச்தி, மலசலகூட வசதி, குடிதண்ணீர் மற்றும் அன்றாட பாவிப்புக்கான கிணற்று வசதிகள் உட்பட பல அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்படாத, வளங்குன்றிய கிராமமாக விளங்குகின்றது.

**போக்குவரத்து வீதி**

இந்தக் கிராமத்திற்குத் தனியான போக்குவரத்துப் பாதைகள் அற்ற நிலையில் வெள்ளம் பாய்ந்து செல்லும் 15அடி வரை அகலமான குளத்துவாய்க்கால்களையே பயன்படுத்தி வருகின்றனர். அண்மைக்காலமாகப் பெய்து வரும் மழையினால் இக்கிராமத்திற்கான போக்குவரத்து கேள்விக்குறியாகியுள்ளது.

இக்கிராமத்தில் இருந்து 1.5 கிலோ மீற்றர் வரை சென்றே சீரான வீதியை அடையமுடியும். கர்ப்பிணிகள் முதல் நோயுற்ற நோயாளிகள் வரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முடியாத நிலை காணப்படுகிறது. சிறுவர்கள் பெருமழை தொடங்கியதும் பாடசாலை செல்வதைத் தவிர்த்து வருகின்றனர். பெருமளவு வெள்ளம் இப்பாதையால் அடித்துச் செல்லப்படுவதனால் பல தொற்று நோய் களுக்குக் கடந்த காலங்களில் இப்பகுதி மக்கள் இலக்காகியுள்ளனர்.

**வீட்டு வசதி**

இக்கிராமத்தில் உள்ள வீடுகளில் பெரும்பாலானவை களிமண்ணினாலும், ஓலைகளினாலும் அமைக்கபபட்ட குடிசைகள். கடந்த காலங்களில் மட்டும் இந்து கலாசார அமைச்சினால் ஏழு வீடுகள் அமைத்து வழங்கப்பட்டன. ஏனையவை குடிசைகளாகும்.

கிராமத்தைச் சுற்றி வெள்ளம் தேங்கி நிற்பதனால் குடிசைகளில் ஊறல் ஏற்பட்டு குடியிருக்க முடியாத நிலையும் நோயும் ஏற்படும். அத்துடன், குடிசைகள் சரிந்துவிடும் என்ற அச்ச உணர்வும் ஏற்படுவதால் சிலர் உறவினர் வீடுகளிலும் வசித்துவருகின்றனர்.

## செய்திக்கட்டுரை

**குடி தண்ணீர் மற்றும் கிணற்று வசதி**

குடிதண்ணீர் பிரச்சினை பெரும் பிரச்சினையாக உள்ளது. தண்ணீர் பெறுவதாயின் நீண்ட தூரத்தில் உள்ள குடிதண்ணீர் குழாயில் குறிப்பிட்ட நேரத்தில் மட்டுந்தான் பெறமுடியும் அல்லது ஐந்து கிலோ மீற்றர் தூரம் சென்றே குடிதண்ணீர் பெறவேண்டும். மழை காலத்தில் குடி தண்ணீர் குழாய்க்குச் செல்வது சிரமமானது.

ஏனைய தேவைகளுக்கு நீரைப் பெறுவதற்கு நான்கு கிணறுகள் மட்டுமே இக்கிராமத்தில் உண்டு. இரண்டுக்கு சுற்றிலும் கட்டு இல்லை. மழை காலத்தில் பாவிக்க முடியாதவாறு வெளளம் உள்ளே புகுந்துவிடும் இதனால், குளிப்பதறகுக்கூட நல்ல கிணறுகள் இல்லை. அன்றாடம் கூலித்தொழிலை மேற்கொண்டு பொழுதுசாயும் பொழுது வீடுதிரும்பும் இம்மக்கள் குளிப்பதற்கோ, வேறு தேவைகளுக்கோ கிணற்றைப் பாவிப்பதற்குக்கூட உரிய வசதியில்லை.

**மலசல கூடவசதி**

யுனிசெவ் நிறுவனத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட ஏழு மலசலகூடம் உட்பட ஒன்



பது மலசல கூடங்கள் மட்டுமே உண்டு. ஏனையவர்கள் வெளியே சென்று மலங்கழித்து வருவதனால் மழை காலத்தில் இப்பகுதிகளில் தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தமது அன்றாட உணவுத்தேவைகளைப் பூர்த்திசெய்வதற்குக் கூலித்தொழிலை மேற்கொண்டு ஜீவனோபாயத்தை மேற்கொள்ளும் குறைவருமானம்பெறும் குடும்பங்களைக் கொண்டுள்ள இக்கிராமம், கல்வியறிவு, முதல் அடிப்படைத் தேவைகள் அனைத்திலும் பின்தங்கிய நிலையில் உள்ளது.

"எமது குறைபாடுகள் தொடர்பாக உரியவர்

**நா.அகிலன்**
**வட்டுக்கோட்டைச் செய்தியாளர்**

களிடம் முறையிட்டோம். அதிகாரிகள் வந்தார்கள், விவரங்கள் சேகரித்தார்கள், நடவடிக்கை மேறகொள்ளப்படும் என ஆவலோடு எதிர்பார்தது நின்றோம். ஆனால் இந்நிகழ்வு தொடர்கதையாகிவிட்டது" என இப்பகுதி மக்கள் மனவருதத்துடன் தெரிவித்துள்ளனர்.

# நெடுந்தீவு கூட்டுறவுச் சங்கத்துக்கு இரு இழுவைப்படகுகள் கிடைத்தன

நல்லூர்,டிசெ.21

நெடுந்தீவு பல நோக்குக் கூ. சங்கத்துக்கு இரு இழுவைப்படகுகள் யாழ். அரச அதிபரால் வழங்கப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறைத் துறைமுகத்தில் இந்தப் படகுகள் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகன் மற்றும் கடற்படை அதிகாரியிடம் இருந்து நெடுந்தீவு பல நோ.கூ.சங்கத் தலைவர் எஸ்.கோபாலசிங்கம் இழுவைப் படகுகளைப் பெற்றுக்கொண்டார்.

சங்கத்தின் பொதுமுகாமையாளர் க.கோபாலபிள்ளை உட்பட கூட்டுறவாளர்கள் இந்தப் படகு கையளிப்பு நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நெடுந்தீவு பல நோ. கூ. சங்கத்தின் படகான சமுத்திராதேவி கையேற்கப்பட்ட இரண்டு படகுகளையும் நெடுந்தீவுக்குக் கொண்டு போய் சேர்த்தது.

இதேவேளை -

நயினாதீவு, அனலைதீவுப் பகுதிகளுக்கும் தலா ஒவ்வோர் இழுவைப் படகுகள் யாழ். அரச அதிபரால் வழங்கப்பட்டுள்ளன.

(எ-111)

நெடுந்தீவு மாவலித்துறையில் இழுவைப் படகுகள் தரித்து நிற்கும் காட்சி.

படகைப் பொறுப்பேற்ற கூட்டுறவுச் சங்கத் தலைவர் தலைமையிலான குழுவினர்.



(படங்கள்: நல்லூர் செய்தியாளர்).

# நுணாவிலில் நடந்த மருத்துவ முகாமில் நூற்றுக்கும் அதிகமானோர் பங்கேற்பு

தென்மராட்சி,டிசெ.21

வடக்கு - கிழக்கு மனிதாபிமானப் புனர்வாழ்வு சேவைகள் தனியார் நிறுவனமும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையும் சாவகச்சேரிக் கிளையும் இணைந்து கடந்த சனியன்று நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் இலவச மருத்துவ முகாமினை நடத்தின.

கண், காது, மூக்கு, தொண்டை ஆகிய பரிசோதனைகள் நடத்தப்பட்டு மருந்துகள் வழங்கப்பட்டன.

காது, மூக்கு, தொண்டை சிகிச்சையினை நிபுணர் டாக்டர் பெஞ்சமினும் கண் பரிசோதனையை யாழ். எஸ்.எம்.பெர்னாண்டோ நிறுவனத்தினரும் நடத்தினர்.

சிகிச்சை முகாமில் நூற்றுக்கு மேற்பட்ட நோயாளர்கள் கலந்துகொண்டு சிகிச்சை பெற்றனர்.

கண்பார்வையில் கோளாறு ஏற்பட்ட வறுமைக்கோட்டின்கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. (எ-117)

## வெள்ளத்தினால் மாதகலில் பயிரழிவு

வலி.தென்மேற்கு,டிசெ.21

மாதகல் பகுதியில் அண்மையில் ஏற்பட்ட மழை வெள்ளத்தினால் காலபோக நெற்செய்கையில் ஈடுபட்ட 112 விவசாயிகளின் நெற்செய்கை முற்றாக அழிந்துள்ளது என்றும் -

இந்த நெற்செய்கைக் காணிகளை நேரில் வந்து பார்வையிட்டு பயிரழிவுக்கான நஷ்டஈட்டைப் பெற்றுத்தருவதற்கு ஆவன செய்யுமாறு -

மாதகல் விவசாயிகள் சம்மேளன கீரிமலை கமநலசேவைநிலைய பெரும்பாக உத்தியோகத்தரைக் கடித மூலம் கேட்டுள்ளது. பாதிக்கப்பட்ட விவசாயிகள் சார்பில் விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவர் வி.சிற்றம்பலம் இக்கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார்.(எ-135)

## வணிகமாணி பரீட்சைப் பெறுபேறுகள் இன்று

யாழ்ப்பாணம்,டிசெ.21

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவினால் நடத்தப்பட்ட வணிகமாணி பகுதி IIஇற்கான பரீட்சை முடிவுகள் இன்று வெளியாகவுள்ளன.

பரீட்சைப் பெறுபேறுகளை வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவு விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் என உதவிப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சை கடந்த வருடம் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

(10-5)

## விளையாட்டு கழகங்களுக்கான கலந்துரையாடல்

கோண்டாவில்,டிசெ.21

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்த விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் 2005ஆம் ஆண்டு நடைபெற இருக்கும் விளையாட்டுப் போட்டிகள் தொடர்பாக கலந்துரையாடவிருப்பதால் கழகங்களின் தலைவர்,செயலாளர்களைச் சமுகமளிக்குமாறு தெல்லிப்பழை உதவிப் பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

(8-49)

## பொதுக்கூட்டங்களை நடத்துமாறு அறிவிப்பு

அச்சுவேலி,டிசெ.21

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தொகுதிவாரியான கிளைகள் யாவும் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் முடிவதற்கு முன்னர் வருடாந்த பொதுக்கூட்டத்தை நடத்திப் புதிய நிர்வாகிகள் தெரிவுகளை பூர்த்திசெய்ய வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்தில் இதுதொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

(10-11)

## விவசாயிகளுக்கு மூன்று நாள் பயிற்சி

வலி.தென்மேற்கு,டிசெ.21

மாதகல் விவசாயிகள் சம்மேளனத்தின் உறுப்பினர்களுக்கான மூன்று நாள் விவசாயப் பயிற்சி வகுப்பு பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்க மாதகல் கிளையின் கட்டடத்தில் கடந்த வாரம் நடத்தப்பட்டது.

இப்பயிற்சியின்போது நெற்பயிர்களைத் தாக்கும் நோய்களைக் கட்டுப்படுத்தல், உரம் போடுதல், மிளகாய் செய்கைக்கான நாற்று மேடை போடுதல், மரக்கறி நாற்று மேடை போடுதல், வெங்காயச்செய்கை, கிருமிநாசினிகளை பயன்படுத்தும் முறை ஆகியவை தொடர்பான பயிற்சிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

கீரிமலை கமநல சேவை நிலைய விவசாய போதனாசிரியர், திருநெல்வேலி விவசாய பயிற்சி நிலைய பாடவிதான உத்தியோகத்தர் ஆகியோர் இப்பயிற்சிகளை வழங்கினார்கள்.

இப்பயிற்சியில் கலந்துகொண்ட 47 விவசாயிகளுக்கும் எலும்பிச்சை மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

(எ-135)

## ஊர்காவற்றுறையில் கிணறுகளுக்கு குளோரின் இடும்பணி

ஊர்காவற்துறை,டிசெ.21

தொடர்ச்சியாகப் பெய்த மழைகாரணமாக எங்கும் வெள்ளம் தேங்கி நிற்பதால் பொது மக்களுக்குத் தொற்றுநோய்கள் ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் கிணறுகளுக்கு குளோரின் இடும்பணி நடைபெற்றுவருகிறது.

ஊர்காவற்றுறை, நாரந்தனை, காரைநகர் எழுவைதீவு, அனலைதீவு உப அலுவலக ரீதியாக இந்தப் பணிநடைபெற்றுவருகிறது.

பிரதேச சபையின் ஊழியர்கள் வீடு வீடாகச் சென்று கிணறுகளுக்குக் குளோரின் இட்டு வருவதுடன், பொது இடங்களில் உள்ள கிணறுகளுக்கும் குளோரின் இட்டு வருகின்றனர்.

(எ-16)

## கணனியியல் நூல்கள் அன்பளிப்பு

தென்மராட்சி,டிசெ.21

தென்மராட்சி பிரதேச நூல் நிலையங்களுக்கு கணனியியல் நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

நுணாவில் கிழக்கு சர்வசாதன சனசமூக நிலையத்தில் வைத்து இந்நூல்கள், பாடசாலைகள், உள்ளூராட்சிச் சபைகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டன.

கொழும்பு றொபேட் நிறுவனத்தினர் இந்த நூல்களை அன்பளிப்பாக வழங்கியிருந்தனர்.

நிலையத் தலைவர் க.மோனராஜலிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

(எ-117)

உதயன்

## சர்வதேச ரீதியில் ஆய்வுக்கு உள்ளாகும் தீர்ப்பு

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய அமைப்பாளருமான எஸ்.பி.திஸநாயக்கவுக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்கும், அது தொடர்பாக எஸ்.பி.திஸநாயக்கவுக்கு இரண்டு வருடக் கடுழியச் சிறைத் தண்டனை விதித்து உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பும் ஏற்படுத்திய அதிர்ச்சி அலைகள் ஓயவில்லை; சர்ச்சைகள் அடங்கவில்லை. மாறாக நிலைமை மேலும் மேலும் கனதியாக மாறி வருகின்றது.

எஸ்.பி.திஸநாயக்க வழக்கில் நீதி நிலைநாட்டப்படுவதற்கு ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழு என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றது?, இலங்கையில் பிரசைகளுக்கு நீதியான விசாரணை, கருத்து வெளிப்பாட்டுக்கான சுதந்திரம் ஆகியவை கிடைக்கவும் அங்கு நாடாளுமன்ற ஜனநாயகத்தை நிலைநாட்டவும் ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழு என்ன செய்யப்போகின்றது? என்ற கேள்விகள் ஐரோப்பிய ஒன்றிய அங்கத்தவர்களால் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில் எழுத்துமூலம் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த நாடாளுமன்றத்திலும் எஸ்.பி.திஸநாயக்க தொடர்பான இலங்கையின் நீதிமன்ற நடவடிக்கைகள் விவாதப் பொருளாகப் போகின்றன.

இதேசமயம் எஸ்.பி.திஸநாயக்க விடயத்தில் நீதிமன்றம் நடந்துகொண்ட விதத்தையும், தீர்ப்பையும் ஆட்சேபித்து சர்வதேச நீதிமன்றம், சர்வதேச மன்னிப்புச் சபை, ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றிடமும் முறையிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தகவல்.

எனவே, இந்த விவகாரத்தை இந்தச் சர்வதேச அமைப்புகளும் விசாரிக்கப் போகின்றன.

தவிரவும், ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்றத்தினால் ஏகமனதாக வழங்கப்பட்ட மேற்படி தீர்ப்புக்கு எதிராக மீளாய்வு மனு ஒன்றைத் தாக்கல் செய்யவும் முஸ்தீபுகள் நடக்கின்றன என்று தகவல். அத்தகைய மீளாய்வு மனு ஒன்று விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டால் ஐந்துக்கும் அதிகமானோரை - குறைந்தது ஏழு நீதியரசர்களைக் கொண்ட - உயர்நீதிமன்ற ஆயமே (Bench) அதை விசாரணை செய்யமுடியும்.

எனினும், மூலத் தீர்ப்பை மீளாய்வு செய்யும் ஆயத்தில் மூலத் தீர்ப்பை வழங்கிய நீதியரசர்கள் அமர்ந்திருப்பது பொருத்தமற்றது. அது சட்ட முறைமைகளுக்கு ஏற்புடையதன்று. அதாவது ஒருவர் வழங்கிய தீர்ப்பை அவரே மீளாய்வு செய்வது - அல்லது அது தொடர்பான மேன்முறையீட்டைக் கையாள்வது - எந்த வகையிலும் பொருத்தப்பாடானதாக இருக்காது.

எனவே, எஸ்.பி.திஸநாயக்கவுக்கு எதிரான மூலத் தீர்ப்பை வழங்கிய - பிரதம நீதியரசர் உட்பட்ட ஐந்து நீதியரசர்களைக் கொண்ட - ஆயத்தைத் தவிர்த்து, வேறு ஏழு நீதியரசர்கள் ஆயம் அந்த மீளாய்வு மனுவை விசாரிக்கவேண்டும். அப்படி முன்னைய ஐந்து பேரையும் தவிர்த்து - வேறு ஏழு நீதியரசர்களைக் கொண்ட - ஆயத்தை அமைப்பது இலங்கை உயர்நீதிமன்றத்தில் சாத்தியமா என்பது ஒரு கேள்வியே . உயர் நீதிமன்றை இயக் கும் சக்திகள் அத்தகைய ஆயத்தை அமைக்க இடம்கொடுக்குமா என்பது சந்தேகமே.

இந்தத் தடைகள், மட்டுப்பாடுகளை மீறி உயர் நீதிமன்றத்தில் மீளாய்வுக்கு இந்தத் தீர்ப்பு வந்தால் அங்கும் இத்தீர்ப்புப் பற்றிய விடயங்கள் பிய்த்து உதறப்படும் என எதிர்பார்க்கலாம்.

ஆக, இலங்கைத் தீவின் முக்கிய அரசியல் புள்ளி ஒருவருக்கு எதிராக வழங்கப்பட்ட - பலத்த சர்ச்சைக்கும் குழப்பத்துக்கும் உள்ளாகியுள்ள - உயர் நீதிமன்றத் தீர்ப்பு, சர்வதேச மட்டத்தில் ஐரோப்பிய நாடாளுமன்றம், சர்வதேச நீதிமன்றம், சர்வதேச மன்னிப்புச் சபை, ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் அரங்குகளிலும் மீளாய்வு மனு என்ற முறையில் இலங்கை உயர் நீதிமன்றத்திலும் அக்குவேறு, ஆணிவேறாகத் துருவித் துருவி ஆராயப்படும் அலசப்படும்.

"இலங்கைத் தீவின் காவல்துறையிலும் நீதித் துறையிலும் ஊழல் ஊடுருவிவிட்டது" - என்று முன்னர் பகிரங்கமாகக் குறை கூறிய இலங்கைத் தீவின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நேற்று முன்தினம் கண்டியில் புதிய நீதிமன்றக் கட்டட வளாகத்தைத் திறந்துவைத்து உரையாற்றிய போதும் அதே கூற்றை மீண்டும் உறுதிப்படுத்தினார்.

"என்னுடைய அந்தக் கூற்றுக்காகப் பலர் என் மீது குறை சொன்னார்கள். ஆனால், காவல்துறை மற்றும் நீதித்துறை குறித்து முன்னர் குறிப்பிட்ட அதே கருத்து நிலைப்பாட்டிலேயே நான் உள்ளேன்." - என்று கண்டியில் மீண்டும் அடித்துக் கூறியிருக்கின்றார் ஜனாதிபதி.

இலங்கைத் தீவின் நீதித்துறை தொடர்பாக அதன் ஜனாதிபதி வலியுறுத்தி வழங்கியுள்ள இந்த நற்(?) சான்றுப்பத்திரத்தின் பின்னணியில்தான் எஸ்.பி. திஸநாயக்கவுக்கு எதிரான குற்றத் தீர்ப்பு சர்வதேச அரங்குகளில் ஆராயப்படப் போகின்றது.

# யுத்தத்துக்கான முஸ்தீபுகளை உடன்நிறுத்தி சமாதானப் பேச்சை விரைவில் ஆரம்பியுங்கள்!

## தென்மராட்சி மக்கள் ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், டிசெ.21

யுத்தம் புரிவதற்கான முஸ்தீபுகளை உடன் நிறுத்தி இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையில் பேச்சுக்களை உடன் ஆரம்பியுங்கள்.

- இவ்வாறு தென்மராட்சி மக்களால் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ள மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஸ்ரீலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளின் தலைவருக்குமிடையில் யுத்த நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு மூன்று ஆண்டுகளாகின்றன. இவ்வுடன்படிக்கையானது நீண்டகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையைக் கட்டியெழுப்புவது. பேச்சுகளின் மூலம் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது என்பவற்றை மையமாகக் கொண்டு சர்வதேச அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டது என்பதைத் தாங்கள் அறிவீர்கள்.

மூன்று ஆண்டுகளாயும் தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் வாழுகின்ற மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பமுடியாது அலைந்து திரிகின்றனர். சொந்த நிலங்களில் விவசாயம் செய்யமுடியவில்லை. இராணுவக் கெடுபிடிகள் முன்னரைப் போலவே தொடருகின்றன. சமாதானப் பேச்சுகள் ஆரம்பிக்கப்படாமல் வேண்மென்றே காலங் கடத்தப்படுகின்றது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அரசு தமிழ் மக்களுக்கு எதிரான சகல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதனை மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர்.

அரசு யுத்தத்திற்கான சகல தயாரிப்புகளிலும் ஈடுபட்டு வருகின்றது. யுத்த விமானங்கள், கப்பல்கள், தளபாடங்கள் என்பவற்றைப் பெருக்குவதிலும் படைக்கு ஆள் திரட்டும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றது என்பதனை சர்வதேச மற்றும் உள்ளூர் இராணுவ ஆய்வாளர்கள் புள்ளிவிவரத்துடன் எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

மேலும் 2005ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் 7 ஆயிரம் கோடி ரூபாவிற்கு மேல் பாதுகாப்பிற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன், சிங்கள மக்களிடையே தமிழர் விரோதப் பரப்புரைகள் மிக மோசமாக முன்னெடுக்கப்படுகின்றன. ஜே.வி.பி., ஹெல உறுமயக் கட்சிகள் மட்டுமல்லாது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இந்த நடவடிக்கைகளில் முனைப்புடன் ஈடுபட்டு வருகிறது.

அதுமட்டுமல்ல, அரச ஊடகங்களும் தமிழ்மக்களுக்கும், அவர்களின் ஏக பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுக்கும் எதிரான செய்திகளைத் திட்டமிட்டுப் பரப்பி வருகின்றன. மறுபுறத்தில் தமிழ் மக்களின் அரசியல் பேரம்பேசும் பலத்தைக் குறைக்கும் நடவடிக்கைகளையும் தமிழ் விரோதக் குழுக்கள் கனகச்சிதமாக மேற்கொண்டு வருகின்றன.

தமிழ்த் தலைவர்கள், சிங்களத் தலைமைகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் அமுல்படுத்தப்படாமல் ரத்துச்செய்யப்பட்டு, தமிழ்த் தலைவர்களும் தமிழ் மக்களும் தொடர்ச்சியாக, சிங்களத் தலைமைகளினால் ஏமாற்றப்பட்ட வரலாற்றை நாம் அனைவரும் அறிவோம்.

அத்துடன், நின்றுவிடாமல் தமிழ் மக்கள் மீது இன வன்முறைகள் தொடர்ச்சியாகக் கட்டவிழ்த்துவிடப்பட்டு வகைதொகையாகக் கொன்றொழிக்கப்பட்ட வரலாற்றையும் நாம் அறிவோம். இந்நிலையில் தான் தமிழ்த் தேசியத்தைப் பாதுகாப்பதற்காகத் தமிழர் தாயகத்தில் ஓர் ஆயுதப் போராட்டம் வெடித்தது.

தமிழர்களாகிய நாம் யுத்தத்தை வெறுக்கின்றோம். அதேவேளை - எமது அரசியல் உரிமைகளைப் பெறுவதில் உறுதியாக உள்ளோம். சமாதான வழியிலே அவ்வுரிமைகளைப் பெறுவதற்கான பேச்சுக்களை நடத்துவதற்குத் தமிழினம் தயாராக இருக்கும் இவ்வேளையிலே மீண்டும் ஒரு யுத்தத்தைத் தமிழ் மக்கள் மீது திணிக்கும் ஸ்ரீலங்கா அரசின் நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எனவே, தமிழ் மக்களாகிய நாங்கள் இந்தத் தருணத்தில் ஸ்ரீலங்கா அரசுக்கும் - சர்வதேச சமூகத்திற்கும் கூறிக்கொள்ளும் செய்தி என்னவெனில், எங்கள் உரிமைகளைப் பெறுவதில் உறுதியாக இருக்கும் எம்மீது யுத்தம் ஒன்று திணிக்கப்படுமேயானால் தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் ஒன்றுபட்டு அதை எதிர்கொள்ளவும் தயாராக உள்ளோம் என்பதை இந்த மக்கள் எழுச்சிப் போராட்டத்தின் மூலம் எடுத்துக்காட்ட விரும்புகின்றோம்.

எனவே, இனியும் காலங்கடத்தாது இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை அடிப்படையில் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுகளை ஆரம்பித்துத் தமிழ் மக்களுக்கு இயல்பு வாழ்க்கையையும் சமாதானத்தையும் கொண்டுவருவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- என்றுள்ளது.

(8-5-31-74-86-117)

# இன வன்செயல்களால் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடுகள் வழங்குவதற்கு நடவடிக்கை

## ஜனாதிபதியின் செயலாளர் கருணாரத்ன தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.21

நாட்டில் ஏற்பட்ட இன வன்செயல்கள் காரணமாக 1981ஆம் ஆண்டு தொடக்கம் 1984 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்குள் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் டபிள்யூ.ஜே.எஸ்.கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

2001ஆம் ஆண்டில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இன வன்செயல்கள் பற்றிய மெய்யறியும் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பிக்க முடியாதுபோன - 1981ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து 1984ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரையான காலப் பகுதிகளில் இடம்பெற்ற இன வன்செயல்கள் காரணமாக பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து அல்லது அவர்களின் மரபுரிமையாளர்களிடமிருந்து இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த இழப்பீட்டுக்கான விண்ணப்பங்களை அடுத்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்னதாக செயலாளர், நிவாரணம் புனர்வாழ்வளிப்பு, நல்லிணக்க அமைச்சு, 177, காலி வீதி, கொழும்பு-7 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட காலத்தில் வன்செயல்களால் பாதிக்கப்பட்டுத் தற்போது வெளிநாடுகளில் வாழ்வோரும், அவர்களது மரபுரிமையாளர்களும் குறித்த தினத்துக்கு முன்னர் தபால் மூலமாகவோ, நேரடியாகவோ அல்லது வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகம் மூலமாகவோ விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாம் என ஜனாதிபதியின் செயலாளர் டபிள்யூ.ஜே.எஸ்.கருணாரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.

(10-86-173-204)

# ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ். கல்வி வலயத்தில் 422 பேர் சித்தி

அச்சுவேலி, டிசெ.21

இந்த ஆண்டில் நடைபெற்ற ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ். கல்வி வலயத்தில் 422 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர் என்று பதிவுகள் தெரிவிக்கின்றன.

யாழ். கல்வி வலயத்தின் நல்லூர்க் கோட்டத்தில் 230 மாணவர்களும் யாழ். கல்விக் கோட்டத்தில் 152 மாணவர்களும் கோப்பாய்க் கோட்டத்தில் 40 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்.

யாழ். கல்வி வலயத்தில் உள்ள 90 பாடசாலைகளில் இருந்தும் 3029 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். இவர்களிலேயே 422 மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

நல்லூர்க் கல்விக் கோட்டத்தில் அமைந்துள்ள யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் இருந்து 47 வீதமான (46.58) யாழ். கல்விக் கோட்டத்தில் அமைந்துள்ள யாழ்.ஜோன் பொஸ்கோ வித்தியாசாலையில் இருந்து 42 வீதமான (41.86), நல்லூர்க் கோட்டத்தில் யாழ். இந்து ஆரம்பப் பெண்கள் பாடசாலையில் இருந்து 36 வீதமான (36.00), கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் இருந்து 30 வீதமான (30.15) மாணவர்களும் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் 35 பாடசாலைகளில் இருந்து 880 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 40 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். 25 பாடசாலைகளில் எந்தவொரு மாணவர்களும் சித்தியடையவில்லை.

கோப்பாய்க் கல்விக் கோட்டத்தில் சித்தியடைந்த மாணவர்களின் வீதம் 04.54 ஆகும். மொத்த மாணவர்கள் எண்ணிக்கையில் யாழ். கல்வி வலயத்தில் சித்தியடைந்தவர்கள் 14 வீதமான மாணவர்கள் ஆகும். (10-11)

### நாளை

*மார்கழி 07*
*புதன்கிழமை*
*(22.12.2004)*
*திதி: ஏகாதசி*
*பிற்பகல் : 03.04*
*நட்சத்திரம் : பரணி*
*பின்னிரவு: 05.56*
*சுபநேரம்: 04.55 - 06.25*
*ராகுகாலம்: 12.25-02.55*
*(பழையநேரப்படி)*

# நீரோட்டத்தைத் தடைசெய்யாமல் பாலங்களைத் திருத்தி அமைக்கவும்

## கடற்றொழிலாளர்கள் வேண்டுகோள்

பொன்னாலையில் உள்ள 6ஆம், 4ஆம் பாலங்களைத் திருத்தியமைக்கும் போது நீரோட்டத்தைத் தடைசெய்யாமல் திருத்தியமைக்குமாறு பொன்னாலை, சுழிபுரம், தொல்புரம் பகுதி கடற்றொழிலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பொன்னாலைப் பாலங்கள் மிகுந்த சேதமடைந்துள்ளன. இந்தப் பாலங்களைத் திருத்தியமைப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

6ஆம், 4ஆம் பாலங்கள் ஊடாக நீரோட்டம் தடைசெய்யப்பட்டுத் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கோள்ளப்பட்டுள்ளதாக மீனவர்கள் கவலை தெரிவித்திருக்கின்றனர்.

நீரோட்டம் தடைசெய்யப்பட்டால் இறால் குஞ்சுகளின் உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்படும் என்றும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது விடயமாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு சுழிபுரம் கடற்றொழிலாளர்கள் வலி.மேற்கு பிரதேச செயலர் சீ.ஏ. மோகன்றாஸிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (10-175)

### உதயவாக்கு

சோம்பேறித்தனம் பாவங்களின் பெரிய பாவமாகும்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

"Kinlon - JL - 100" மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: B.சுரேஸ்குமார், பிளாக் றோட், சங்கானை. 077 - 6176476. (விலை ரூபா 60 ஆயிரம்). (39876)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், முதலாம் குறுக்குத்தெருவில் 130 இலக்கம் கொண்ட காணி பரப்பு 5உம் 3குளியும், யாழ்ப்பாணம் பிரதான வீதியில் 83ஆம் இலக்கம் கொண்ட காணி 3 பரப்பும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: த.தம்பித்துரை, முதலாம் ஒழுங்கை, உரும்பிராய் தெற்கு (சந்தி). T.P: 222 6919, 077-6589163. (39826)

மானிப்பாய் பொன்னாலை வீதியில் 5ஆம் கட்டையடியில் 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு காரியாலய நேரத்தில் 222 2413 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (39887)

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 15 SRI xxx தொடரிலக்கமுடைய Maroon நிற, MAZDA FAMILIA கார் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். T.P.: 0777 238288. (1986ஆம் ஆண்டுத் தயாரிப்பு). (39812)

எம்மிடம் TOYATA CARENA CAR 14 xxxx விற்பனைக்குண்டு. (கிறீம் கலர்) தொடர்பு: T.P.: 021 222 5623. (39890)

## அறை வாடகைக்கு

உரும்பிராய் சந்தி, முதலாம் ஒழுங்கையில் த.தம்பித்துரை என்பவரின் வீட்டில் எல்லா வசதிகளையும் கொண்ட அறை வாடகைக்கு உண்டு. தொடர்பு: T.P.: 222 - 6919, 077 - 6589163. (39827)

## சேவை

55,000 அமெரிக்க விசா லொததர் (Green Card) விண்ணப்பிக்க முடிவு திகதி டிசெம்பர் 31. தாமததைத் தவிர்க்க விண்ணப்பதாரர் மனைவி, பிள்ளைகள் சகலரதும் முழுப்பெயர்கள், பிறந்தநாள்கள், விலாசத்தையும் எழுதி, 2"x2" சகலரதும் போட்டோக்களுடனும் ரூபா 300/- மணியோடருடன் அனுப்பவும். தொடர்பு: PENGUIN BOOK SHOP, B2, F23, Bloemendhal Flats, Hotahena. T.P.: 077 3081764, 2438367. (C/39861)

## கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

தரமான Prima Broiler குஞ்சுகள் விற்பனைக்குண்டு. அத்துடன், வளர்ந்த பேட்டுக்குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (39830)

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம், கில்னர் ஒழுங்கையைச் சேர்ந்த சுப்பிரமணியம் பரமநாதன் என்பவருடைய மாநகரசபை ஜொப்கார்ட், மோட்டார் சைக்கிள் இன்சூரன்ஸ், ரக்ஸ் பத்திரம் என்பன கடந்த 12-12-2004 ஞாயிறன்று யாழ்ப்பாணத்தில் பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ்.மாநகரசபை அலுவலகத்தில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (39889)

மட்டக்களப்பைச் சேர்ந்த செ.ரிபுசுதன் என்பவருடைய தே.அ.அட்டை (851252681V) யாழ. நகரை அண்டிய பகுதியில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் 0777 251964 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (39892)

கந்தசாமி ஞானராஜேஸ்வரன் என்பவருடைய விசேட அடையாள அட்டை (0901034386) புங்குடுதீவிற்கும் யாழ்.நகரிற்கும் இடையில் 27-11-2004 அன்று தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் 287/25, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம் எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (39891)

## தமிழ்மக்களின் மீது கினிகத்தேனயில் கெடுபிடி

கினிகத்தேன நகரில் தமிழ்மக்கள் மீதான பொலீஸாரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன. இரவு ஏழு மணிக்கு மேல் நகரில் காணப்படும் தமிழர்களைப் பொலீஸார் கடுமையான விசாரணைக்கு உள்ளாக்குகினறனர். நகரை விட்டு உடனடியாக வெளியேறும்படியும் அவர்களை மிரட்டுகின்றனர்.

கொழும்பு, கண்டி, கம்பளை, ஹட்டன், நாவலப்பிட்டி ஆகிய நகரங்களுக்குச் செல்ல வேண்டிய பயணிகள் கினிகத்தேன சந்தியிலேயே பஸ் ஏற வேணடும்.

இது கினிகத்தேன பொலீஸாருக்கும் நன்கு தெரியும். எனினும், ஏழு மணிகு மேல் நகரில் எவரும் இருக்கக்கூடாது என அவர்கள் மிரட்டுவதால் பொதுமக்கள் பெரிதும் சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர் என முறைப்பாடு செய்யப்படுகின்றது. (க-4)

## சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவைக்கு ஆள்சேர்ப்பு

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ்.தெற்கு பிரதேசம் நடத்திவரும் சேவைக்கு பின்வருவோர் தேவைப்படுகின்றனர்.

I) நோயாளர் சேவையாளர்
II) திட்ட இணைப்பாளர் (Project Co - ordinator)
III)முதலுதவி இணைப்பாளர் (First Aid Co - ordinator)

இவர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் பற்றி நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை 26-12-2004 ஞாயிறு காலை 10.00 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் இயங்கும் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் காரியாலயத்தில் நடைபெறும். தெரிவுசெய்யப்படுவோர் தொண்டர் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

R.அசோகன்,
உதவி மாவட்ட ஆணையாளர்,
சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ், யாழ்ப்பாணம்.

(39893)(26-14-46)

## போட்டோ சொப் தெரிந்தவர்கள் தேவை

பிரபல கலர் ஆய்வுகூடம் ஒன்றிற்கு போட்டோ சொப் தெரிந்தவர்கள் தேவை. விண்ணப்பிப்பவர் சுயமாகப் படங்களைச் சீர்செய்து வடிவமைக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும். ஆரம்பகாலப் பயிற்சி அளிக்கப்படும். சுய விவரத்துடன் அடையாள அட்டையின் போட்டோப் பிரதியையும் இணைத்து 30-12-2004 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: (39888)(26-14-17)

விளம்பர இல. 2459,
மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்துரை செல்லம்மா (தங்கமுத்து)



கோப்பாய் மத்தி, நாவலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை செல்லம்மா (தங்கமுத்து) 16.12.2004 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் மாரிமுத்து - பார்வதியின் அன்பு மகளும் சிவகாமிப்பிள்ளை, அன்னப்பிள்ளை ஆகியோரின் பெறாமகளும் சின்னத்துரையின் அன்பு மனைவியும், காங்கேசன், இரத்தினமலர், செல்வராசா, கோணேஸ்வரி, அமரர் சிவராசா, அகிலாண்டேஸ்வரி (ஆஸ்திரேலியா), சிங்கராசா (பிரான்ஸ்), நவரட்ணராசா (கனடா), மகிழ்மலர் (கனடா), அமரர் குகதாசன் (கனடா), கனகராசா (கனடா), பாலகிருஷ்ணராசா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சாரதாதேவி (மன்மதசீலி), மோகனராஜா (பிரான்ஸ்), சிறீஸ்கந்தராஜா (பிரான்ஸ்), ரவீந்திரராஜா (கனடா), பிறேமளாதேவி (பிரான்ஸ்), சசிகலாதேவி (பிரான்ஸ்), சுதந்திராதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் அமரர் லோகநாதன், கலாரூபி (பிரான்ஸ்), புஸ்பராணி (பிரான்ஸ்), குகனேஸ்வரி (கனடா), சந்திரகாந்தன் (பிரான்ஸ்), சுவேந்திரன் (பிரான்ஸ்), ராஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மைதிலி, பாபுராஜ் (கனடா), ரகுராஜ் சர்மிலி, பிரான்ஸில் வசிப்பவர்களான கீர்த்தனா, சிபிராஜ், கபிராஜ், ஜெறோம், ஸ்ரெபனி, ஜெனீபர், ஆர்த்தி, அர்ச்சனா, வேணுகா, சுபிதா, சகிதன், கௌசிகன், கீர்த்திகன், ஸ்ரெலிபன், சபர்ணா, ஷாரா மற்றும் சேயோன் (கனடா), சிவநேசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கௌசிகன், கௌதமன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.12.2004) புதன் கிழமை பி.ப-2மணியளவில் நடைபெற்று, பூதவுடல் பின்னர் கோப்பாய் மயானத்தில் (கந்தன்காடு) தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.சின்னத்துரை (கணவர்).
'தேவி இல்லம்', நாவலடி, கோப்பாய் மத்தி. கோப்பாய். T.P.: 077 6146627.
(39881) (14-17-26)

இலங்கை வங்கியின்

சங்கானை வீரிவாக்கல் அலுவலகம்

இல. 39, பிரான்பத்து வீதி
சங்கானை என்ற முகவரியில்
2004 டிசெம்பர் 21ம் திகதி செவ்வாய்க்கிழமை
திறந்து வைக்கப்படும் என்பதை
வாடிக்கையாளர்களுக்கு
மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி

வாடிக்கையாளர் வசதி கருதி
இடமாற்றத்தை மகிழ்ச்சியுடன்
அறியத் தருகிறோம்...

இலங்கை வங்கியின்

சுன்னாகம் கிளை

இல. 146, கே. கே. எஸ் வீதி
சுன்னாகம்
என்ற முகவரியில்
2004 டிசெம்பர் மாதம் 21ம்
திகதியிலிருந்து இயங்கவுள்ளது

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி

# இலங்கை-இந்திய கூட்டுக் கடற்பயிற்சி தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடு

## திருமலைத் தமிழ்மக்கள் பேரவை கண்டனம்

கடந்த சில தினங்களாக ஸ்ரீலங்கா கடற்படையினரும், இந்தியக் கடற்படையினரும் கடலில் கூட்டாக பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இந்த நடவடிக்கை தமிழ் மக்களுக்கும், தமிழ் மக்களது போராட்டத்திற்கும் எதிரானதொரு செயற்பாடாகும்.

- இவ்வாறு குற்றஞ்சாட்டி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்திய மீனவர்கள் ஸ்ரீலங்கா கடற்பரப்புக்குள் பலாத்காரமாக நுழையும்போதும் அதனைத் தடுத்து நிறுத்தாமல் இருப்பதும், இந்திய மீனவர்களை ஸ்ரீலங்கா கடற்பரப்புக்குள் நுழைய விட்டுவிட்டு கண்டும் காணாததுபோல் இரு நாட்டுக் கடற்படையினரும் இருப்பதும் தமிழ் நாட்டிலுள்ள தமிழ் மீனவர்களையும் தமிழீழத்திலுள்ள மீனவர்களையும் மோதவைக்கின்ற செயற்பாட்டில் இருகடற்படையினரும் செயற்படுவதனையும் நாங்கள் அறிவோம்.

தமிழ் மக்களினது விடுதலைப் போராட்டத்திற்கு உறுதுணையாக இருந்த இந்திய அரசு, இன்று தமிழீழ மக்களுக்கெதிராகவே செயற்படுகின்றமையை மிகவும் வேதனையுடன் நோக்குகின்றோம். தமிழீழ மண்ணில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்று குவிககப்பட்டபோதும், குண்டு வீசப்பட்டபோதும் தமிழ் மககளின் வள்ளங்கள், மீன்பிடிப்படகுகள் ஸ்ரீலங்கா கடற்படையினரால் அழிக்கப்பட்டபோதும் மூச்சுக்கூட விடாத இந்திய அரசு இன்று ஸ்ரீலங்கா கடற்படையினருடன் கூட்டுக் கூத்துப் போடுவதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்திய அரசு இலங்கைத் தமிழ் மக்களினது உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்குரிய தார்மீகப் பொறுப்புமிக்கதாகும். இந்திய அரசு தமிழ் மக்களுக்கும், அவர்களது போராட்டத்திற்கும் உதவி செய்யாவிட்டாலும் இடைஞ்சல் செய்யக்கூடாதென வேண்டிக்கொள்கின்றோம்.

கேணல் கிட்டு உட்பட பன்னிரண்டு தமிழீழப் போராளிகள் இந்தியக் கடற்படையின் வஞ்சக வலைவிரிப்பினாலேயே குமுறும் கடற்பரப்பில் சங்கமித்தனர். இதனை இன்றும் நாம் நினைத்துப் பார்க்கின்றோம்.

இந்திய அரசுக்கு தமிழ் மக்கள்தான் உண்மையான நண்பர்களாக இருப்பார்களே தவிர ஸ்ரீலங்கா தேசம் அல்ல என்பதை இந்திய அரசு உணர்ந்து செயற்படவேண்டுமென வேண்டுவதுடன், அன்னை இந்திராகாந்தி தமிழீழ மக்கள் மீது வைத்திருந்த பற்றையும், பாசத்தையும் நினைவில் நிறுத்தி ஸ்ரீலங்கா அரசிற்கு இராணுவ ரீதியாக உதவுகின்ற அத்தனை செயற்பாடுகளையும் உடன் நிறுத்தவேண்டுமென வேண்டுகின்றோம்.

இந்திய அரசு இவ்வாறான கடற்படைக் கூட்டுப் பயிற்சிமூலம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், ஸ்ரீலங்கா இராணுவத்திற்குமிடையே உள்ள இராணுவச் சமநிலையை சீர்குலைப்பது சமாதான ஒப்பந்தத்தை நிச்சயமாக சிதறடிக்குமென எச்சரிக்கின்றோம். இபபழியை இந்திய அரசு சுமக்கக்கூடாதென தமிழீழ மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது.

(க-3)

## பண்டிகை வேளையில் விலைகள் குறையுமாம்!

புதுவருடம் மற்றும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை வெகுவாகக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்திருப்பதாக வர்த்தக, வாணிபத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே நேற்றுத் தெரிவித்தார். அமைச்சர் மேலும் கூறியதாவது:-

இந்தியாவிலிருந்து நாம் அரிசி இறக்குமதி செய்திருக்கின்றோம். அந்த அரிசி சந்தைக்குக் கூடிய விரைவில் வந்தவுடன் அரிசியின் விலை குறையும். அதேபோல் கிழங்கு மற்றும் வெங்காயம் என்பனவும் வந்தடையவுள்ளன. வந்துசேர்ந்தபின் கிழங்கு, வெங்காயத்தின் விலைகளும் வெகுவாகக் குறையும்.

அதேவேளை, தேவையான அரிசியை பர்மாவிலிருந்து இறக்குமதி செய்வது குறித்து ஆராயப்பட்டுவருகிறது. இதற்காக விசேட குழுவொன்று வெகுவிரைவில் பர்மாவிற்குச் செல்லவுள்ளது. அங்கிருந்தும் அரிசி இறக்குமதி செய்யப்பட்டவுடன் அரிசியின் விலை கணிசமான அளவு குறையும் - என்றார் அமைச்சர்.(எ-க)

# வறிய மாணவர்களுக்கு இலவச கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம்,டிசெ.21

வலி.கிழக்குப் பகுதி மாணவர்களுக்கான இலவச கணனிப் பயிற்சியினை சிறுப்பிட்டி சிற்றி இன்போமற்றிக் நிறுவனம் வழங்கவுள்ளது.

இப்பயிற்சிநெறியானது வறுமைக் கோட்டின் கீழ வாழும் மாணவர்களுக்கு முன்னுரிமையில் அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

இதில இணைந்து கொண்டு பயிற்சியினைப் பெற்றுக் கொள்ளவிரும்பும் மாணவர்கள் தமது கிராம சேவையாளரின் உறுதிப்படுத்தலுடன் சுயவிவரக் கோவை அடங்கிய விண்ணப்பத்துடன் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் 'சிற்றி இன்போமற்றிக் சென்ரர் சிறுப்பிட்டி வடக்கு நீர்வேலி' எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு நிறுவனத்தின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

வறுமைக்கோட்டின் கீழ்வாழும் - போரினால் பாதிக்கப்பட்ட - சிறுவர்களுடைய ஆளுமையினை விருத்தி செய்யக்கூடிய - உளவியல் ரீதியான வடிவமைக்கப்பட்ட - நான்கு மாத கணனிக் கற்கை நெறிகளும், தொழில் வாய்ப்பினைப் பெற்றுத் தரக்கூடிய கற்கைநெறிகளும் இப்பயிற்சி நெறியில் உள்ளடக்கப்படவுள்ளது.

(ஐ-13)

# நாட்டிலுள்ள போலி மருத்துவர்கள் சத்திர சிகிச்சையும் செய்கிறார்கள்

## அரச மருத்துவர் சங்கம் அதிர்ச்சி அறிக்கை

சாய்ந்தமருது,டிசெ.21

"நாட்டில் சுமார் 40 ஆயிரம் போலி மருத்துவர்கள் எதுவிதக்கட்டுப்பாடும், அச்சமும் இன்றி சுதந்திரமாக மருத்துவத் தொழிலைச் செய்துவருகிறார்கள். இவர்கள் அதிகமாக கிராமப்புறங்களில் அப்பாவி மக்களின் உயிரோடு விளையாடுகிறார்கள். இவர்களைக் கண்டுபிடித்து தண்டிப்பதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை" - இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள வருடாந்த அறிக்கையிலேயே இக்கவலை தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இப்போலி மருத்துவர்கள் வெறும் மருந்துகளை மட்டும் வழங்குவதோடு நிற்காமல் சத்திர சிகிச்சைகளையும் மேற்கொண்டு வருகிறார்கள். இதனால், பல உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகின்றன. இவர்கள் தமது மருத்துவத் தொழிலைப் பகிரங்கமாகச் செய்துவருகின்றனர்.

இப்போலி மருத்துவர்களுக்கு எதிராக சுகாதார அமைச்சு சட்டரீதியாக நடவடிக்கை, எடுத்து தண்டனை வழங்கவேண்டும். இவர்கள் பொதுமக்களுக்கு வைத்தியம் செய்வதைத தடைசெய்வதுடன் இவர்களால் நடத்தப்படும் தனியார் மருந்துச்சாலைகளுக்கான உரிமங்களையும் இரத்துச் செய்யவேண்டும்.

- இவ்வாறு மருத்துவ அதிகாரிகள் சங்கச் செயலாளர் டாக்டர் அநுருத்த பாதெனிய தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எமது நாட்டிற்கு ஆயிரத்து 900 வைத்திய நிபுணர்கள் தேவையாக இருந்தும் 700 பேர் மட்டுமே தற்போது சேவையில் உள்ளனர் என்றும் -

இலங்கை சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னர் வைத்திய நிபுணர்களின் எண்ணிக்கை 100 ஆல் மட்டுமே அதிகரித்துள்ளது என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-3)

## சச்சிதானந்த மகராஜின் பிறந்த நாள் விழா நாளை

யாழ்ப்பாணம்,டிசெ.21

இலங்கை திவ்ய ஜீவன சங்கத்தின் முன்னாள் தலைவரும் உலக யோக சமாசத்தின் ஸ்தாபகருமாகிய சுவாமி சச்சிதானந்தா மகராஜ் அவர்களின் 90ஆவது ஜெயந்திதினம் நாளை புதன் கிழமை ஆகும் .

இதனை முன்னிட்டு ஜெயந்தி தின விழாவும், சிவானந்த சிறுவர் சமயப் பாடசாலை ஆண்டுவிழாவும் நாளை காலை 9.30 மணி முதல் நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

யோகி சுவாமி பிரகாசமயானந்தா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிவானந்த சிறுவர் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

அன்றையதினம் சிவானந்த சிறுவர் சமயப் பாடசாலையில் புதிதாகச் சேரும் மாணவாகளுக்கு இலவச அனுமதி வழங்கப்படும்.

(ஐ)

# அரசு, நீதிமன்றங்கள், பொலீஸ் என்பன தமது கடமையைச் சரியாகச் செய்தாலே மக்களுக்குப் பயன்

## ஜனாதிபதி கண்டியில் உரை

கண்டி,டிசெ.20

"நாட்டில் சட்டதையும், ஒழுங்கையும் நடைமுறைப்படுததுவதில் அரசும், நீதிமன்றங்களும், பொலீஸ் பிரிவும் தமது கடமைகளைச் சரியாகச் செய்தால் மாத்திரமே நாட்டுமக்களும் அதன மூலம் பயனைப் பெறுவார்கள். நாட்டின தலைவி என்ற வகையில் இத்தகைய குறிக்கோளை முன்னெடுத்துச்செல்ல நான் பெருமுயற்சி எடுத்து வருகிறேன்.

இப்படிக் கூறினார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

கண்டி, விலியம் கொபல்லாப மாவத்தையில் 45 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படட புதியநீதிமன்ற வளாகக் கட்டடத் தொகுதியைக் கடந்த 19ஆம் திகதி திறந்து வைத்துப் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த வைபவத்தில் அவர் தொடர்ந்தும் பேசுகையில் கூறியதாவது:-

கண்டிப் பிரதேசத்தில் நிலவிவந்த நீதிமன்றத் தேவைகளின் குறை இன்று நிவர்த்திக்கப்பட்டு விட்டது. 10 ஆண்டுகளுக்கு முன்பே இதன் தேவைபற்றி நான் அறிந்திருந்தேன். சட்டத்தரணிகள் உட்படப் பலரும் இதன தேவையை அடிக்கடி சுட்டிக்காட்டி வந்தனர். இன்று அது நிறைவேற்றி இருக்கிறது. இந்தக் கடடடத் தொகுதி மூலம் நேர்மையான சேவை அனைவரையும் சென்றடைய வேண்டும்.

சட்டங்களை மதித்து நடக்கும் விழுமியங்கள் அனைவரையும் சார்ந்ததாகும். சட்டத்தரணிகள் இவற்றைத் தொழிலாக மேற்கொள்ளும் பொழுது தமது உழைப்பை மாத்திரம் கருத்திற கொள்ளாது சேவை மனப்பான்மையுடன் பணியாற்றவேண்டும்.

இன்று நீதிமன்றங்களில் இடம்பெறும் வழக்கு விசாரணைகள் பல வருடங்களாக இழுத்தடிக்கப்படுகின்றன. 10 வருடங்களாக இழுத்தடிக்கப்படும் இந்த விசாரணைகளை ஐந்து வருடங்களுக்குள் குறைதது மக்களுக்கு உதவுவதன் மூலம் பல நெருக்கடிகளில் இருந்து அவர்களை விடுவிக்க இயலும். இனறு குற்றச்செயல்கள் அதிகரிப்பதற்கு வழக்கு விசாரணைகள் இழுத்தடிக்கப்படுவதும் ஒரு காரணமாகும்.

நாட்டில் குற்றச்செயல்கள் படிப்படியாக அதிகரித்து வருவதைக் கட்டுப்படுத்த புதிய சட்டத்திருத்தங்களை நாம் கொண்டுவர இருக்கின்றோம். அடுத்த வாரத்தில் இந்தப் பிரேரணைகள் அமைச்சரவை முன் சமர்ப்பிக்கப்படும்.

நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டும் பொறுப்பு நீதிமன்றத்திற்கு உண்டு என்பதால் அதனோடு சம்பந்தப்பட்ட நடைமுறையை சீரான அமுல்படுத்துவதில் ஆர்வம் கூடுதலாகக் காட்டப்படவேண்டும்:

இதன் ஓர் அம்சமாகவே நீதிமன்ற நிர்வாகத்தை பரவலாக்கக் கருதினோம். இதன் பொருட்டு மாவட்ட அடிப்படையில் ஆலோசனைக் குழுக்களையும் அமைக்க எண்ணியுள்ளோம்.

அண்மையில் கொலையுண்ட மேல்நீதிமன்ற நீதிபதி, சட்டத்தையும் சேவையையும் நேர்மையாக ஆற்றியவர். அவர் கொல்லப்பட்ட சம்பவம் நாட்டு மக்கள் மத்தியில் பரவலாக தாக்கத்தையும் ஏற்படுத்தியது. இந்தக் கொடுமையைப் புரிந்தவர்களைச் சட்டத்தின் பிடியில் கொண்டுவர பொலீஸாருக்கு வழங்கப்பட்ட உத்வேகம் காரணமாக குற்றம் புரிந்தோர் கைதுசெய்யப்பட்டனர்.

நாட்டின் தலைவி என்ற வகையில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட பல முயற்சிகளை எடுத்துவருகின்றேன். சட்டத்தையும், அதன் ஊடாகச் சேவையையும் பேணுவதில் இத்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் அனைவரினதும் கவனம் அதிகரிக்கப்படவேண்டும்.

- இப்படி அவர் மேலும் தெரிவித்தர்

(க-3)

## சமுர்த்தி பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.21

சமுர்த்தி நலன்புரி சட்ட அமுலாககல் தொடர்பான பயிற்சி வகுப்பு நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி வகுப்பல் யாழ் பிரதேச செயலகத்திற்குட்பட்ட சமுர்த்தி அலுவலர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி முகாமையாளர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(3-6)



யாழ். சைவபரிபாலன சபையினர் ஏற்பாடு செய்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 125ஆவது குருபூசை தின நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. விழாவில் சைவபரிபாலன சபையின் தலைவர் சைவபுலவர் வ.கந்தசாமி தலைமையுரை நிகழ்த்துவதையும் நல்லை ஆதன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவதையும் முதல் இருபடங்களிலும் காணலாம். ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம், யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியை செல்வி புஸ்பா செல்வநாயகம் ஆகியோர் இரண்டாவது [illegible]த்தில் உள்ளனர். நாவலரின் குருபூசை தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் முதலாவது இடத்தைப்பெற்ற கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலய மாணவன் ஜெயராசா ஜெயமாருதி உரை நிகழ்த்துவதையும் போட்டியில் பங்குபற்றி வெற்றீட்டிய யூனியன் கல்லூரி மாணவன் யோ.சுதாகரன் தமக்குரிய பரிசில்களை பிரதம விருந்தினரான நல்லூர் கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி ச.காங்கேயனிடமிருந்து பெற்றுக்கொள்வதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.

(எ)

வர்த்தகப் பெருமக்களே!
ஆசிரிய பெருந்தகைகளே!
மாணவ மணிகளே!

எங்கள் 46ஆம் வருட நிறைவை முன்னிட்டு
**உன்னதமான மலிவு விற்பனை!**
புத்தகங்களுக்கு 20% தொடக்கம் 70% வரையும், உபகரணங்களுக்கு 10% கழிவும் வழங்கப்படும். இந்தியப் புத்தகங்களுக்கு 3 மடங்கும், 20% கழிவும் வழங்கப்படும்.

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
212, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(C/39699)(42-14-46-26)

உ
ஓம் ஸ்ரீராம ஜெயம்

**வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்**

## இறுவட்டு (CD) வெளியீடு

இயலிசை வாரிதி, கவிமாமணி, கலாரத்னா, கலாபூஷணம், முத்தமிழ்க் கலாநிதி, மஹாவித்துவான்
(அமரர்) பிரம்மஸ்ரீ **மா.த.ந.வீரமணி ஐயர் M.A. J.P.** அவர்கள்
இயற்றிய
"வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் கீர்த்தனைகள்"
இறுவட்டு (CD) 22.12.2004 புதன்கிழமை வைகுந்த ஏகாதசி தினம் காலை 7.00 மணிக்குத் தேவஸ்தான மண்டபத்தில் வெளியிடப்படும்.
தலைமை வகிப்பவர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
அனைவரும் வருக. பயன் பெறுக.

(சி-39812) (24-26-14-46)
ஆதீன மகாசபை.
வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில், யாழ்ப்பாணம்.

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
21 - 05 - 1944



விண்ணில்
19 - 12 - 1996

திருமதி
**இராசம்மா சுப்பிரமணியம்**

அன்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளி விளக்காய்
திகழ்ந்த அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் பல சென்றாலும் உங்கள் நினைவு
எம் நெஞ்சை விட்டு அகலாது அம்மா!

வேலகாடு,
உடுப்பிட்டி வடக்கு,
வல்வெட்டித்துறை.
(39783)(39-14-26-46)
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 'சிசு உதான' விருது வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம்,டிசெ.21

'சிசு உதான' சாதனையாளர்களுக்கான தேசிய விருதுவழங்கும் வைபவம் எதிர்வரும் 29 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பிற்பகல் 4.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், சிறப்பு விருந்தினராக கலாநிதி சரத் அமுனுகமவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த விருது வழங்கும் நிகழ்வில் யாழ். மாவட்டத்தில் இருந்து 5 சாதனையாளர்கள் கலந்துகொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (203-190)

## யாகப்பர் ஆலய ஒளிவிழா

குருநகர்,டிசெ.21

குருநகர் புனித யாகப்பர் ஆலய ஒளிவிழா எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 6.30 மணிக்கு யாகப்பர் ஆலய முன்றிலில் வண. பிதா ஆர்.எச்.சகாயநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கான பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்குவதற்கு அன்பளிப்புச்செய்ய விரும்புவோர் அப்பியாசப் புத்தகங்களை வழங்குமாறு வண.பிதா ஆர்.எச்.சகாயநாயகம் அடிகளார் அன்பளிப்பாளர்களுக்குத் தெரிவித்துள்ளார். (ஜ-203-51)

## கட்டடவேலையில் ஈடுபட்டவர் தவறிவிழுந்து படுகாயமுற்றார்

யாழ்ப்பாணம்,டிசெ.21

திருநெல்வேலிப் பகுதியில் கட்டட வேலையில் ஈடுபட்டிருந்த ஒருவர் தவறிவிழுந்து படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஆனைக்கோட்டை, மூத்தவிநாயகர் கோயிலடியைச் சேர்ந்த முகுந்தராசா துஷ்யந்தன் (வயது-24) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (5-12)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் கிராமசேவகர் படுகாயம்

யாழ்ப்பாணம்,டிசெ.21

மருதனார்மடம் சந்தியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் விபத்துக்குள்ளான சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு 7மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மல்லாகம் வடக்கு கிராமசேவகர் கனகசுந்தரம் கலியுகவரதன் (வயது-54) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் கால்முறிந்த நிலையில் நேற்றிரவு யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ப-5-12)

## 'சங்கநாதம்' சிறப்பிதழ்

யாழ்ப்பாணம்,டிசெ.21

'சங்கநாதம்' சிறப்பிதழ் வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை காலை 10.30 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுளளது.

பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் சி.தங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், முதன்மை விருந்தினராக பேராசிரியர் சு.மோகனதாஸும் சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் கலந்துகொள்வர்.

இந்நிகழ்வில் வெளியீட்டுரையினை முதன்மை வருந்தினர் பேராசிரியர் சு.மோகனதாஸும் விமர்சன உரையினை பேராசிரியர் ச.வி.பரமேஸ்வரன், பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோரும் நிகழ்த்துவர்.

தொடர்ந்து இச்சிறப்பிதழின் முதற்பிரதியை நாடாளுமன்ற உறுப்பினரான செ.கஜேந்திரன் பெற்றுக்கொள்வார். (ப-203)

## எழுதுநர் பயிற்சி நெறிக்கான வேண்டுகை

பின்வரும் தகைமையுடைய ஆண்/பெண் இருபாலாரிடமும் எழுதுநர் பயிற்சிநெறிக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**
01. கல்வித்தகைமை:
☆ க.பொ.த. சாதாரண தரத்தில் தமிழ், கணித பாடங்கள் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்தவராக இருத்தல்வேண்டும். அல்லது
☆ க.பொ.த. சாதாரண தரத்தில் தமிழ், கணித பாடங்களில் சித்தியடைந்தவராகவும் க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

**அகவை:** 18 தொடக்கம் 25 வரை.

**குறிப்பு:**
1. விண்ணப்ப முடிவு நாள்: 31.12.2004
2. விண்ணப்பதாரருக்கான நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள் 12.01.2005 அன்று காலை 9.00 மணிக்கு.
3. நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம்: போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு, நடுவப்பணியகம், கிளிநொச்சி (கிளி/மகாவித்தியாலயம் அருகில்).
4. நேர்முகத் தேர்வுக்கு வருகைதருபவர் தங்கள் கல்வித் தகைமைச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, பிற தகைமைச் சான்றிதழ், குடும்பப்பதிவு அட்டை என்பனவற்றுடன் வருகைதருதல் வேண்டும்.
5. பயிற்சக்காலத்தில் தங்குமிட வசதி வழங்கபபடுவதுடன், உதவு தொகையாக மாதம் ஒன்றுக்கு 4000 ரூபா வீதம் வழங்கப்படும்.
6. இப்பயிற்சிக் காலம் 06 மாதகாலத்திற்கு வழங்கப்படும்.
7. பயிற்சி முடிவின் பின்னர் அவர்களின் தகைமைக்கேற்பப் பணியமர்த்தப்படும்.

❀ நேர்முகத்தேர்வு கடிதம் கிடைத்தவர்களும் கிடைக்கப் பெறாதவர்களும் நேர்முகத்தேர்வுக்குக் குறித்த நாளில், குறித்த நேரத்தில், குறித்த இடத்திற்கு வருகை தருதல்வேண்டும்.

**விண்ணப்பப்படிவத்தின் மாதிரி**
01. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :
02. பிறந்த ஆண்டு/மாதம்/திகதி :
03. தேசிய அடையாள அட்டை இல./பால் :
04. விண்ணப்பதாரியின் முகவரி :
05. க.பொ.த. சாதாரண தகைமைகள் :
06. க.பொ.த. உயர்தர தகைமைகள் :
07. பிறகல்வித் தகைமைகள் :
08. குடும்ப விவரம் :

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
**மேலாளர், திட்டமிடல் பகுதி, நடுவப்பணியகம், போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு, கிளிநொச்சி.**

(C/39863)(12-14-26-17)

## நினைவலையில் மூன்றாண்டுகள்

அன்னையின் மடியில்
15 - 06 - 1935



ஆண்டவன் அடியில்
21 - 12 - 2001

அமரர் **மரியாம்பிள்ளை வைற்றஸ்**
(முன்னாள் தபால் அதிபர், தாளையடி)
திதி: 21.12.2004

ஆலயங்கள் வேண்டி எம்மை ஆளாக்கி
ஆறாத் துயரில் எம்மை ஆழ்த்தி
மீளாத்துயில் கொண்டு மூன்றாண்டுகள் ஓடிடினும்
எம் மனதை விட்டகலாமல் வாழும் ஐயாவே!
பலகோடி பிறவிகளெடுத்தாலும்
பாரினில் தங்கள் மடியில் தவழ்வேன்
என்றும் பரமனிடம் ஆத்ம சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (21.12.2004) செவ்வாய்க்கிழமை தாளையடி அர்ச் அந்தோனியார் ஆலயம், பாஷையூர் அர்ச் அந்தோனியார் ஆலயம், போயிட்டி இளவாலை அர்ச் லூர்து அன்னை ஆலயம் ஆகியவற்றில் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

போயிட்டி,
இளவாலை.
(39720)(39-26-14-46)
சுவீஸ்
மகன், மருமகள், பேரப்பிள்ளை.

## பண்டிகைக் கால பரிசு மழை!

அதிர்ஷ்ட சீட்டிழுப்பு
500 grams GOLD

● முதலாம் பரிசு - 50 கிராம் கோல்ட் பார்
மற்றும் 20 கிராம், 10 கிராம், 4 கிராம் பரிசுகள் 70 அதிர்ஷ்டசாலிகளுக்கு

வெளிநாடுகளில் இருக்கும் உங்கள் அன்புக் குரியவர்களிடம் இருந்து வெஸ்டர்ன் யூனியன் பணப் பரிமாற்றத்தின் மூலம் பணத்தை இலங்கையின் அங்கிகாரம் பெற்ற MMBL உபமுகவர்கள் ஊடாக பெற்று பரிசுகளை வெல்லுங்கள்!

விபரங்களுக்கு MMBL முகவரை தொடர்பு கொள்ளுங்கள் 011 2372 333

ரூபாய் 250,000ற்கு மேல் காசு பெறும் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியான பரிசுகள்.

WESTERN UNION
பணப் பரிமாற்றம்
• நிபந்தனைகள் பிரயோகிக்கப்படும்
• இச் சலுகை டிசம்பர் 2004, ஜனவரி 2005 மாதங்களில் பணப் பரிமாற்றம் செய்பவர்களுக்கு மட்டும்!

AUTHORISED AGENT
MMBL
Money Transfer (Pvt) Ltd.
300, Galle Road, Colombo 3.
(வெளிநாட்டு நாணயம் மாற்று முகவர்)
● அநேகமான இடங்கள் 365 நாட்களும் திறந்திருக்கும்

FLEX Graphic Lisence No. C/130/2004

# ஆசிரியர் பற்றாக்குறையே ஆங்கில பாடப் பெறுபேறு வீழ்ச்சிக்குக் காரணம்

உலகளாவிய ரீதியில் எல்லாத்துறைகளிலும் முக்கியம் பெற்றுவரும் பாடத்துறையாக ஆங்கில பாடம் அமைகிறது. ஒருவர் கல்வி அறிவுடையவராகவும், துறைசார் நிபுணராக மாற்றம் பெறவும் உலகச் செய்நெறிகளை உடனுக்குடன் அறிந்து அவற்றுக்கேற்ப இசைந்து செல்லவும், புதிய விடயங்களை உள்வாங்கிக் கொள்ளவும், தொடர்புகளைக் கட்டியெழுப்பிக் கொள்ளவும், சமூகத்தின் முழுப்பரிமாண அமைப்பும் உயர்நிலை பெற்றுக்கொள்ளவும், கல்வியில் உயர்நிலையிலான தரத்தை அளவீடு செய்வதிலும் ஆங்கில மொழிசார் புலமைத்துவம் அவசியமாகிறது.

சமகாலத்தில் ஏற்பட்ட நவீன விஞ்ஞான விருத்தியின் விளைவினால் ஆங்கில மொழியின் அவசியத்தன்மை மேலும் ஒரு படிநிலை வளர்ச்சியில் முக்கியமாகிறது. கற்ற கல்விக்கேற்ற வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கும், வேறு நாட்டில் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கும், உயர் கல்விச் செயற்பாட்டினை முன்னெடுப்பதற்கும், புதிய சிந்தனையை விருத்தி செய்வதற்கும், தகவல்களையும் உயர் சிந்தனை உருவாக்கத்தையும் தன்மயப் படுத்திக் கொள்வதற்கும் ஆங்கில மொழிப் புலமை அடிப் படையாகின்றது.

### ஆங்கில மொழியும் அமுலாக்கமும்

இலங்கையில் ஆங்கில மொழியின் அமுலாக்கம் 1942இற்கு முன்னர் அதிகளவில் ஆங்கிலமொழி மூலமான கல்விமுறையாலே இடம் பெற்று வந்தது. இதற்கு காலணித்துவ ஆட்சியின் செல்வாக்கு முக்கிய காரணியாக அமைந்து பின்னர் சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கரா அவர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட சுயமொழிக் கல்வித் திட்டம் இற்றைவரை நடைமுறையில் இருந்து வருவதைக் காணலாம்.

சமகாலத்தில் உலகியல் சார் முன்னேற்றத்துக்கு ஏற்ப எமது நாட்டையும் ஈடுகொடுக்கச் செய்யும் வகையிலும், அபிவிருத்தி நோக்கிய செயற்பாட்டில் ஒரு வடிவமாக ஆங்கில மொழிசார் புலமையை மேம்படுத்தல் என்ற செயல்நடைமுறை அரச மற்றும் அரசசார்பற்ற செயற்பாடுகளில் முக்கியப்படுத்தப்பட்டு வருவதைக் காணமுடிகிறது. கல்வித்திட்ட அமைப்பில் ஆங்கில மொழியின் விருத்தி செயற்பாடு ஆரம்பக்கல்வி முதல் உயர்கல்வி வரைபடிமுறை விருத்தியில் நன்கு திட்டமிடப் பட்டு கற்பிக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

எதிர்காலத்தில் கல்வித்திட்ட அமுலாக்கம் அதிகளவில் ஆங்கிலமொழி மூலமானதாகவே அமைவதற்கான நோக்குடன் தற்கால செயற்பாடுகள் மாணவர்கள், ஆசிரியர்களை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்படுவதையும் சுட்டிக்காட்ட முடியும்.

### ஆங்கில பாடப் புலம்சார் இடர்பாடுகள்

இலங்கையைப் பொறுத்தமட்டில் ஆங்கில மொழிசார் விருத்தி மட்டத்தில் குறைந்த தர நிலையிலேயே உள்ளதைக் காணமுடிகிறது. இதற்கு கல்வித் திட்டத்தில் காணப்படும் ஆங்கில மொழிசார் அமுலாக்கத்தில் ஏற்படும் பின்னடைவுகள் என்றே பலமட்டத்தாலும் குறை கூறப்படுகின்றது. அந்தவகையில் கல்வித் திட்டத்தில் காணப்படும் மொழிசார் பின்னடைவுகளும், ஆங்கில ஆசிரியரின் ஆங்கில புலமை சார் காரணிகளும் மிகவும் முக்கியமான காரணியாக அமைகின்றது.

பின்வரும் பிரச்சினைகள் அதிகளவில் ஆங்கில மொழிசார் விருத்தியில் பின்னடைவு நிலை ஏற்படக் காரணமாகின்றன.

★ சுதேச மொழிசார் உணர்வு நிலையிலான மனப்பாங்கு, மக்கள் தமது மொழியை விட்டு வேறு மொழியை கற்பதில் நாட்டம் குறைவாக உள்ளமை.

★ மாணவனின் சூழல் தொடர்புகள் ஆங்கில மொழியில் இடம்பெற சந்தர்ப்பம் குறைவாகக் காணப்படுதல்.

★ ஆங்கில மொழிசார் பாடத்திட்ட அமைப்பு பிள்ளையின் கற்றல் சூழலுடன் பொருத்தமில்லாத தன்மையை கொண்டுள்ளமையும் அதனால் கற்றவற்றை பிரயோகிக்கமுடியாத சூழல் நிலை காணப்படுகின்றது.

★ ஆங்கில பாடத்தைப் போதிப்பதற்கான ஆசிரியவள ஆளணியினர் பெரும் பிரச்சினையாக நாடளாவிய ரீதியில் காணப்படுகின்றது. இதனால், ஆங்கில பாடமே ஒருதடவையும் பாடசாலைகளில் கற்பிக்காத சந்தர்ப்பங்கள் நிகழ்கின்றன.

★ ஆங்கிலப் பாட ஆசிரியரின் அறிவு நிலை மட்டமும், உச்சரிப்புத் தன்மையும் ஆங்கில மொழியைக் கற்பித்தலில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதனால், பிள்ளையின் அறிவியல் விருத்தியிலும் குறைவான தன்மையே ஏற்பட சந்தர்ப்பமளிக்கின்றது.

★ ஆசிரியரின் மொழிசார் வாண்மைத்துவ செயற்பாடுகளில் காணப்படும் குறைபாடுகள் ஆங்கிலமொழி வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

★ பொதுவாக எல்லோர் மத்தியிலும் ஆங்கிலமொழி மிகவும்கடினமானது என்ற பய உணர்வும் மொழி விருத்தியில் காணப்படும் இடர்பாடுள்ளது.

★ வாண்மை விருத்தி நிலையங்கள் ஆங்கில ஆசிரிய வளத்தை நன்கு திட்டமிட்டு பிரதேச இடைவெளிக்கேற்ப வழங்கத், தவறியுள்ளமை ஆங்கில மொழி அமைப்பு விருத்தியில் பின்னடைவான நிலை ஏற்பட வித்திட்டது.

★ அரசியல் ரீதியான காரணங்களினாலும் ஆங்கிலமொழி புறக்கணிக்கப்பட்டமையும் ஆங்கில விருத்தி பாதிப்புக்கு இன்னொரு காரணமாக அமைகிறது.

★ ஆங்கில அறிவை வழங்குவதற்கு ஆங்கில பாட ஆசிரியர்தான் தேவை என்ற நிலைமை மாற்றப்பட்டு எல்லா ஆசிரியரும் ஆங்கில மொழியை கற்பிக்கக்கூடிய தயார்நிலை அற்று காணப்படல். ஆங்கில பாடத்தைப் போதிப்பதில் சிக்கல் தன்மை ஏற்பட காரணமாகவுள்ளது.

★ ஆங்கிலமொழியை கற்கும்பொழுது ஏற்படும் இடர்பாடுகளான பயம், தாழ்வுச் சிக்கல், உச்சரிப்பு இடர்பாடுகள், மொழி மீதான வெறுப்பையும் அக்கறையீனத்தையும் விளைவிக்கின்றன.

பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்
ஆசிரியர்
தீவகக் கல்வி வலயம்.

★ மொழியைப் பேசுகின்றபோது ஏற்படும் தவறுகளை மற்றவர்கள் சிரிப்புக்கு உட்படுத்தும் நிலைமைமாறி தவறுகளைத் திருத்தி ஊக்கப்படுத்தும் நுட்பமுறையை ஆசிரியரோ அல்லது வழிப்படுத்துனரோ கையாளத் தவறும் சூழ்நிலை காணப்படல்.

மேற்கூறப்பட்ட பல்வேறு அடிப்படையிலான ஆங்கில மொழி இடர்பாடுகள் எமது சமூகத்தில் காணப்படுவதை அவதானிக்கலாம்.

### ஆங்கில ஆசிரியர் ஆளணி (மாகாண அடிப்படையில்)

ஆங்கில பாடத்தைப் பொறுத்தமட்டில் வடக்கு - கிழக்கு மாகண மட்டத்தில் ஆசிரிய ஆளணி மாணவர்களின் எண்ணிக்கைக்கு இணங்க போதியதாக அமையவில்லை என்பதை அட்டவணை 1 இல் உள்ள புள்ளி விவரம் தெளிவாக விளக்கிநிற்கிறது. அத்துடன், ஆரம்ப மற்றும் இடைநிலை மட்டத்தில் ஆங்கில ஆசிரியர்கள் எவ்வள பற்றாக்குறை உள்ளதென்பதையும் காட்டுகிறது.

அட்டவணை 1

| மாவட்டம் | ஆரம்பக் கல்வி (ஆங்கிலம்) | இடைநிலைக் கல்வி (ஆங்கிலம்) |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 357 | 179 |
| மன்னார் | 76 | 48 |
| கிளிநொச்சி | 91 | 82 |
| முல்லைத்தீவு | 115 | 83 |
| வவுனியா | 147 | 72 |
| திருகோணமலை | 152 | 95 |
| மட்டக்களப்பு | 230 | 67 |
| அம்பாறை | 94 | 80 |

(மூலம்: வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு - 2003)


யாழ்.மாவட்ட ஆங்கில ஆசிரிய பற்றாக் குறை

(அட்டவணை 02)

| வலயம் | ஆரம்ப கல்வி (ஆங்கிலம்) | இடைநிலை கல்வி (ஆங்கிலம்) |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 84 | 33 |
| வலிகாமம் | 115 | 56 |
| தென்மராட்சி | 53 | 29 |
| வடமராட்சி | 61 | 32 |
| தீவகம் | 44 | 29 |

யாழ்.மாவட்ட ஆசிரியபற்றாக்குறையை இலகுவாக அறிவதற்கு அட்டவணை 03 பயன்படுத்தப்பட்டுள்ளது.

(அட்டவணை 03)




தேசிய ரீதியில் ஆங்கிலஆசிரிய வள ஆளணி

(அட்டவணை

| மொழி | தேவையானோர் | கிடைக் கூடியோர் | பற்றாக்குறை |
|---|---|---|---|
| தமிழ் | 1675 | 267 | 1408 |
| சிங்களம் | 303 | 150 | 153 |
| இரண்டும் | 1978 | 417 | 1561 |

(மூலம் Base Line Sdy)

(வளரும்)

## கல்விச்சாலைக் காட்சிகள்



நல்லூரில் அமைந்துள்ள முன்பள்ளி மேம்பாட்டுக் கல்வி நிலையத்தில் பெற்றோர் விழிப்புணர்வுக் கருத்தரங்கும் கலைநிகழ்வும் அண்மையில் நடைபெற்றன.

நிகழ்வில் யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். நல்லூக்ர் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.காங்கேயன், நல்லூர் பிரதேச சபைத் தலைவர் பொ.வைரமுத்து, கிராம அலுவலர் நித்தியானந்தன் ஆகியோரும் படத்தில் உள்ளனர். (10)



அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.கல்வி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் ந.வரதராசா, கோப்பாய்க் கோட்டக் கல்வி அதிகாரி இ.சிவஞானசுந்தரம், தமிழீழ விடுதலைப் புலிகளின் அச்சுவேலிப் பொறுப்பாளர் ஜெகன், ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகர் க.பரிமேலழக பிள்ளை ஆகியோர் மாணவர்களால் 'பான்ட்' வாத்திய இசையுடன் அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம்.

கல்லூரி அதிபர் அருட்சகோதரி மரிய றொசாறியோ ஓய்வுபெற்ற ஆசிரியை செல்வி இ.வல்லிபுரம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். *(படம் : அச்சுவேலிச் செய்தியாளர்)*



உரும்பிராய் இந்துக் கல்லூரியின் வித்தியா சஞ்சிகை - 2004 வெளியீடும் பரிசில் வழங்கும் நிகழ்வும் அண்மையில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வைத்திய கலாநிதி சி.சிவன்சுதன் சஞ்சிகையை வெளியிட்டுவைக்க பொறியியலாளர் ச.சசிக்குமார் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம். பாடசாலை அதிபர் அ.ஈஸ்வரநாதன், இதழாசிரியர் பா.திருமாலழகன் ஆகியோரும் படத்தில் உள்ளனர். *(படம்: கோப்பாய் செய்தியாளர்)*



கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தின் 125ஆவது ஆண்டு நிறைவு விழாவும் ஆரம்பப் பிரிவின் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நல்லூர்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.காங்கேயன் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். சிறப்பு விருந்தினர் ரீ.தியாகமூர்த்தி, அதிபர் செல்வி பி.மார்க்கண்டு ஆகியோரும் படத்தில் உள்ளனர். (10)

# 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வீரப்பிறப்பு 22 - 06 - 1961

வீரமரணம் 21 - 12 - 1985

## மேஜர் அல்பேட்
(கந்தையா ரூபதநிதி)

அகிம்சைப் போராட்டம் ஆதிக்கவாதிகளிடம் தோற்றுப்போக
ஆயுதம் ஏந்திய தலைவர் வழியில்
அதர்மத்தை எதிர்த்து வீரகாவியமானாய்
உமது கனவினை எமதாக்கிக் கொண்டு
பயணிக்கின்றோம் நாம் விடுதலை நோக்கி....!

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (39886) (24-14-19)

அம்மா, சகோதரர்கள்.


# வீதி புனரமைப்புக்கு 18 லட்சம் ஒதுக்கீடு

சங்கானை,டிசெ.21

சங்கானை ஓடக்கரை வீதியைப் புனரமைப்புச் செய்ய வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகம் 18 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

இவ்வீதி வேலைகளை சங்கானை கிராம அபிவிருத்திச் சங்கம் ஒப்பந்தத்தில் எடுத்துச் செய்துவருகின்றது. (3-29-203)


## பண்டிகைக்கேற்ற பட்டாசுகள்!

சம்பியன்

இப்பொழுது விற்பனையாகின்றன!

☆ சம்பியன் வெடிகள் ☆ சம்பியன் பூந்திரிகள்
☆ சம்பியன் சக்கர வாணம் ☆ சம்பியன் ஈர்க்குவாணம்
☆ சம்பியன் கோர்வை வெடி ☆ சம்பியன் மத்தாப்பு

*மற்றும் பல*

உங்கள் பண்டிகைக் கொண்டாட்டங்கள் மகிழ்ச்சியில் திளைக்க உங்களுக்காகவே தயாரிக்கப்பட்டவை.

மொத்தமாகக் கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவு
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

விநியோகஸ்தர்கள்:

**சிவா நறுமணப் பூங்கா**

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

☎ 021 222 2567

*குறிப்பு:* மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு வான் மூலம் இலவச விநியோகம் செய்யப்படும். (சி-3913)(26-14-19-24)


# சிறை ஊழியரும் கைத்தொலைபேசி பயன்படுத்தத் தடை

சிறைச்சாலைகள் அத்தியட்சகர் முதல் சாதாரண சிறை ஊழியர்கள் வரை எவரும் சிறைக்குள் கையடக்கத் தொலைபேசிகளைப் பாவிக்கக்கூடாதென்று சிறைச்சாலைகள் ஆணையாளர் றூமி மர்சூக் உத்தரவொன்றைப் பிறப்பித்திருக்கின்றார்.

சிறைச்சாலைகளில் இருக்கும் கைதிகளில் பலர் சிறைச்சாலைகளில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களிடமிருக்கும் தொலைபேசிகளைக் கூடுதலான விலைக்குக் கொள்வனவு செய்கிறார்கள் எனவும், அவர்களின் தொலைபேசிகளைப் பயன்படுத்துகிறார்கள் எனவும் கிடைத்த முறைப்பாடுகளையடுத்தே சிறைச்சாலைகள் ஆணையாளர் றூமி மர்சூக் இந்தப் பணிப்புரையை விடுத்திருக்கிறார்.

இதுதொடர்பான சுற்றுநிருபமொன்று சிறைச்சாலைகளின் அத்தியட்சகர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஏற்கனவே அண்மைக்காலங்களில் சிறைச்சாலைகளில் நடத்தப்பட்ட தேடுதல்களின்போது நூற்றுக்கும் அதிகமான கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-க)






# மயானப் புனரமைப்புக்கு நிதி உதவி

சங்கானை,டிசெ.21

சங்கானை கரைச்சி மயானக் கட்டடப் புனரமைப்புக்கென சங்கானைக் கிராம அபிவிருத்திச் சங்கத்தினருக்கு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ் 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளார்.

ஏற்கனவே புனரமைப்பு வேலைகள் செய்யப்பட்டு நிதிப் பற்றாக்குறையினால் இடைநிறுத்தி வைக்கப்பட்ட பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள இந்த நிதி பயன்படுத்தப்படும் எனச் சங்கானை தெறகுக் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (3-203-29)

# மரவேலைப் பயிற்சி

தென்மராட்சி,டிசெ.21

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையினால் நடத்தப்படவுள்ள தென்மராட்சிப் பிரதேச இளைஞர்களுக்கான மரவேலைப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜனவரி மாதம் சாவகச்சேரியில் ஆரம்பிக்கப்படவுள்ள இப்பயிற்சிநெறியில் பங்குபற்ற விரும்பும் இளைஞர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் கையளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (3-117-202)

# நெடுந்தீவுக்கு அரச அதிபர் விஜயம்

நல்லூர்,டிசெ.21

யாழ்ப்பாண அரச அதிபர் செ.பத்மநாதன் இன்று செவ்வாய்க்கிழமை நெடுந்தீவுக்கு உத்தியோக பூர்வமான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

அங்குள்ள பொது அமைப்பினரைச் சந்திக்கும் அரச அதிபர் தேவைகள் குறித்துக் கேட்டறிவார். (3-111)

# கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நோயாளர் பொழுதுபோக்கு மையம் திறப்பு

கிளிநொச்சி மருத்துவ சங்கத்தினால் சோ.ஆ (இசற்.ஓ.ஏ.) நிறுவன அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட நோயாளர் பொழுதுபோக்கு மையம் கடந்த 19ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது.

அன்று இரவு 7.00 மணிக்கு கிளிநொச்சி மருத்துவர் சங்கத் தலைவர் வைத்தியகலாநிதி பிறைற்றன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. பொழுதுபோக்கு மையத்தினை சோ.ஆ (இசற்.ஓ.ஏ) நிறுவனத்தின் கிளிநொச்சி மாவட்ட திட்ட முகாமையாளரின் துணைவியார் கரோல் வேர் ஆன் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். பொழுதுபோக்கு மையத்திற்கான மின்சார விநியோகத்தினை மருத்துவப் பிரிவுப்பொறுப்பாளர் றேகா ஆரம்பித்து வைத்தார்.

சிறப்புரைகளை வைத்திய நிபுணர் கெங்காதரன், வைத்தியகலாநிதி த.பேரானந்தராசா, வைத்தியகலாநிதி சிதம்பரநாதன், கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

தொடர்ந்து 'நாட்பட்ட நிறுநீரக செயலிழப்பிற்கு உள்ளான நோயாளர்களுக்கான சில ஆலோசனைகள்' என்னும் வைத்திய கலாநிதி த.பேரானந்தராசாவின் நூல் வெளியீடு நடைபெற்றது. இம் மருத்துவ நூலினை கிளிநொச்சி மருத்துவர் சங்கம் வெளியீடு செய்தது. இந்நூலினை மருத்துவப் பிரிவினைச் சேர்ந்த மனோஜ் வெளியிட்டு வைத்தார். முதற பிரதியினை வைத்திய நிபுணர் பெஞ்சமின் பெற்றுக்கொண்டார். வெளியீட்டுரையினை வைத்தியகலாநிதி சுதாகரன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து வைத்தியசாலை ஊழியர்களின் கௌரவிப்பு நிகழ்வும், ஒளிவிழா கலை நிகழ்வும், விசேட இசை நிகழ்வும் நடைபெற்றன.

## பொன்னாவெளியில் நெற்பயிர் கால்நடைகளால் கடுஞ்சேதம்

வேரவில்,டிசெ.21

வேரவில் பொன்னாவெளிப் பகுதியில் கட்டாக்காலியாகத்திரியும் கால்நடைகளினால் நெற்பயிர்கள் சேதமாக்கப்பட்டு வருவதாக அப்பகுதி விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பருவகால மழையின் தாக்கத்தில் இருந்து நெற்பயிர்கள் தப்பியுள்ளபோதும், கட்டாக்காலிகளின் தொல்லையால் அவை சேதமடைந்துவிடும் அபாய நிலை தோன்றியுள்ளது என்றும் - இதற்குப் பொறுப்பான அமைப்புகள் இதனைக் கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (4-203-404)

## வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவு

வட்டக்கச்சி,டிசெ.21

மாவீரர் ஞாபகார்த்த கிளிநொச்சி மாவட்ட அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்ட இறுதிப் போட்டிக்கு வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணி தெரிவாகியுள்ளது.

கடந்த 18ஆம் திகதி மருதநகர் உதயதாரகை மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணி பரந்தன் இளைஞர் வட்ட அணியினை 4-3 என்னும் கோல் கணக்கில் வென்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

இறுதிப் போட்டி நாளை புதன்கிழமை நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணிக்கும் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணிக்கும் இடையே இடம்பெறும்.

(8-405)

## கால்நடைகளுக்கு

## கால்வாய் நோய் நீங்கியதால் இறைச்சி விற்பதற்கு அனுமதி

விசுவமடு,டிசெ.21

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கால்நடைகளுக்குக் கால்வாய் நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் இறைச்சி விற்பனை செய்யலாமென முல்லைத்தீவு மாவட்டத் தமிழீழ சுகாதார சேவையினர் மற்றும் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில மாதங்களாக வன்னிப் பகுதிகளில் கால்நடைகளுக்குக் கால்வாய் நோயின் தாக்கம் அதிகரித்திருந்தது. இந்நோய்த் தாக்கத்தினால் பல கால்நடைகள் இறந்தன.

இதனால் பால் விநியோகம், இறைச்சிக்காகக் கால்நடைகள் வெட்டுதல், ஒரு பிரதேசத்திலிருந்து இன்னொரு பிரதேசத்திற்குக் கால்நடைகளை இடம்மாற்றுதல் போன்ற செயற்பாடுகளுக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தது.

இந்நோயின் தாக்கம் முல்லைத்தீவு மாவட்டத்திலேயே மிகவும் அதிகரித்துக் காணப்பட்டது. தற்போது இந்நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் மேற்படி இறைச்சி விற்பனை, பால் விநியோகம் போன்றனவற்றிற்குப் போடப்பட்டிருந்த தடையுத்தரவு நீக்கப்பட்டுள்ளது.

(8-402-204)

## மழையினால் புதுக்குடியிருப்பிலிருந்து 6,272 குடும்பங்கள் இடம்பெயர்வு

புதுக்குடியிருப்பு,டிசெ.21

அண்மையில் பெய்த மழையினால் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளிலிருந்து 6ஆயிரத்து 272 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

இடம்பெயர்ந்தவர்கள் பாடசாலைகள், பொது இடங்களில் தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களுக்கான உலர் உணவு நிவாரணங்கள் கடந்த 5மாதங்களாக வழங்கப்படாதிருந்தது. இவ்வேளையில் இடம்பெயர்வு இம்மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது.

இதேவேளை- 5ஆயிரத்து 571 ஏக்கர் விதை நிலங்கள் வெள்ளத்தால் அழிந்துள்ளன. 2ஆயிரத்து 448 ஏக்கர் வயல் நிலங்களும் 3ஆயிரத்து 123 ஏக்கர் ஏனைய பயிர்ச்செய்கையும் அழிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விளைபொருள்கள் அழிந்துள்ளதால், மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இவர்களுக்கான நிவாரண உதவிகள் எவையும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (4-353-204)




## முழங்காவில் அரசினர் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் நியமிக்கப்படவில்லை

முழங்காவில்,டிசெ.21

முழங்காவில் அரசினர் வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர் இன்மையால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இவ்வைத்தியசாலையில் இப்பிரதேசத்தைச சேர்ந்த 22 கிராம மக்களுக்குச் சிகிச்சை வழங்கப்படுகிறது.

இவர்களுக்குச் சிகிச்சை வழங்குவதற்கென இவ் வைத்தியசாலையில் நிரந்தரமான வைத்தியர் ஒருவர் இதுவரை நியமிக்கப்படவில்லை.

வன்னேரி அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் ஒருவரே இவ் வைத்தியசாலையிலும் சேவை செய்கிறார்.

இரு வைத்தியசாலைகளிலும் ஒரு வைத்தியரே' கடமையாற்றுவதால் நோயாளர்கள் சிகிச்சைக்காக நீண்டநேரம் காத்திருப்பதுடன் நோயின் உபாதையினால் உடனடியாக வைத்தியம் செய்யமுடியாத நிலையும் ஏற்படுகிறது.

அதுமட்டுமன்றி, வைத்திய அதிகாரிக்கு அலைச்சல் ஏற்படுவதோடு, வேலைப்பளுவும் அதிகரித்துக் காணப்படுகிறது.

இந்நிலைமைகளைக் கருத்திற்கொண்டு வைத்தியர் குறைபாடு பற்றி உரியவர்களிடம் பலமுறை முறையிட்டும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மழை காரணமாகத் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ள இச்சூழ்நிலையிலாவது, நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கவேணடுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(8-323-204)




கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் முன்புறத்தில் அமைக்கப்பட்டுள்ள யுத்த கால நினைவுச் சின்னத்தின் தோற்றமே இது.

இதனை 1-9 தங்கக் அனுசரணையுடன் கிளிநொச்சி மருத்துவர் சங்கம் அமைத்தது. கட்டடக் கலைஞர் இளங்கோவன் இதனை வடிவமைத்துள்ளார்.

*(படம்: வட்டக்கச்சிச் செய்தியாளர்)*

## புவியியல் பாட செயல்முறை வகுப்பு

தமிழீழக் கல்விக் கழகத்தினரால் நடத்தப்பட்டுவரும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு 2005ஆம் ஆண்டு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான புவியியல் பாட நில அளவை தொடர்பான செயல்முறை வகுப்புகள் நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பமாகின.

இவ்வகுப்புகள் நேற்றும், இன்றும் கிளிநொச்சி முருகானந்தா மகா வித்தியாலயத்தில் நடைபெறுகின்றன.

எதிர்வரும் 26ஆம், 27ஆம் திகதிகளில் வட்டக்கச்சி மகாவித்தியாலயத்திலும், 29ஆம், 30ஆம் திகதிகளில் முல்லைத்தீவு பாரதி வித்தியாலயத்திலும் ஜனவரி 2ஆம் 3ஆம் திகதிகளில் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்திலும் இவ்வகுப்புகள் நடைபெறும் எனவும் இதில் சம்பந்தப்பட்ட மாணவர்களைப் பங்குகொண்டு பயனடையுமாறும் தமிழீழக் கல்விக் கழகத்தினர் அறிவித்துள்ளனர். (8-405)

## ஒலுமடு பட்டிக்குடியிருப்பு வீதி புனரமைக்கப்படவில்லை

ஒட்டுசுட்டான், டிசெ.21

ஒட்டுசுட்டான் - ஒலுமடு - பட்டிக்குடியிருப்பு வீதி மிக நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாதுள்ளதால், போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான இவ்வீதி - புனரமைப்புச் செய்வதற்கென வீதிகளில் நீர்க்குழாய்கள் போடப்பட்டு 6மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இவ்வீதி புனரமைப்புக்கான எவ்வித நடவடிக்கையும் ஆரம்பிக்கப்படவில்லை.

இவ்வீதியினாலேயே நெடுங்கேணியிலிருந்து பட்டிக்குடியிருப்பு சம்மளங்குளம் வரை சென்று வந்த பேருந்துச் சேவை தற்போது வீதி ஒழுங்கின்மையால் நெடுங்கேணியிலிருந்து ஒலுமடு ஊடாகப் பட்டிக்குடியிருப்பு செல்லாது ஒலுமடுவுடன் நிறுத்தப்படுகிறது.

இதனால், மேற்கொண்டு சம்ளங்குளம் செல்லும் மக்கள் கால்நடையாகப் பெருஞ்சிரமத்தின் மத்தியில் சென்று வருகின்றனர். வீதி அபிவிருத்தி அதிகாரசபை இவ்வீதியை விரைவாகப் புனரமைத்து மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு உதவுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-341)

## மதுபோதையில் வாகனம் செலுத்தியோர் தமிழீழக் காவல்துறையினரால் கைது!

### எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்

கிளிநொச்சி, டிசெ.21

மதுபோதையில் வாகனஞ் செலுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட 25பேர் தமிழீழக் காவல் துறையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மது அருந்திவிட்டு வாகனம் செலுத்திய குற்றத்திற்காக ஒவ்வொருவரிடமிருந்தும் தலா 1500ரூபா அறவிடப்பட்டதுடன், அவர்கள் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

மது அருந்திவிட்டு வாகனம் செலுத்தும் சாரதிகள் மீது தமிழீழக் காவல்துறையினரால் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-204-323)

# அரசுடன் இணையும் எண்ணம் மு.காங்கிரஸுக்கு இல்லை!

## அடித்துக் கூறுகின்றார் ரவூப் ஹக்கீம்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய ஐக்கிய முன்னணியுடன் (நுஆ) புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை செய்துகொண்டிருப்பது, ஐக்கிய மக்கள சுதந்திரக் கூட்டமைப்பு அரசுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் இணைவதற்கான முஸ்தீபுகளே என்று தெரிவிக்கப்படும் விமர்சனங்களை முற்றுமுழுதாக நிராகரிக்கின்றார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம்.

தேசிய ஐக்கிய முன்னணியுடன் முஸ்லிம் காங்கிரஸ் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டுள்ள நிலையில், ஆளும் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் பங்காளிகளாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாறப்போகிறதென்ற விமர்சனங்கள் குறித்துக் கேட்டபோதே ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு கூறினார்.

அவா மேலும் கூறியதாவது:-

அரசுடன் இணைந்துகொள்ளுமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு எப்போதும் அழைப்பு விடுக்கப்பட்டே இருக்கிறது. ஆனால், அது தொடர்பிலான எந்தத் தீர்மானத்தையோ முடிவுகளையோ நாம் மேற்கொள்ளவில்லை. 'நுஆ'வுடன் நாம் செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் அரசுடன் இணைவதற்கான முஸ்தீபு அல்ல.

இந்த அரசு முக்கியமான இரண்டு தீர்மாணங்களை எடுக்கவேண்டும். புதிய அரசமைப்புக்கான அரசமைப்பு நிர்ணயசபை தொடர்பான யோசனைகளைக் கைவிடவேண்டும். சாமதாணப் பேச்சுகளில் முஸ்லிம்களை மூன்றாந்தரப்பாக அங்கீகரிக்கவேண்டும்.

இந்த இரு யோசனைகளைக் கருத்திற்கொண்டு உறுதியான தீர்மானத்தை அரசு மேற்கொண்டால் மாத்திரமே அரசுடன் இணைந்து கொள்வதா, இல்லையா என்பது பற்றித் தீர்மானிக்கப்படும்.

தேசிய ஐக்கிய முன்னணியுடன் நாம் செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் குறுகிய அரசியல் நலன்களுக்கு அப்பால் முஸ்லிம்களின் அபிலாஷைகளைச் சமாதானப் பேச்சுக்களின்போது உறுதிப்படுத்த மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும். விடுதலைப் புலிகள் மற்றும் அரசிடமிருந்தும் சமாதான செயலகங்கள் போன்று, சமாதான முயற்சிகளின்போது முஸ்லிம்களின் கருத்தொருமைப்பாட்டை வெளிப்படுத்த ஒரு நிறுவன ரீதியான கட்டமைப்பு இருக்கவேண்டும்.

இதற்கான முதற்படியாகவே நாம் இந்த ஒப்பந்தத்தினை செய்துள்ளோம். இதற்கமைய சமாதான செயலகம் என்ற கட்டமைப்பை நாம் உருவாக்கவுள்ளோம். இவ்வாறானதொரு நிலையில் இதனை மாற்றுக் கண்ணோட்டத்துடன் எவரும் நோக்கக்கூடாது - என்றார் அவர்.

(க-10)




அல்வாய் வேவிலந்தை

ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில்

திருவாசக முற்றோதல்

24.12.2004 வெள்ளி காலை 8 மணி முதல் இடம்பெறும்.

ஆர்வமுள்ளோர் நிகழ்வில் கலந்து பயன்பெறுமாறு வேண்டுகின்றோம்.

நிர்வாகிகள்,
அல்வாய் வேவிலந்தை ஸ்ரீமுத்துமாரி
அம்மன் தேவஸ்தானம்.

(C/39881)(42-19-17)



17 ஆவது வருட நினைவுகளில்...

மலர்வு 1937 – 02 – 09



உதிர்வு 1987 – 12 – 20

அமரர் சீ.செல்லத்துரை

(முன்னாள் யாழ்.போதனா வைத்தியசாலை மேற்பார்வையாளர்)

பார்போற்ற வாழ்ந்திருந்தீர்
பகைவர் உங்கள் உயிரைப் பறித்தனரோ!
பரிதவிக்கும் எமக்கு உங்கள் நினைவு
17 ஆண்டுகள்..........
ஐயைய்யோ! 17 ஆண்டுகள்!!
பாரினில் நாம் வாழும் வரை உங்கள் நினைவுடன்:

"ஈஸ்வரி வாசம்",
உரும்பிராய் . மேற்கு,
உரும்பிராய்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(39898)(42-19-17)


### விசுவமடுவில் தியேட்டர் தீக்கிரை

விசுவமடுச் சந்திக்கு அருகில் உள்ள திரையரங்கு ஒன்று விசமிகளால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் திரையரங்கு முற்றாக எரிந்துவிட்டது எனவும் -

எரிந்து கொண்டு இருக்கும் சமயம் தமிழீழக் காவல் துறையின் போக்கு வரத்து கண்காணிப்புப் பிரிவினர் திரையரங்கின் ஒரு பகுதியை உடைத்து உள்ளே சென்று அங்கிருந்த ஒளிநாடாக்களை எரியவிடாது மீட்டுவிட்டனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பான விசாரணைகளை தமிழீழக் காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

(3-203-402)

### விரிவாக்க அலுவலகம் இன்று திறந்துவைப்பு

இலங்கை வங்கியின் மானிப்பாய்க் கிளையின் விரிவாக்க அலுவலகம் சங்கானையில் இன்று செவ்வாய்க்கிழமை திறக்கப்படவுள்ளது.

சங்கானை - பிரான்பற்று வீதியில் அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த அலுவலகத்தை, இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் திறந்துவைக்கவுள்ளார். இந்த அலுவலகம் ஆரம்பிக்கப்படுவதால் வலி.மேற்குப் பிரிவைச் சேர்ந்த வங்கி வாடிக்கையாளர்கள் இலகுவாகத் தமது வங்கிச்செயற்பாடுகளை மேற்கொள்ள வசதி ஏற்பட்டுள்ளது.

(10-29-12)


உளசமூக ஊக்குவிப்பாளருக்கான பயிற்சியும் அதனோடு இணைந்த களவேலை

மேற்படி பயிற்சிக்கான விண்ணப்பங்கள் (பெண்கள்) எமது நிறுவனத்தால் கோரப்படுகின்றன.

தகைமைகள்:

- க.பொ.த.உயர்தரத்தில் சித்தி
- சமூக சேவை/ உளவியல் என்பவற்றில் ஈடுபாடும் அதற்கான சான்றிதழ்களும்.

விண்ணப்பங்களை *பணிப்பாளர், "சுகவாழ்வு நிலையம்", இல.16, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்* என்னும் முகவரிக்கு நேரிலோ/ தபாலிலோ 28.12.2004இற்கு முன் அனுப்பிவைக்கவும்.

பணிப்பாளர்,
சுகவாழ்வு நிலையம்.

(C/39890)(42-19-17)



31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 14 – 12 – 1916



மறைவு 21 – 11 – 2004

சுப்பிரமணியம் பொன்னுத்துரை

எங்கள் அன்புத் தெய்வமே! தந்தையே மாமாவே
அண்ணனே அப்புவே
காரைநகரினில் பிறந்து காரைநகரினில் இல்லறம்
அமைத்து
எம் வாழ்வுக்கு ஒளியாகத் திகழ்ந்த ஒளிவிளக்கே!
குல தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல ஈழத்துச் சிதம்பரரேஸ்வரப்பெருமானைப்
பிரார்த்திக்கின்றோம்.

இன்று (21.12.2004) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புது றோட்,
காரைநகர்.

- குடும்பத்தினர்.

(39885)(12-42-19-17)


### எம்.ஜி.ஆர்.நினைவு நிகழ்வுகள்

வலி.தெ.மே.டிசெ.21 ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டத்திற்கு உறுதுணையாக இருந்து உறுதியுடன் குரல் கொடுத்தவரும், முன்னாள் தமிழ் நாட்டு முதலமைச்சருமான மக்கள் திலகம் எம்ஜி.ஆர். நினைவு தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 24,25, 26 ஆம் திகதிகளில் பல்வேறு நிகழ்வுகள் யாழ்.மாவட்டம் எங்கும் நடைபெறவுள்ளன. எம்.ஜி.ஆர்.நற்பணி மன்றம், எம்.ஜி.ஆர் இளைஞர் அணி ஆகியவற்றின் அனுசரணையுடன் எம்.ஜி.ஆர்.முன்னேற்றக்கழகம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன. (8-135-202)





- பரிசில்கள்
- விலைக் கழிவுகள்
- குறைந்த வட்டி விகிதத்தில் தவணைக் கட்டணங்கள்

இவை அனைத்தும் பட்ஜெட்டுக்கு முந்திய விலையில்

அரிய சந்தர்ப்பம் தவறவிடாதீர்கள்

மேலதிக விவரங்களுக்கு :

சிங்கர் காட்சியறை

01,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.T.P-021 222 5408

SINGER
At Home World Wide

(39870)



அன்னை நாகா பூட்சிற்றி

விசேட அறிவித்தல்

பிறிமா கோழி இறைச்சி
Prima whole chicken

விசேஷமாக நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

மொத்தமாகவும், சில்லறையாகவும் விசேஷ விலையில் பெற்றுக் கொள்ளலாம்.



ANNAI NAGAA FOOD CITY

மொத்த விற்பனையாளர்:
நில்கமால் வீட்டுத் தளபாட
விற்பனை நிலையம்
175, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

சில்லறை விற்பனை விலாசம்
175, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்.

## அனலைதீவுப் பிரதேச மாணவர்களின்
# கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிக்க பல்வேறு நிதியுதவிகள் கிடைக்கின்றன

ஊர்காவற்றுறை.டிசெ.21

அனலைதீவு பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்றுவரும் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக இப் பிரதேசத்தில் இருந்து புலம் பெயர்ந்து கனடாவில் வாழும் ஒருவரால் பல்வேறு நிதி உதவிகள் வழங்கப்பட்டுவருகிறது.

அண்மையில் முடிவடைந்த மூன்றாம் தவணைப்பரீட்சையில் வகுப்பு ரீதியாகத் கூடுதலான புள்ளிகளைப்பெற்ற முதலாவது மாணவனுக்கு 500ரூபாவும், 2ஆம் நிலையை அடைந்த மாணவனுக்கு 300 ரூபாவும், 3ஆம் நிலையை அடைந்த மாணவனுக்கு 200 ரூபாவும், 4ஆம், 5ஆம் நிலையை அடைந்த மாணவர்களுக்குத் தலா 50 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதி உதவி வருடாந்தம் ஒவ்வொரு தவணைக்கும் வழங்கப்படவுள்ளது.

இதனைத்தவிர ஜி.சீ.ஈ சாதாரண தரப்பரீட்சையில் மாணவரொருவர் பெறும் ஒவ்வொரு 'ஏ' தராதரத்திற்கும் இரண்டாயிரம் ரூபா வழங்கப் படவுள்ளதுடன், புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு தலா ஐயாயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இந்த உதவிகளை அனலைதீவு வடலூர். அ.த.க. பாடசாலை, அனலைதீவு சதாசிவ வித்தியாலயம், அனலைதீவு தெற்கு அ.த.க. பாடசாலை ஆகியவற்றினைச் சேர்ந்த மாணவர்கள் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

இதற்கெனத் தற்பொழுது கனடாவில் வசித்துவரும் ரமேஸ் கிருஸ்ணமூர்த்தி என்பவர் முதற்கட்டமாக இரண்டு லட்சம் ரூபாவினை வழங்கியுள்ளார், இவர் அண்மையில் தனது ஊருக்குத் திரும்பியிருந்தவேளை மேற்படி நிதி உதவியினை வழங்கிச் சென்றுள்ளார்.(10-16)

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
# புதுவருட அன்பளிப்பாக தினக்குறிப்பு வழங்க ஏற்பாடு

அச்சுவேலி.டிசெ.21

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தனது உறுப்பினர்களுக்கு விசேடமாக வடிவமைக்கப்பட்ட தினக்குறிப்பை (டயறி) புதுவருட அன்பளிப்பாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

ஆசிரியர்களுக்குப் பயன்தரத்தக்க முறையில் கல்வி நிர்வாக கோவைக் குறிப்புகள், ஆசிரியர்களின் சம்பள வீதங் கள், ஓய்வூதிய வீதங்கள், பாடசாலை நாள் அட்டவணை, பொது விடுமுறைத் தினங்கள் .தமிழீழ விடுமுறை நாள்கள், ஆசிரியர் சேவை, அதிபர் சேவை, கல்வி நிர்வாக சேவை பிரமாணக் குறிப்புக்கள், பொது அறிவுத் தகவல் என்பவற்றைக் கொண்டதாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் பாடசாலைத் தொடக்கத்தில் சகல உறுப்பினர்களுக்கும் கிடைக்கக் கூடியதாக தினக்குறிப்பு வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டச் செயலாளர் க.குமரசாமி தெரிவித்துள்ளார். (10-11)

# நத்தார்க் கொண்டாட்டம் களைகட்டி வருகின்றது

யாழ்ப்பாணம்,டிசெ.21

குடாநாட்டில் நத்தார்ப் பண்டிகைக் கொண்டாட்டங்கள் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன.

யாழ்.நகரப் பகுதியில் வியாபாரமும் களைகட்டத் தொடங்கிவிட்டது. நடைபாதை வியாபாரமும் அமோகமாக இடம்பெற்று வருகிறது.

உடுபுடைவைகள், அலங்காரப் பொருள்கள், பிளாஸ்டிக் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காகக் குடாநாட்டின் பலதிசைகளிலிருந்தும் வருகைதரும் மக்கள் நகரப் பகுதியில் கூடுவதால் வீதிகளூடான போக்குவரத்தில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

வீதிகளில் ஏற்படும் நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்காகப் போக்குவரத்துப் பொலீஸார் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்காக சிவில் உடையில் பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நத்தார்தின 'கரோல்' குழுக்களும் இரவு நேரங்களில் வீடுவீடாகச் சென்று நிகழ்வுகளை நடத்தி வருகின்றன.

(10-7)

# 'நீர்ப்' திட்டத்தின் கீழ் வடக்கு-கிழக்கில் 46 ஆயிரம் வீடுகள் புனரமைக்கப்படும்

யாழ்ப்பாணம்,டிசெ.21

உலக வங்கியின் நிதியுதவியுடன் 'நீர்ப்' திட்டத்தின் கீழ் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 46 ஆயிரம் வீடுகள் 2005 ஆம் ஆண்டிலிருந்து புனரமைக்கப்படவுள்ளன.

இம் மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களிலும் சுமார் ஆயிரம் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றிலிருந்து 46 ஆயிரம் வீடுகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 760 வீடுகள் கட்டம் கட்டமாகப் புனரமைப்புச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவற்றில் 276 வீடுகள் 2005 ஆம் ஆண்டில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாகவும் அம்மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

(10-202)

# வலி.கிழக்கில் இலவச கணனிப்பயிற்சி

யாழ்ப்பாணம்,டிசெ.21

வலி.கிழக்குப் பிரதேசத்தில் உள்ள மாணவர்களுக்கு இலவச கணனிப் பயிற்சியினை சிறுப்பிட்டி 'சிற்றி இன்ப.'.மற்றிக்' சென்ரர் வழங்கவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு வலி.கிழக்குப் பிரதேசத்தில் வறுமைக்கோட்டின் கீழ்வாழும் மாணவர்கள் உள்வாங்கப்படவுள்ளனர்.

மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் விண்ணப்பங்களைத் தமது கிராம சேவையாளாரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் 'சிற்றி இன்ப.'.மற்றிக் சென்றரர், சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு நிறுவனத்தின் இயக்குநர் கேட்டுள்ளார். மேலும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும், போரினால் உளரீதியாகப் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் ஆளுமையினை விருத்தி செய்யக்கூடிய, உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காக உளவியல் ரீதியாக வடிவமைக்கப்பட்ட 4 மாதக் கணனிக் கற்கை நெறிகளும் இப்பயிற்சி நெறியில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளன.(10-13)

# கடும் மழையினால் விவசாயச் செய்கை பாதிப்பு

ஒட்டுசுட்டான்,டிசெ.21

ஒட்டு சுட்டான் பிரதேசத்தில் அண்மையில் பெய்த கடும் மழைகாரணமாக 4ஆயிரம் ஏக்கர் விவசாயம் மற்றும் உப உணவுச் செய்கைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வீடுகளை இழந்து இடம்பெயர்ந்துள்ளன.

அவர்களால் வளர்க்கப்பட்ட 1000 இற்கும் மேற்பட்ட கால்நடைகள் இறந்ததோடு, அவர்கள் பெரும் பொருளாதார நெருக்கடிகளையும் எதிர்கொண்டுள்ளனர்.

இவர்களுக்கான நிவாரண உதவிகள் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (8-341-204)

# விபத்தில் வயோதிபப் பெண் மரணம்!

புதுக்குடியிருப்பு.டிசெ.21

புதுக்குடியிருப்பில் சைக்கிளில் சென்றவர்களைப் பின்னால் வந்த பஸ் மோதியதில் வயோதிப மாது பலியானதுடன் மற்றவர் படுகாயமடைந்த சம்பவம் ஒன்று கடந்த 16ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் முத்துலிங்கம் சின்னம்மா (வயது 54) என்பவரே பலியானவராவார். இவரை ஏற்றிவந்த மு.சந்திரகுமார் காயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

புதுக்குடியிருப்பு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பணிமனைப் பக்கமாக சைக்கிளில் சென்றவர்கள் திரும்பியபோது பின்னால் வந்த பஸ் மோதி இவ்விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (8-353-204)



யாழ்.புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் கடந்த 12 வருடங்களாக அதிபாரகப் பணியாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் திருமதி பி.எவ்.சின்னத்துரையின் சேவையினைப் பாராட்டி, பழைய மாணவர் சங்கத்தினால் நடத்தப்பட்ட விழாவில் சங்கத்தின் தலைவர் விழா நாயகிக்கு நினைவுச் சின்னம் வழங்குவதையும் சங்க உறுப்பினர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்- அரியாலைச் செய்தியாளர்)



இயேசு சபை அகதிகள் பணியகத்தின் 25 ஆவது யூபிலி விழாவின்போது இளவாலை மாரீசன் கூடல் பங்குத் தந்தை ஜெ.பி.அன்ரனிதாஸ் மங்கள விளக்கேற்றுவதையும். இயேசு சபை அகதிகள் பணியக வலய இணைப்பாளர் எஸ்.பிறின்ஸ்சி,வேளாண்மிய செயலாளர் எ.ஜேசுராசா, மாரீசன் கூடல் றோ.க.த.க. பாடசாலை அதிபர் எஸ்.என்.உதயகுமார் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்- மாதகல் செய்தியாளர்)



சாவகச்சேரி வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தின் கொடிவார நிகழ்வில் முதற் கொடியினை நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் வழங்கி ஆரம்பித்து வைப்பதையும் அருகில் சங்க உபதலைவர் டாக்டர் சு.சி.அருளானந்தம், பொருளாளர் வை.இராசரததினம் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்-தென்மராட்சிச் செய்தியாளர்)



தொடர்ச்சியாகப் பெய்த மழைகாரணமாக வேலணையில் உள்ள சரவணை மேற்கு பகுதியில் பல வீடுகளுக்குள் வெள்ளம் உட்புகுந்துள்ளது. அவ்வாறு வெள்ளம் உட்புகுந்துள்ள ஏழைக் குடும்பம் ஒன்றின் வீட்டினைப் படத்தில் காணலாம். (படம்-ஊர்காவற்றுறைச் செய்தியாளர்)

# டைனமற் குண்டுத் தாக்குதல் ஹை-ஏஸ் வான் பலத்த சேதம்

## சுவாட்ஸ் வீதியில் ஞாயிறிரவு சம்பவம்

குருநகர்,டிசெ.21

யாழ். சுவாட்ஸ் வீதியிலுள்ள குடியிருப்பாளர் ஒருவரது வீட்டின் மீது இனந்தெரியாத நபர்கள் நடத்திய 'டைனமற்' குண்டுத் தாக்குதலில் 'ஹை ஏஸ்' வாகனம் ஒன்று பலத்த சேதமடைந்துள்ளது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 11.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இந்த வீட்டின் வளவினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 'ஹை ஏஸ்' வாகனமே பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளது.

வாகனத்தின் முன்பக்க கண்ணாடி சிதறிக் காணப்பட்டது. வீசப்பட்ட இரு குண்டுகளில் ஒன்று எரிந்த நிலையில் மீட்கப்பட்டது.

இதுதொடர்பாக வீட்டு உரிமையாளர் யாழ். பொலீஸில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து பொலீஸாரால் வெடிக்காத நிலையில் இருந்த வெடிகுண்டு எடுத்துச்செல்லப்பட்டதாக வீட்டு உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

தாக்குதலிற்கான காரணம் எதுவென அறிய முடியவில்லை.

(எ-51)

# சுவர்க்க வாயில் ஏகாதசி உற்சவம்

யாழ்.வண்ணை வேங்கடேச வரதாரஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் நாளை புதன் கிழமை சுவர்க்கவாயில் ஏகாதசி உற்சவம் நடைபெறவுள்ளது. அதிகாலை 3 மணியளவில சுப்ரபாத பூசைகள், திருப்பள்ளி எழுச்சிப் பூசைகள் இடம்பெற்று காலை 5.30 மணியளவில் சுவர்க்கவாயில் தரிசனம் இடம்பெறவுள்ளது. அத்துடன், இரவு 8 மணி தொடக்கம் அதிகாலை 4 மணிவரை கூட்டுப்பிரார்த்தனை, சொற்பொழிவு, கலைநிகழ்வுகள் என்பனவும் இடம்பெறும். (10-203)

# வடமராட்சிப் பிரதேசத்திலும் மக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.21

சமாதான ஒப்பந்தத்தை வலியுறுத்தியும் இடைக்காலத் தன்னாட்சி அதிகார யோசனையை நடைமுறைப்படுத்தவும் வலியுறுத்தி வடமராட்சிப் பிரதேசத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி மக்கள் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

நெல்லியடிப் பிரதேசத்தில் நடத்தப்படவுள்ள இப்போராட்டத்தில் வடமராட்சியின் பல பாகங்களிலிருந்தும் வரும் பொதுமக்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணியளவில் பதாகைகள், கோஷங்கள் சகிதம் பல்வேறு பாகங்களிலிருந்தும் புறப்படும் மக்கள் பேரணி நெல்லியடிச் சந்தியில் ஒன்றுகூடும் அதனைத் தொடர்ந்து அங்கு கருத்தரங்கொன்றும் இடம்பெறவுள்ளது.

வடமராட்சி மாணவர் எழுச்சிப் பேரவையும் வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவையும் இணைந்து ஒழுங்கு செய்துள்ள இம்மக்கள் போராட்டத்திலும் ஊர்வலத்திலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள கருத்தரங்கிலும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் பல முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர்.

(10-202-70-173)




பொன்னாலை

திருவருள் மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான

வைகுண்ட ஏகாதசி

**திவ்விய மகோற்சவ விஞ்ஞாபனம் - 2004**

**மார்கழி மாதம் நாளை 7ஆம் நாள் 22.12.2004**

**புதன்கிழமை வைகுண்ட ஏகாதசித்தினம்**

அதிகாலை 3.00 மணிக்கு சங்காபிஷேகம்

அதிகாலை 5.30 மணிக்கு சொர்க்க வாசல் தரிசனம்

முற்பகல் 10.00 மணிக்கு வசந்தமண்டபப் பூசை

முற்பகல் 11.00 மணிக்கு இரதோற்சவம்

இரவு வைகுண்ட ஏகாதசி புராண படனமும் பஜனையும் நிகழும்.

**மார்கழி மாதம் 8ஆம் நாள்**

**23.12.2004 வியாழக்கிழமை**

காலை 9.00 மணிக்குத் திருவடிநிலை புறப்படல்

முற்பகல் 11.00 மணிக்குத் தீர்த்தோற்சவம்

*மஹோற்சவ தேவஸ்தான பிரதமகுரு:*

"வேதாகம கிரியா கலாபூஷணம்"

ஸ்ரீவிஷ்ணு ஸ்ரீ.க.ச.சோமாஸ்கந்தக் குருக்கள்

குறிப்பு:

1. அடியார்கள் ஏகாதசி தினத்தன்று இரவு வெளிவீதி பிரதட்சணம் 108 தரம் வருவதற்கு நாராயணன் திருவருள் கூடியுள்ளது.
2. அடியார்கள் தங்களால் இயன்ற பால், தயிர், இளநீர், பூ, அபிஷேகத் திரவியம் என்பன கொடுத்து ஸ்ரீமந் நாராயணனைத் தரிசத்து அருள் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வீர்களாக.
3. மார்கழி மாதம் 25ஆம் நாள் 09.01.2005 ஞாயிற்றுக்கிழமை ஆஞ்சநேய ஜெயந்தி அபிஷேகம், உற்சவம்.
4. 09.01.2005 காலை 8.00 மணிக்கு வருடாந்த பஜனை ஊர்வலம் ஆரம்பமாகி பிற்பகல் ஒரு மணிக்குச் சித்தன்கேணிப் பிள்ளையார் கோயிலையடைந்து இரவு தேவஸ்தானத்தைச் சென்றடையும்.

பொன்னாலை,
சுழிபுரம். (39904)(29-11-18) - தேவஸ்தான பரிபாலன சபை.



## காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லம்

## பணிநிலை வேண்டுகை

பதவிகள்:

1.கல்வி நிர்வாகி
(A/L 03 பாட சித்தி வயது 30இற்கு மேல் இருக்கவேண்டும்)

2.ஆசிரியர்கள்
(சகல பாடங்களுக்கும் A/L 03 பாடச் சித்தி 06 மாதம் பயிற்சி வழங்கப்படும்)

3.விஞ்ஞான கூட உதவியாளர்
(A/L இல் கணித, விஞ்ஞானப் பிரிவில் 02 பாடத்திற்கு மேல் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்)

4.தட்டெழுத்தாளர்
(A/L 03 பாடச் சித்தியும் - பயிற்சி சான்றிதழும் தேவை)

5.ஓவியர்கள்
காட்டுன் சித்திரம் கீறக்கூடியவராகவும் கணனி அறிவும் நன்று

6.பராமரிப்பாளர்கள்
(ஆண், பெண் இருபாலாரும் - 30 வயதிற்கு மேல்)

| நேர்முகத் தேர்வு 23-12-2004 | 24-12-2004 |
| --- | --- |
| காலை 9.00 - பி.ப.2.00 மணி வரைக்கும் | காலை 9.00 - பி.ப.2.00 மணி வரைக்கும் |
| காந்தரூபன் அறிவுச்சோலை புதிய வளாகம், மலையாளபுரம், கிளிநொச்சி. | காந்தரூபன் அறிவுச்சோலை கைவேலி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. |

குறிப்பு:

1. விண்ணப்பம் நேர்முகத் தேர்வு அன்றே பெறப்படும்.
2. தகைமைச் சான்றிதழ்களுடன் சமுகந்தரவும்.
3. குறித்த நாளில் தோற்ற முடியாதவர்கள் முன்கூட்டியே கடிதமூலம் தெரியப்படுத்தவும்.

நிர்வாகச் செயலகம்,
காந்தரூபன் அறிவுச்சோலை
சிறுவர் இல்லம். (சி-39898)(26-11-18-29)



**அமரர்களானவர்களின் படங்களைக் கண்டீர்களா?**

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திற்கும் நாச்சிமார் கோயிலடிக்கும் இடையில் 3 படங்கள் (பட்டமளிப்பு படம் ஒன்று, வீணை வாசிக்கும் படம் ஒன்று, மாவீரன் சீருடை தரித்த படம் ஒன்று) தீபாவளிக்கு இரு தினம் முன்னர் தவறிவிட்டன.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
021 222 5767
மலரும் மலர்கள் வீடியோ & போட்டோ
9A, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
மொடேன் ஸ்ரோர்ஸ்,
நெல்லியடி. 0777 111011 (59900)



**முன்பள்ளி ஆசிரியைகள் தேவை**

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேசத்துக்குட்பட்ட, தமிழ், கணிதம் உட்பட 6 பாடங்களில் G.C.E.(O/L) சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தகுதியுள்ள ஆசிரியைகள் 27-12-2004 திங்கட்கிழமை காலை 9.00மணிக்கு சான்றிதழ்களுடன் நேரில்வரவும்.

**பாலர் கல்விக் கழகம்**
49/5, யாழ். வீதி, சிறாம்பியடி,
யாழ்ப்பாணம்.
(59895)(42-11-18-29)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சின்னத்தம்பி மயில்வாகனம்**
திதி: 21.12.2004

உழைப்பால் உயர்ந்து
கடமையை கண்ணியமாக்கி
எங்கள் வாழ்வினுக்கு நல் வழிகாட்டிய
உங்களைப் பிரிந்த ஓராண்டில்
உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கைதடி வடக்கு,
கைதடி. (39891)(29-11-18) -குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### திருமதி குட்டப்பன் கலியாணி



சிலாபத்தைப் பிறப்பிடமாகவும் 1/7, புது வீதி, கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குட்டப்பன் கலியாணி 19.12.2004 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குட்டப்பனின் அன்பு மனைவியும் அசோக், சந்திரபோஸ் (ரிப்ரொப் கிறீம் ஹவுஸ், கொக்குவில்), ஜதீந்திரதாஸ் (R.V.G. பீடிக்கொம்பனி - பீடி மேற்பார்வையாளர்), காலஞ்சென்ற ஹரிதாஸ் குமார், லலிதா, காலஞ்சென்ற ஸ்ரீதரன், மோகனதாஸ் (கனடா), பத்மினி (இந்தியா), ராகினி, இந்திராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் அருளம்மா, பாமா, ஜோய்லின், பவி, ரஞ்சினி, ஜெயராம், கிருஷ்ண குமாரி (கனடா), செல்வராஜா, தெய்வேந்திரம் (சங்கீதா போட்டோ -படப்பிடிப்பாளர்), செல்வரட்டணம் (சுவிஸ்) ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2004) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகத் துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்கீதா போட்டோ,*
*1/7, புதுவீதி,*
*கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.* (39890)(29-11-18) தகவல்: குடும்பத்தினர்.



யாழ்-நகரில் முதல் தடவையாக...!

உணவுப் பிரியர்களுக்கோர் இன்ப அதிர்ச்சி!

நத்தார்-புதுவருட பண்டிகையை முன்னிட்டு

**கொசியில் உணவுத் திருவிழா**

டிசெம்பர் 25 முதல் ஒருவார காலத்துக்கு கொசியுடன் ஐக்கியமாயிருங்கள்!

★ எந்த வகை உணவு வேண்டுமானாலும்
★ எவ்வளவு வேண்டுமானாலும்
★ எப்படி வேண்டுமானாலும்

இன்சுவை உணவை அருந்தி ருசித்து மகிழுங்கள்

★ இந்திய,சீன உணவு வகைகள்
★ தந்தூரி உணவு வகைகள்
★ விதம் விதமான சூப் வகைகள்
★ ஐஸ்கிறீம் வகைகள்

400/=

இவை அனைத்தும் 400 ரூபாவில் [ஒருவருக்கு]

நேரம்: மாலை 6.00 மணிமுதல் நள்ளிரவு 12.00 மணிவரை. BUFFET முறையில் பரிமாறப்படும்.

உணவுப்பிரியர்களே வாருங்கள்! உண்டு மகிழுங்கள்!!

COSY HOTELS RESTAURANT

தங்ககம் - உணவகம்

15, சிறாம்பியடி ஒழுங்கை. (Off stanly Road)
யாழ்ப்பாணம். ☏ 222 5899. (C-39895)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

முத்தாக 25 - 12 - 1992



வித்தாக 21 - 11 - 2004

## செல்வி ஞானேஸ்வரன் பவ்சிகா

(தரம் 7 மாணவி, யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்)

எமது அன்புச் செல்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு கலந்து கொண்டும் ஆறுதல் கூறிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், இன்று (21.12.2004) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"நாகேஸ்வரி வாசம்"
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
(39918) (43-13-14)

சாமியே சரணம் ஐயப்பா!

## மகரஜோதி மண்டல விரத கன்னிச்சாமி சக்தி பூசை அழைப்பு

ஐயப்பன் அடியார்களே!

எமது இல்லத்தில் கன்னிச்சாமி பூசை இன்று (21.12.2004) நடத்த சுவாமி அருள் பாலித்துள்ளார். இப்பூசை வழிபாடுகள் கோண்டாவில் சபரீச தேவஸ்தான ஆதீனகர்த்தாவும் குரு சுவாமியுமான பிரம்மஸ்ரீ கி.அரிஹரசுதசர்மா தலைமையில் நிகழவுள்ளது. இப்பூசையில் அனைத்து ஐயப்பன் அடியார்களும் குருசுவாமிமார்களும் ஐயப்பன்மார்களும் கலந்து எம்மை ஆசீர்வதிக்குமாறு அன்போடு அழைக்கின்றோம்.

"சாமியே சரணம் ஐயப்பா"
க.கணேசலிங்கம் (ராசன்) சாமி
உரும்பிராய் கிழக்கு
(இந்துக் கல்லூரிக்கு முன்பாக).
(சி-39920) (29-43-13-14)


M.A.

## காமராஜர் பல்கலைக்கழகம் மதுரை

- ★ மேற்குறிப்பிட்ட பட்டப்பாடநெறிக்குப் பல்கலைக்கழகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
- ★ பதிவுகளை எமது நிறுவனத்தினூடாகச் செய்துகொள்ளலாம்.
- ★ பட்டதாரிகள் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

விரிவுரைகள் ஜனவரி 1 இல் ஆரம்பமாகின்றன!

விவரங்களுக்கு:
யாழ்.இணைப்பாளர் (காமராஜர் பல்கலைக்கழகம்)
புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்.
(39908) (29-43-13-14)


# கண்ணீர் அஞ்சலி

## அமரர் லயன் கிட்டினர் தர்மலிங்கம்

ஆசானாய் இருந்து அரும்பணி ஆற்றினீர். வடமராட்சி லயன்ஸ் கழகத்தில் அண்மையில் இணைந்தீர். இருந்தும் கழகச் செயற்பாடுகளில் அர்ப்பணிப்புடன் பங்குகொண்டு சமூகப் பணிகளைச் சிறப்புடன் செய்த பெருமகனே! உமது ஆத்மசாந்திக்காய் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தவரின் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

வடமராட்சி லயன்ஸ் கழகம்,
பருத்தித்துறை.
(சி-39940) (29-43-13-14)

# மரண அறிவித்தல்

## சொக்கலிங்கம் துரைஐயா

(கமலாஸ் ஸ்ரோர்ஸ், சந்திரன் பான்ஸி உரிமையாளர்)



ஆனைக்கோட்டை, சோமசுந்தரம் வீதியைப் பிறப்பிடமாகவும் சங்கரப்பிள்ளை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சொக்கலிங்கம் துரைஐயா அவர்கள் நேற்று (20.12.2004) திங்கட்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

தகவல்:
மனைவி, மக்கள்.
(39912)

# நோர்வேத் தூதரகம் நாளை திறக்கப்படும்

கொழும்பு,டிசெ.21

அந்திராக்ஸ் அச்சம் காரணமாகக் கடந்த வார இறுதியில் மூடப்பட்ட கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகம் நேற்றும் திறக்கப்படவில்லை.

தூதரகம் மூடப்படுவதற்குக் காரணமாக இருந்த - கடிதமொன்றில் வந்த - வெள்ளை நிறத்துகள்கள் ஆய்வுக்காக ஒஸ்லோவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதால், அதன் முடிவு தெரியும் வரை தூதரகம் மூடப்பட்டிருக்குமென்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

எவ்வாறாயினும், நோர்வேத் தூதரகம் நாளை புதன்கிழமை பெரும்பாலும் திறக்கப்படக்கூடுமென்று கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகத்தின் பேச்சாளரொருவர் தெரிவித்தார். ஒஸ்லோவிலிருந்து ஆய்வறிக்கை கிடைத்த பின்னர் தூதரகம் உடனடியாகத் திறக்கப்படுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

## தவறிவிட்டது

கே.கே.எஸ்.வீதியில் இணுவிலுக்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையில் பணப்பை ஒன்று, அடையாள அட்டை, வங்கிப் புத்தகங்களுடன் நேற்று (20.12.2004) திங்கட்கிழமை தவறவிடப்பட்டுள்ளது.

கண்டெடுத்தவர்கள் *உதயன் பணிமனையிலோ அல்லது சாந்தினி தொலைத் தொடர்பகம், கே.கே.எஸ். வீதி, இணுவில* (ஆஸ்பத்திரி முன்பாக) எனும் முகவரியிலோ ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(C/39897)

## தவறிவிட்டது

இல. 109/1, சனல் வீதி, திருகோணமலையைச் சேர்ந்த தர்மராஜா அனந்தசயனன் என்பவருடைய தேசிய அ. அட்டை (இல. 852493771V), மாவட்ட அ.அட்டை என்பன பலாலி வீதிக்கும் யாழ்.ஆரியகுளம் சந்திக்கும் இடையில் 19.12.2004 ஞாயிற்றுக்கிழமை இரவு தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

275, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
☎ 0777 252926
(39913)

## அவசர ஒன்றுகூடல்

இதுவரை நியமனம் கிடைக்கப்பெறாத இராமநாதன் நுண்கலைத் துறை டிப்ளோமா பட்டதாரிகள் 22.12.2004 புதன்கிழமை காலை 10 மணிக்கு *கே.கே.எஸ். வீதி கோண்டாவில் சந்தியில் உள்ள சனசமூக நிலையத்தில* ஒன்றுகூடவும்.

நியமனம் கிடைக்காது
பாதிக்கப்பட்ட மாணவர்கள்.
(39916)


ராஜா யாழ்ப்பாணம்

❏ சிம்பு (இருவேடம்),
❏ ஜோதிகா நடித்த



மன்மதன்

காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30மட்டும்(பு.நே.)

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

குளிரூட்டப்பட்டது.

❏ விக்ரம்,
❏ கிரன் நடித்த

காட்சி நேரம்: 10.30, 2.30, மட்டும் (பு.நே.)

ஜெமினி

தினசரி இரவு: 6.30 9.00 (பு.நே.) (ரீலீஸ)

ஆங்கிலப்படம் THE MUMMY RETURNS
(சி-39821)

நிரஞ்சனாஸ் சங்கானை

❏ பிரசாந்த் ❏ நவ்யா நடித்த

அழகிய தீயே (ரீலீஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக ❏ அர்ஜுன் (இருவேடம்) ❏ சாயாசிங் ❏ லைலா ❏ வடிவேல் நடித்த

தினசரி 11.00 3.00 7.00 10.00(பு.நே.)



ஜெய் சூர்யா

முற்பதிவுகளுக்கு நாகம்ஸ் சினிமா,
யாழ்.பெயின்ற் காடின், 326,K.K.S.றோட், யாழ்ப்பாணம்.
(C/39654)


# மரண அறிவித்தல்கள்

## தபேந்திரராஜா ஈவிலின் சரோமினி

(யா/கோப்பாய் நாவலர் வித்தியாலய மாணவி)



கோப்பாய் தெற்கு, பழைய பொலீஸ் நிலைய வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தபேந்திரராஜா ஈவிலின் சரோமினி அவர்கள் 19.12.2004 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் தபேந்திரராஜா - செபமாலை நாயகி தம்பதிகளின் பாசமிகு ஏக புத்திரியும் சரோன்யூட்ஸ் (யா/கோப்பாய் நாவலர் வித்தியாலய மாணவன்) அவர்களின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பொன்னுத்துரை, செல்லம்மா மற்றும் ஜேம்ஸ் - பாக்கியம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மகேந்திரராஜா (ராசன்)-கிறிஸ்துநாயகி, குலேந்திரராஜா (ரவி), வதனாதேவி (லண்டன்), புலேந்திரராஜா (சிவா-டென்மார்க்), ஜெனீந்திரராஜா (ஜெனி-பெல்ஜியம்), பிரான்சிஸ்பேரின்பநாயகி (பிரான்ஸ்), யூட் தவராஜா - அன்ரனிக்கா (கொழும்பு), யூட் றஜிதா ஆகியோரின் பாசமிகு பெறாமகளும் தவராஜா-ஜெகதீஸ்வரி, ரொனிக்கறலஸ் - ஜெகதாம்பாள், காலஞ்சென்ற கா.செ.கமலதாஸ் கொலஸ்ரிக்கா, ஜெயதாஸ் (கட்டார்) - கொலஸ்ரீனா, ரெம்சி டொறின் (கட்டார்) ஆகியோரின் அன்பு மருமகளும் ராஜா (கட்டார்), அன்ரனிராஜ், யாழினி, நிரஜா, நிரக்ஷனா, நிலக்ஷி, ரஜீவன், ஜெனுஷன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் புளோறியன்ற் இன் உடன்பிறவாச் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (21.12.2004) பி.ப. 2 மணிக்கு தென் கோப்பாய் புனித மரியன்னை ஆலயத்தில் நடைபெற்று, திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின் பூதவுடல் மரியன்னை ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*பழைய பொலீஸ் நிலைய வீதி,*
*கோப்பாய் தெற்கு.*

தகவல்:
பொ.தபேந்திரராஜா
(தந்தை).
(39917)(43-13-14)

## சிவசுப்பிரமணியம் குலேந்திரன்

(இலங்கை சினிமா கூட்டுத்தாபனம்)

சங்குவேலி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் குலேந்திரன் அவர்கள் 19.12.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கனகாம்பிகை (இராணி) அவர்களின் அன்புக் கணவரும் சங்குவேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.திருமதி சிவசுப்பிரமணியம் - சேதாம்பாளின் சிரேஷ்ட புதல்வரும் சித்தன்கேணியைச் சேர்ந்த காலஞ்சென்ற வ.க.நாகலிங்கம் (இளைப்பாறிய பிரதம தபால் அதிபர்), திருமதி திலகவதி அம்மாவினதும் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2004) அவரது இல்லத்தில் மாலை 3 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.விவேகானந்தன் (மைத்துனர்).
ஓய்வுபெற்ற முகாமையாளர்,
இலங்கை வங்கி, சித்தன்கேணி.
(39915)(43-13-14)

## சபாபதி கணேசரட்ணம்

(இளைப்பாறிய உத்தியோகத்தர் - செயலகம், யாழ்ப்பாணம்)



உடுவிலைப் பிறப்பிடமாகவும் கொல்லங்கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி கணேசரட்ணம் நேற்று (20.12.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி ராசம்மாவின் அன்புக் கணவரும் திருமதி சாந்தகுமாரி, ஞானரட்ணம் (சிமெந்துக் கூட்டுத்தாபனம்), திருமதி பக்தகௌரி அவர்களின் அன்புத் தகப்பனாரும் சண்முகரட்ணம், லோகநாதன் (தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை), செல்வராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் சாமினி, சுகந்தினி, செந்தூரன், செந்தில்குமரன், நந்தினி, வித்தியா, பிரசாந், விஜிகரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2004) அவரின் இல்லத்தில் நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அளவெட்டி வடக்கு.*

தகவல்:
ஞானரட்ணம் (மகன்).
(39909)(43-13-14)

## செல்வன் சுந்தரலிங்கம் சிவபாலன்



இணுவில் மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் சுந்தரலிங்கம் சிவபாலன் 19.12.2004 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சுந்தரலிங்கம் - இந்திராதேவி தம்பதிகளின் அன்பு மகனும் சிறிதரன் (சுவிஸ்), விஜயதரன் (சுவிஸ்), காலஞ்சென்ற சிறிரங்கன், சிறிராம் (இணுவில்), சிறிகுமார் (லண்டன்), சிறிதேவி (சுவிஸ்), சிறிரஞ்சனி (கனடா), சிறிரஞ்சன் (கனடா) ஆகியோரின் அன்புத் தம்பியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2004) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விவேகானந்தா வீதி,*
*மஞ்சத்தடி,*
*இணுவில் கிழக்கு.*

தகவல்:
நா.சுந்தரலிங்கம்
(தகப்பன்).
(39916)(43-13-14)




மாபெரும் மலிவு விற்பனை

வாடிக்கையாளர்களே! மிக அரிய தெரிவுகளுக்கும் சலுகைகளுக்கும் நாடுங்கள்:

21.12.2004 21.01.2005 வரை

சிவா ரெக்ஸ்ரைல்ஸ்

27, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
T.P: 222 5724
(39939)



## அரசின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த எழுச்சிக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான என்.ரவிராஜ், கே.சிவநேசன், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் உரையாற்றினர்.

இறுதியில் தென்மராட்சி மக்களின் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

அந்த மகஜரைத் தென்மராட்சி மக்கள் சார்பாகப் பொது அமைப்புக்கான ஒன்றியத் தலைவர் எஸ்.அருந்தவபாலன், தென்மராட்சிப் பிரதேச செலயர் எஸ்.ஸ்ரீநிவாசனிடம் கையளித்தார்.

இந்தப் போராட்டத்தில் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த அரச அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், மாணவர்கள், வர்த்தகர்கள், வங்கி ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பெரும் எண்ணிக்கையானவர்கள் கலந்துகொண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்தினர்.

இந்த மனித சங்கிலிப் போராட்டம் தொடர்சியாக நாளை புதன்கிழமை கைதடியிலும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொடிகாமத்திலும் நடைபெறவுள்ளது.

போராட்டத்தில் பங்குபற்றியோர் தாங்கியிருந்த சுலோக அட்டைகளில் காணப்பட்ட வாசகங்களில் சில வருமாறு:-

☆ எமது உயிர் போனாலும் உரிமையை இழக்கமாட்டோம்.

☆ தமிழர்களின் பலத்தைப் பெருக்குவோம்; யுத்தத்தை நிறுத்துவோம்.

☆ உடன்படிக்கையால் வாழ்ந்தவர் சிங்களவர், தாழ்ந்தவர் தமிழர்.

☆ எமது தலைவர் பிரபாகரனே! அவர் வழி செல்வோம். அவர் கரத்தைப் பலமாக்குவோம்.

☆ விடுதலைப் புலிகளுடன் பேசு! இடைக் காலத் தன்னாட்சி அதிகார சபையை வழங்கு!

☆ சர்வதேசமே! நீ வழங்கும் டொலர்கள் எமது உயிரைக் குடிக்கும் எமன்களே.

☆ சந்திரிகாவே! சமாதானத்துக்கான யுத்தம் செய்ய மீண்டும் சன்னதம் கொள்ளாதீர்!

☆ சிங்களத்தின் அதிகாரப் போட்டிக்கு தமிழ் மக்களா பலிக்கடாக்கள்.

(4-5-31-74-86-117)

## ஈ.பி.ஆர்.எல்.எவ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம் அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தம்பிராஜா சுபத்திரன், இ.துரைரட்ணம், தி.சிறீதரன், நா.நேசராசா, க.சிவராசா ஆகியோர் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் க.சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் பன்னிரண்டு மத்திய கமிட்டி உப்பினர்களுக்கு எதிராகப் பெற்றுக்கொண்ட இடைக் காலத் தடை உத்தரவு (வழக்கு இல.5578/விசேடம்) 13.12.2004 இல் இருந்து நீக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் சட்டரீதியான ஈ.பி. ஆர்.எல்.எவ் செயலாளராக சுரேஷ் பிரேமச்சந்திரனும் அதன் மத்திய குழுவாகப் பன்னிருவரும் நீதிமன்றத்தாலும், தேர்தல் ஆணையாளராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, செயலாளர் நாயகத்தினுடைய அல்லது மத்திய குழுவினுடைய அனுமதி இல்லாமல் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் பெயரை விளம்பரப்பலகையிலோ வேறெவ்விதமாகவோ பயன்படுத்துவது நீதிமன்றத்தை அவமதிப்பது போலாகும்.

எனவே, யாழ் மாவட்டத்தில் இருக்கும் வரதர் குழு அலுவலகங்களில் உள்ள ஈ.பிஆர்.எல்.எவ்வின் விளம்பரப்பலகையை உடன் அகற்றுமாறு தங்களைக் கோரும்படி மத்திய கமிட்டி சார்பாக செயலாளர் நாயகம் யாழ்.மாவட்டப் பொறுப்பாளராகிய என்னைப்பணித்துள்ளார்.

எனவே, இந்த விளம்பரப்பலகைகளை அகற்றுவதுடன், ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் பெயரைக்கொண்ட கடிதத் தலைப்புக்கள், இறப்பர் முத்திரை போன்றவற்றைப் பாவிக்க வேண்டாம்எனவும்தங்களைக்கேட்டுக்கொள்கின்றேன்.

ஈ.பி.ஆர்.எல்.எவ் என்ற பெயரில் தாங்கள் யாராவது இயங்க விரும்பினால் யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மாவட்டப் பொறுப்பாளராகிய என்னையோ அல்லது செயலாளர் நாயகத்தையோ சந்திக்கும்படி வேண்டுகின்றேன்.

உங்கள் விரைவான ஒத்துழைப்புடன் கூடிய செயற்பாடு, எமக்கிடையில் மோதலையும் முரண்பாடுகளையும் குறைக்கும் என நம்புகின்றேன் - என்றும் உள்ளது.

## வெள்ளத்தினால். பாதிப்புற்றோருக்கென

# எச்.என்.பி. அஷ்யூரன்ஸ் நிறுவனத்தினர் உதவிப்பொருள்கள் சேகரிக்கும் இடங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.21

வடக்கு - கிழக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் எச்.என்.பி. அஷ்யூரன்ஸ் நிறுவனம் மேற்கொண்டுவரும் உலர் உணவு மற்றும் உடுபுடைவைகளை சேகரிப்பதற்கான இடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை, கரவெட்டி நெல்லியடி தங்கஸ்தான் கட்டடத்தில் உள்ள வரையறுக்கப்பட்ட கூட்டுறவு காப்புறுதி நிறுவனம், யாழ்.கஸ்தூரியார் வீதியில் உள்ள கூட்டுறவுக் காப்புறுதி நிறுவனம், மானிப்பாய் பரிஸ் லியோ கழகம், பருத்தித்துறை பிரதான வீதியில் உள்ள நாதன் கம்பியூட்டர் சென்ரர் அன் கொமினிகேஷன் ஆகிய இடங்களில் உலர் உணவு, மற்றும் உடுபுடைவையை ஒப்படைத்துஉதவுமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த உதவி பெரிதும் பயன்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் உதவிப்பயணம்'' என்ற தொனிப்பொருளில் மேற்படி உதவித்திட்டம் முன்னெடுக்கப்பபடவிருக்கிறது.

இந்த உதவிப் பணிகள் தொடர்பாகவே விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு ஒன்று நேற்று யாழ்.3ஆம் குறுக்குத் தெருவில் உள்ள அலுவலகத்தில் நடைபெற்றது. சீ.வி.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டில் மேற்படி உதவித் திட்டங்கள் தொடர்பாக விளக்கப்பட்டது.

கிழக்கில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு அரச, அரசசார்ற்ற நிறுவனங்களிடமிருந்து போதிய உதவிகள் கிடைக்கப்பெறாமல் அல்லலுறும் எமது மக்களுக்கு, எமது மக்கள் வழங்கும் உதவிகளை ஒருமுகப்படுத்திச் சேகரித்து உரியமுறையில் கொண்டுசென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக மக்களால் உருவாக்கப்பட்டதே இவ் அமைப்பாகும்.

பொதுமக்கள் அனைவரும் இந்த மக்களுக்கு வெள்ளத்தினால் ஏற்பட்டிருக்கும் துயரைத் துடைப்பதற்கு உதவவேண்டும். அத்துடன், பொது அமைப்புகள் உதவிப் பொருள்களைச் சேகரித்து பிரதேச மட்டத்தில் இதற்கென நியமிக்கப்பட்டவர்களிடம் கையளிக்க வேண்டும் என்று சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இதேவேளை -

இன்று தொடக்கம் இந்த உதவிப் பொருள்களைச் சேகரிக்கும் பணி முழுவீச்சில் நடைபெறவுள்ளது.

யாழ்.பிரதேசத்தில் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் அமைப்பு, தமிழ் ஆசிரியர் சங்கம், கடற்றொழிலாளர் சமாசம், யாழ்ப்பாணம் வணிகர் கழகம் ஆகியனவும் -

நல்லூர் பிரதேசத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனுடன் யாழ்.பல்கலைக்கழகச் சமூகமும் -

சங்கானை பிரிவில் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதனுடன் வட்டுக்கோட்டை இந்து இளைஞர் சங்கமும் -

உடுவில், தெல்லிப்பழை பிரிவுகளில் யாழ். கல்வியியற் கல்லூரி மற்றும் வணிகர் கழகங்களும் -

கோப்பாயில் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனுடன் கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினரும் -

வடமராட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசனுடன் தேசிய எழுச்சிப் பேரவை மற்றும் வணிகர் கழகங்கள் என்பனவும் -

காரைநகரில் அப்பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினரும் -

சாவகச்சேரியில் பொது அமைப்புக்களின் ஒன்றியம், வணிகர் கழகம் என்பனவும் - சண்டிலிப்பாயில் தமிழ் மாணவர் ஒன்றியமும் -

தீவகத்தில் தீவக நலன்புரிச் சங்கம், கடற்றொழிலாளர் சங்கம் என்பனவும் -

அச்சுவேலியில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் தனியார் கல்வி நிறுவன ஒன்றியம், வணிகர் கழகம் என்பனவும் -

குடாநாட்டில் உதவிப் பொருள்களைச் சேகரிக்கும் பணியில் ஈடுபடவிருக்கின்றன.

உதவி வழங்கும் பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புகள் யாழ்ப்பாணம் 3 ஆம் குறுக்குத் தெருவில் 43ஆம் இலக்கத்தில் இதற்கென அமைந்துள்ள அலுவலகத்துடன் அல்லது 021222 3739 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறும் கேட் கப்பட்டுள்ளது.

(4-7-86)

## தலைநகர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்தவிதமான அரசியல் நோக்கமும் இன்றி - அரசியல் கட்சிப் பேதம் இன்றி - ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகவே" இப்பேரணி நடத்தப்படவுள்ளது.

இப்பேரணியில் பல்வேறு அரசியல் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் கலந்துகொள்கின்றன. ஓய்வுபெற்ற நீதிவான்கள், சட்டத்தரணிகள், புத்திஜீவிகள், பல்கலைக்கழகச் சமூகத்தினர், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், திரைப்பட - சின்னத்திரை கலைஞர்கள், மகளிர் அமைப்புகளின் பிரமுகர்கள் எனப் பல்வேறு அமைப்புகளையும் நிறுவனங்களையும் ஸ்தாபனங்களையும் சேர்ந்தோர் ஜனநாயகத்தைக் காக்கும் இப்போராட்டத்தில் பங்குபற்றுகின்றனர்.

கடந்த 13 ஆம் திகதி ஹங்குராங் கெத்தையில் புறப்பட்ட மகளிர் பிரார்த்தனைப் பாதயாத்திரை அணியினர் இன்று காலை 10 மணிக்கு களனி விகாரையில் இருந்து தமது இன்றைய யாத்திரையை ஆரம்பிப்பார்கள்.

கொழும்பு மாநகரசபை மைதானத்தில் இருந்தும் பகல் ஒரு மணிக்கு இரண்டு திசைகளில் இருந்து பேரணி ஆரம்பமாகும். அதேவேளை, பேலியகொடையிலிருந்து மற்றும் ஒரு பேரணி பகல் 2 மணிக்கு ஆரம்ப மாகும்.

இவை அனைத்தும் பிற்பகல் 2 மணிக்கு ஹைட்பார்க் மைதானத்தை வந்தடையும். அங்கு பொதுக்கூட்டம் ஒன்றும் நடத்தப்படும்.

இதேவேளை, எங்களுடைய அமைதி வழிப்போராட்டத்தைக் குழப்பியடிக்கவும் கலவரங்களை ஏற்படுத்தவும் அரசு சில இரகசியத் திட்டங்களை வகுத்துள்ளது.

பெயரளவில் - நாடெங்கிலும் இருந்து நாற்பதாயிரம் பட்டதாரிகளை அழைத்து - கூட்டம் நடத்துவதாகக் கூறிக்கொண்டு ஏட்டிக்குப் போட்டியாகப் பொதுக்கூட்டம் ஒன்றையும் அரசு ஏற்பாடு செய்துள்ளது. இக்கூட்டத்தில் பட்டதாரிகள் மட்டும்தான் கலந்து கொள்கின்றனரா என்பதும் சந்தேகமாகவே இருக்கின்றது.

எமது அமைதிப்போராட்டத்தைக் குழப்பியடித்து அனர்த்தங்களை ஏற்படுத்துவதே அரசின் திட்டம் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் கூறினார்.

ஐ.தே.கவின் அமைதிப் பேரணி இன்று இரண்டு திசைகளில் புறப்படவிருக்கும் கொழும்பு மாநகரசபை மைதானத்திற்கு அருகில் விகாரமாதேவி பூங்கா பகுதியில் அரசுத் தரப்பின் கூட்டம் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

பட்டதாரிகள் நாற்பதாயிரம் பேருக்கு அரசு சேவையில் நியமனம் வழங்கப்படும் என அறிவித்திருந்த அரசு, அதற்காகப் பல்லாயிரக் கணக்கானோரைத் தெரிவுசெய்து அவர்களுக்குப்பயிற்சி அளித்துவந்தது.

அவர்களையே நிரந்தர நியமனம் தொடர்பாகப்பரிசீலனை செய்வதற்காக இன்று விகாரமாதேவிப் பூங்காவுக்கு வருமாறு அரசுஅழைத்திருக்கிறது.

இப்படி அருகருகே இருதரப்பினரும் குவியும்போது குழப்பங்கள் ஏற்பட அதிக வாய்ப்புண்டு என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

(எ-க-4-6)

## எஸ்.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலஞ்சென்ற சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையார் ஆகியோரின் சிவில் உரிமைகள் பறித்தெடுக்கப்பட்டவேளையில் எமது தலைவர் காலஞ்சென்ற சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களுக்குப் பரிந்து பேசினார்; குரல் எழுப்பினர்.

இன்று இதேபோலான ஒரு சம்பவம் நிகழ்த்திருக்கிறது. திஸநாயக்கவின் சிவில் உரிமைகள் பாதிக்கப்படுவதை இ.தொ.காங்கிரஸ் ஒருபோதும் ஆதரிக்கமாட்டாது.

பல்வேறு கட்சிகள், இன்று இடம்பெறும் எஸ்.பிக்கு ஆதரவான கூட்டத்தில் கலந்து கொள்கின்றன. ஜனநாயக ரீதியில் இ.தொ.காவும் அதில் கலந்துகொள்வதில் எவ்வித தப்புமில்லை. இதன் அடிப்படையிலேயே இன்றைய கூட்டத்தில் நாமும் கலந்துகொள்ள கருதியுள்ளோம் - எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-க)

## பேச்சுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என் றும் -

பாலசிங்கம், எரிக்சொல்ஹெய்மிடமும் ஹான்ஸ் பிரட்ஸ்கரிடமும் தெரிவித்தார் என அறியவந்தது.

இந்தப் புதிய நிகழ்ச்சி நிரலின் உள்ளடக்கம் குறித்து மதியுரைஞர் பாலசிங்கத்திடம் வினவியபோது அவர் அதனை வெளியிட மறுத்து விட்டார்.

தலைவர் பிரபாகரன் பரிசீலித்து முடிவெடுக்க வேண்டிய அம்சங்கள் அவை. அவற்றை நான் வெளியிடுவது பொருத்தமல்ல - என்றார் அவர்.

இலங்கை அரசின் சார்பில் அதன் சமாதானச் செயலக செயலாளர் நாயகம் ஜயந்த தனபால இந்த நிகழ்ச்சி நிரலை தெரியப்படுத்தினார் என்று குறிப்பிட்டு நோர்வே அனுசரணைக் குழுவினர் அதனை மதியுரைஞர் பாலசிங்கத்திடம் வெளியிட்டனர் எனத் தெரிகின்றது.

எனவே, பிரேரிக்கப்பட்டுள்ள இந்த நிகழ்ச்சி நிரல் ஜனாதிபதி சந்திரிகாவினால் முற்றுமுழுதாக அங்கீகரிக்கப்பட்டதா என்பது குறித்தும் - அதன் உள்ளடக்கம் குறித்தும் -

புலிகள் தரப்புக்கு அந்த நிகழ்ச்சிநிரல் மயக்கங்களைத் தரக்கூடியதாகவே அமைந்துள்ளது என்றும் வேறுவட்டாரங்கள் குறிப்பிட்டன.

பேச்சை மீள ஆரம்பிப்பதற்கு இதுவரை முட்டுக்கட்டையாக இருந்த அம்சங்களை முற்றாகக்களையும் விதத்தில் புதிய நிகழ்ச்சித் திட்டம் அமைந்திருப்பதான தகவல் எதுவும் கிட்டவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

தலைவர் பிரபாகரனுக்கு அரசு தரப்பில் பிரேரிக்கப்பட்டுள்ள இந்த நிகழ்ச்சித் திட்டம் குறித்து மதியுரைஞர் பாலசிங்கம் உடனடியாகத் தகவல் தெரிவிப்பர் என எதிர்பார்க்கப்பட்டது.

நேற்று மதியுரைஞர் பாலசிங்கத்தையும் அவரது துணைவியார் அடேல் பாலசிங்கத்தையும் அவர்களது லண்டன் இல்லத்தில் சந்தித்த நோர்வே அனுசரணையாளர்கள் இருவரும் அவர்களுடன் மூன்று மணிநேரம் விரிவாகக் கலந்துரையாடினர்.

அரசுத் தரப்பில் பிரேரிக்கப்பட்டுள்ள புதிய நிகழ்ச்சித்திட்டம் உட்பட பல்வேறு விடயங்களை நோர்வே அனுசரணைக் குழுவினர் பாலசிங்கத்துக்கு எடுத்துரைத்தனர்.

கொழும்பிலும், புதுடில்லியிலும் கடந்த வாரத்தில் தாங்கள் நடத்திய பேச்சுக்களின் விவரங்களை அவர்கள் பாலசிங்கத்துக்கு விளக்கினர்.

பாலசிங்கம் தம்பதியர் வழங்கிய மதிய போசன விருந்திலும் அவர்கள் கலந்துகொண்டனர். (க-4-6)


## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
கந்தையா சிவலிங்கம்

தோற்றம் 20-10-1938 மறைவு 21-12-2000

திதி: 21.12.2004

இன்று (21.12.2004) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
சி. சுதர்சன்
(பாப்பா வெல்டிங் வேக்ஸ்).

169/6, முதலாம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர். (சி-39943)

## இரசாயனவியல் கருத்தரங்கு

அநேக மாணவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க 2 ஆவது தடவையாக

அணு ஒபிற்றல்களின் கலப்பாக்கம்

22.12.2004 Wed. 1.30 p.m.

கட்டணம் 50 /=

By: அன்பழகன் B.Sc.

★ நிறுவனத்தில் கற்காத வெளிமாணவர்களும் கலந்துகொள்ளலாம்.
★ மாதிரி கடந்த கால வினாக்களும் செய்யப்படும்.

NEW SCIENCE CENTRE
யாழ்ப்பாணம்.
(சி-39941)

## மரண அறிவித்தல்

### அருளம்பலம் ஸ்ரீஸ்கந்தராசா
(ஆவரங்கால் ஸ்ரீ)

ஆவரங்கால் மேற்கைப் பிறப்பிடமாகவும் தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட அருளம்பலம் ஸ்ரீஸ்கந்தராசா நேற்று (20.12.2004) திங்கட்கிழமை கொழும்பில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் சிவகாமசுந்தரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஆவரங்கால் மேற்கு அருளம்பலம் - இராசம்மா தம்பதிகளின் ஏக புத்திரனும் மந்துவில் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற விதானையார் கந்தையா - இராசம்மா தம்பதிகளின் மருமகனும் செந்தூரன் (லண்டன்), சிந்துஜா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் சூரியகுமார் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - நகரசபை, சாவகச்சேரி), ஞானச்சந்திரன் (மக்கள் வங்கி, வல்வெட்டித்துறை), ராதா ஆகியோரின் அன்பு மைத்துனியும் தனபாக்கியம் (பிரதேச செயலகம், சாவகச்சேரி), கமலேஸ்வரி (ஆசிரியர், சரசாலை ஸ்ரீகணேசா), நித்தியானந்தன் (ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் கல்கிசை மகிண்டா மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று (21.12.2004) செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு தெஹிவளை - கல்கிசை இந்துமயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி சிவகாமசுந்தரி ஸ்ரீஸ்கந்தராசா (மனைவி)
122/4, ¼ காலி வீதி,
தெஹிவளை.

க.நித்தியானந்தன் (சகலன்)
ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி
ஆசிரியர் வீதி, பேரியரசடி, சாவகச்சேரி.
(சி-39942)(29-13-14)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.